ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர், B.A.

அவர்களின்

அன்பளிப்பு

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

சிவமயம்.

காசிநகர்ப்பூர்வீகராய்

யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தில்வீற்றிருந்த

பிரமஸ்ரீ. வரதராச கவிராசர் இயற்றிய

# சிவராத்திரிபுராணம்.

இது

மேலைப்புலோலிச்சைவவித்தியா மனேசர்

ஆ. ஆ. சிதம்பரப்பிள்ளையும்,

சாவகச்சேரி நாமகள்விலாசபுத்தகசாலை

ஆ. மூத்ததம்பிப்பிள்ளையும்

கேட்டுக்கொண்டபடி,

புலோலிநகர்

வ. குமாரசுவாமிப்புலவரால்

பலபிரதிகளைக்கொண்டு லிகிதவழுக்களையப்பட்டு

அருப்பதப்பொருள்விளக்கத்துடன்

சுத்தப்பிரதியாக

சென்னைநகர்

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

சாதாரண௵ ஆவணிமீ

REGISTERED COPYRIGHT

# சிறபபுபபாயிரம்.

யாழ்ப்பாணம்

மயில்வாகனப்புலவரியற்றியது.

பரத் ராசனாய ரசல ராசன்மகள் பங்க னன்புதரு பண்புசேர்
விரத ராசசிவ நிசியி னீள்சரித மிகவி ளங்கிட விளம்பினான்
கரத ராசனைய மொழிய ரங்கனருள் கருணை மாரிநிகர் பருணிதன்
வரத ராசன்மறை வாண ராசன்மிகு மதுர வாசகவி ராசனே.

யாழ்ப்பாணம்

சின்னத்தம்பிப்புலவரியற்றியது.

மைத்தவிடப் பணிப்பணியான் வராசனமுஞ் சராசனமு மலையாக் கொண்ட
சித்தனுயர் சிவநிசிமான் மியமதனைச் செந்தமிழாற் றெரித்தல் செய்தா
னத்தகைய பாரத்து வாசகோத் திரனரங்க னருளு மைந்தன்
சத்தபுரி களிற்காசி நகர்வரத பண்டிதன்முத் தமிழ்வல் லோனே.

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௬௧ | ௧0 | இரசதக்சிரி | இரசதக்கிரி |
| ௫௫ | ௨௮ | ஷுராங் | ஹுரங் |
| ௯0 | ௨௬ | சிடைச்சி | கிடைச்சி |
| ௯௬ | ௧௧ | மைச்ச | மச்ச |
| ௮௬ | ௨௪ | விவவரை | விவரை |
| ௮௮ | ௬௭ | அனைய | அனைய |

சௌமினிச்சருக்கம் ௪௭ ம் செய்யுளில் பற்றைநேர்கரம் என்பதற்கு செங்காந்தட்பூப்போன்றகை எனப்பொருள்கொள்க.

சிவமயம்.

# சிவராத்திரிபுராணம்.

## காப்பு.

தூங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா யிருப்பானை யுரகவேந்தன்
றாங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயிலமானைப் [டுப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றன் றளித்தானைப் பசும்பொற் றோட்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து கரத்தானைப் போற்றல் செய்வாம்.

ஆனைமுகத்தானை-கயமுகாசுரனை. சயிலமான்-பார்வதி.

## கடவுள்வாழ்த்து

### நடராயர்.

சீர்தந்த கமலமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தேவர் கோவுங்
கூர்தந்த நகப்புலிக்காற் றவமுனியும் பதஞ்சலியுங் குழைந்து போற்ற
வார்தந்த கலசமுலை மலைவனிதை விழிகளிப்ப மன்று ளாடுங்
கார்தந்த மணிமிடற்றுக் கடவுடிரு வடியிணைகள் கருத்துள் வைப்பாம். (க)

### சிவகாமியம்மை.

கடிகமழ்கட் கமலமலர்ச் சுட்டிகிரிக் கரனொருகு காமதாகிப்
படியிடந்து மறிவரிய பதப்பவள மலைமருங்கிற் படரும் பச்சைக்
கொடிகொடிய பவக்கடலிற் குளித்தழுந்தா தின்பமுத்தி கூடும் வண்ண
மடியவருக் கருள்புரியுஞ் சிவகாமி யம்மைபதத் தன்பு கூர்வாம். (உ)

மலர்க்கண் கிரிக்கரன் என்றுபிரிக்க. பவளமலையென்றது ஈசனை.

### விநாயகர்

சொற்பகர்நா வினுக்கடங்கா வளங்குலவு தில்லைமன்று துலங்கு கோயிற்
பொற்பகலாக் குடதிசைக்கோ புரத்தமரர் கணத்தலைவர் போற்ற மேவி
யற்பகனுண் மலரிறைத்துத் தொழுமடியார் வேட்டவர மளித்த லாலே
கற்பகநா மம்பெறுமே ரம்பனையோர் கொம்பனையுட் கருதி வாழ்வாம். (ங)

### சுப்பிரமணியர்.

சூராட்டுப் பயில்சயிலத் துணைமுலைத்திண் டகுவியர்மை தோயும் வாட்க
ணீராட்டுப் பெறமறநீ டவுணருடற் புலவலகை நிறையத் தேக்கிப்
பாராட்டுத் தரவடிவேற் படைபணித்த கரனரன்பார்ப் பதிக்குச் செல்வச்
சீராட்டுப் பிள்ளையெனு முருகன்முரு கவிழ்மலர்த்தாள் சென்னி சேர்ப்பாம்.

சூர்-தெய்வப்பெண்கள். தகுவியர்-அசுரமாதர்.

இரங்குன்றன் றஞ்சநமக் கென்றுமக வான்முதலோ ரிரப்ப நீண்ட
கரங்குன்றம் படைத்தனைய கரிமுகத்தோ னரிமுகத்தோன் கதங்கொள் சூரன்
வரங்குன்ற மயிலுகைத்தங் கயிலெடுத்த மலர்க்கரத்தோன் மஞ்சு துஞ்சும்
பரங்குன்றத் திருந்தசெவ்வே ளடிக்கடிச்செம் பதுமமலர் பணிதல் செய்வாம்.

ஈரலைவா யசங்கவரப் பிணங்கிடக்குங் களத்தமர்கீத் தெய்தி னொய்தின்
வாரலைவா யுறுமொருமா வரையோரொன் றீரிரண்டா வகிர்ந்த வேலோன்
வேரலைவா யழிக்குமென்றோட் கவின்படைத்த வள்ளிசுர வேழத்தோடு
சீரலைவாய் வருமடிக ளடியரடிப் பொடிமுடியிற் சேர்த்தல் செய்வாம். (சு)

வேரல்-மூங்கில். சுரவேழம்-தெய்வயானை.

பெருவாவிக் கயனயனக் குறத்திமுகாம் புயமலர்த்தும் பெட்பி னென்று
மொருவாவி னன்குடிலைப் பொருள்விரித்துத் தாதைதனக் குரைத்தோ னூ
மருவாவி நன்குடிஞைப் புன்மலர்த்தே னுடனளவி வயற்குப் பாயுந் (ர்கா
திருவாவி னன்குடிவாழ் செவ்வேடன் சேவடிகள் சிந்தை செய்வாம். (எ)

ஒருவா இனன்-நீங்காதசூரியன்.

பாரகத்தும் விசும்பகத்தும் பயின்முனிவ ரிமையவர்தம் பழங்க ணீங்கத்
தாரகத்தொன் மறையுருவாய் மருவுசிவ சத்திதரு சத்தி யால்வெஞ்
சூரகத்தைத் துளைபடுத்தி யொருதோகை யேறியிரு தோகைமாரோ
டேரகத்தி லிருந்தபிரா னென்னகத்தி லிருக்கவிடர்க் கிடமின் றென்பால்.

பழங்கண்-துன்பம். சிவசத்தி-உமை. வேல்கொடுத்தது சிவனெனினும் ஒற்றுமைபற்றிச்சிவசத்தி தருசத்தியாலென்றார். "வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக், கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப், பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங், கோல்கொடுத் தாயன்னை யேயெனக் கேதுங் கொடுத்திலையே,, என்றுபிறர்கூறியதுங்காண்க.

நீடலூறழ் கருங்கனங்கள் படிந்துமுழ வெனவதிர விரந்து தும்பி
பாடல்புரி தரத்தழைத்த பாசடைச்சந் தனப்பணையிற் படருஞ் செய்ய
கோடலலர் விளக்கேந்தக் குலமயினா டகம்புரியுங் குன்று தோறு
மாடல்புரி முருகனிரு சரணமலர் பரவிவினை யகற்றி வாழ்வாம். (கூ)

உருத்தணியா வருமசுர ருடலுணிக்கு நெட்டிலைவே லூரவோய் துன்பக்
கருத்தணியாப் பெருவெயி லூட் டிழைத்திளைத்த களையகலக் கருணைக்கண்ட
திருத்தணியார் கழனிழற்கீ ழென்றும்வழி படுமடியா ரிதயத் துள்ளுந் (ய
திருத்தணியாம் பதியகத்தும் வாழ்குமர குருபரன்றாள் சிரமேற் கொள்வாம்.

கருணைக்கண் தந்து இருத்து எனப்பிரிக்க.

பொருவினறு மலர்பொதுளுந் தண்டலைசூழ் கதிரைநகர்ப் புனிதன் பாத
முருகியுளத் தழுத்திவினை நீறழுத்து மாறெழுத்து முணர்ந்து நாவின்
முருகசர வணபவசண் முககுகவென் றனுதினமு மொழிவோர் தங்கண்
மருமருவு கமலமல ரடிமுடியின் மீதுவைத்து வணங்கல் செய்வாம். (கக)

## திருநந்திதேவர்.

செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற் றனிவிழியுந் திண்டோ ணான்குங்
கையதனிற் சுரிகைமழுப் பிரம்புகவை யடிச்சிறுமான் கன்றுந் தாங்கி
வையமுத லனைத்துலகுந் தொழுங்கயிலை மலைகாக்க மதியஞ் சூடு
மையனருள் பெற்றநந்தி யடிக்கமல முடிக்கமல மாக வைப்பாம். (கஉ)

முடிக்கு அமலமென்றும்பிரிக்க.

## சரஸ்வதி.

காரதிருங் கயிலைமலைக் கண்ணுதன்முப் புரமெரிக்கக் கருது மந்நா
ணீரதிகந் தருந்தரங்கத் தடங்கடல்சூழ் திடம்புடவி நெடுந்தே ரூர்ந்த

சாரதிதன் திருநாவி லடியருளத் தினிலிருக்குந் தவள மேனிப்
பாரதிசெம் பதப்பதுமத் துணைப்போது முப்போதும் பரவல் செய்வாம். ()
புடவித்தேரூர்ந்தசாரதி-பிரமா.

## சண்டேசுரர்.

நீளிரண்டு கரத்தெடுத்த நிறைகுடப்பான் முதற்புனித நீரி லாட்டி
வாளிரண்டு நிகர்த்தவிழி மலைமகள்கேழ் வனைவழுத்தி மலர்கள் சாத்தி
யாளிரண்டு பதமளித்தென் றருச்சிக்கு மமையமதி லவஞ்செய் தந்தை
தாளிரண்டு மறவெறிந்த சண்டேசர் முண்டகப்பொற் றுளிற் றுழ்வாம். ()

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.

வெங்குருவிற் கவுணியர்தங் குலத்துதித்து மீனவன்றன் வெப்புங் கூனு
மெங்குமிசை பெறமாற்றி யமணரெண்ணு யிரர்கழுவி னிறக்க வேற்றிப்
பங்கமிலென் பரிவையுருப் படைத்துயிர்பெற் றெழுப்பதிகம் பாடி மேன்மை
தங்குமறைத் திருஞான சம்பந்தன் றாட்டுணைக டலைமேற் கொள்வாம்.(கரு)
வெங்குரு-சீர்காழி.

## சுந்தரமூர்த்திநாயனார்.

மங்குனிறத் திருநெடுமால் வளையெயிற்றுப் பெருங்கேழல் வடிவந் தாங்கி
யங்கணில முழுதுமுழு தறிவரிய கமலமல ரடிகள் சேப்பச் (ற்
சங்கணிகைக் குதலைமொழிச் சரவைவிழிப் பரவையென்பா டன்பா லன்பா
பொங்கிருளிற் சந்தரனை நடப்பித்த சுந்தரனைப் போற்றல் செய்வாம். (கசு)
சர வை விழி-அம்பனையகூர்ந்தகண், சந்து-தூது,

## திருநாவுக்கரசுநாயனார்.

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச் சென்றமர்செய் காம னைமைம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை யத்தியதழ் புனைந்து போர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிக மிசைத்தமிழிற் சிறக்கப் பாடு
நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன் னுட்டரசு நல்கு மன்றே. (கஎ)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

பெருவாத பித்தகபப் பிணிக்குடையு முடற்சுமக்கும் பிறந்தை நீக்கி
யொருவாத சிவகதியி னுரிமைபெற நறவமல ருமிழுஞ் சோலை
மருவாத மனைந்துலவு மன்றுடையாற் குக்கோவை மாலை சாத்துந்
திருவாத வூரடிக ளடிகள்படி யுறவணங்கிச் சென்னி சேர்ப்பாம். (கஅ)
பிறந்தை-இயல்பு.

## தில்லைமூவாயிரவர்.

செம்மையா ரழலொருகை துடியொருகை தரித்துமன்றிற் றிருக்கூத் தாடு, மெம்மையா ளுடையபிரான் யாமவரி லொருவரென்றன் றிசைக்கப் பெற்ற, மும்மையா யிரமுனிவர் பொற்பொதுவிற் றிருப்பணிகண் முயன்று செய்வோர், தம்மையா யிரமுறைகை தொழுதனையோர் தாட்டுணைக டலைமேற் கொள்வாம். (கக)

மும்மையாயிரமுனிவர்-தில்லைமூவாயிரவர்.

## சிவனடியார்.

பொய்விரவு பவநீறு படப்புரிவெண் டிருநீறு பூசிக் கண்டி
கைவிரவு மணியினரா யஞ்செழுத்து முணர்ந்துமனக் களங்க நீங்கி
மெய்விரவு மறைவரம்பி னிலேகடவா தொழுகியருண் மேன்மை பூண்ட
மைவிரவு கண்டர்தொண்டர் மலரடிகள் சிரத்திருத்தி வழுத்தல் செய்வாம்.

கண்டிகைவிரவும்அணியினராய் என்றுபிரிக்க.

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

---

## பாயிரம்.

கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத் தறிஞர்திருக் கடைக்க ணோக்கி
முந்தவுரைத் தனர்புலரு மாயினுநீ யாகமநூன் மொழிவ ளாமற்
பந்தமறுத் திடுசிவராத் திரிவிரத சரிதைதனைப் பாடு கென்னச்
செந்தமிழி னுயர்விருத்தப் பாவதனாற் றிரட்டியொன்றாச் செப்ப லுற்றேன்.

வீணிலிவன் றனதுமடம் வெளிப்படையாச் செய்தனனால் வித்தின்பாகி
நாணிலனென் றெனையுலகி னுவலர்க ணகுவரதை நாடிச்சற்றும்
பேணிலனிம் மலனிரவின் பெருமையெடுத் துரைக்குமிந்தப் பேறு கூறு
மேணிலனெற் சிவபதத்து ளிருத்துமெனும் விருப்புளத்தை யீர்த லாலே. (உ)

ஈர்தல்-அரிதல்.

வேறு.

அரியநற் பாத விதிமுறை வழுவா தாடுந ராடல்கண் டுவப்போர், விரிசி
னைத் தருவில் வாழ்கவி நடமுங் கண்டுள விருப்பொடு வியப்பார், தெரிதமி
ழ்ப் புலவ ரமிழ்தெனத் தெருட்டுஞ் செய்யுள்கேட் டகமகிழ் சிறந்தோ,ருரி
யரென் புன்சொற் கவிசெவி யேற்றுள் ளுவப்புறற் கென்பதா லுரைத்தேன்.

முற்கவி-வானரம்.

பாயிரம் முற்றிற்று.

ஆக விருத்தம் உங.

---

## சிவராத்திரியுற்பவச்சருக்கம்.

திலக வாணுதற் கலைமகள் செறிதலாற் றினமு
மிலகு நான்மறைத் தொனிநனி யிரைத்திடு தலினு
லலகிலா வுயிர் படைக்குநான் முகற்கிலை யாமென்
றுலகு போற்றுநை மிசவன வளஞ்சிறி துரைப்பாம். (க)

மண்ட லந்தனைச் செங்கனிப் பவளவாய் மடுத்தன்
றுண்ட முண்டகக் கட்புரு டோத்தம னுறைவை
குண்டு திமிர்நண்டழற் கண்ணினன் குலவுல கொப்பென்
றண்டர் யாவரும் புகழ்வது நைமிசா ரணியம். (உ)

முனிவர் முன்னைநாண் முண்டகத் தவிசினன் முகனைப்
புனித மாதவம் புரிந்தியாம் வைகிடப் புவியி
லினிய நற்றல மியம்புதி யென்னவெண் கமல
வனிதை கேள்வனோர் நுண்ணுதித் தருப்பையை வாங்கி. (௩)

இருகை யால்வளைத் துருட்டியீ திறுத்திடு மிடத்திற்
பொருவின் மாதவம் புரிதிரென் றுரைத்திடப் போனார்
கருது மக்குசை தங்கிய கானமற் றதனாற்
றிருவு றைந்திடு நைமிச வனமெனச் சிறந்த. (௪)

இறுத்திடும்-தங்கும். குசை-தருப்பை.

துன்று கொன்றையாற் பசுங்கொடி விரவலாற் சுடுதீ
யென்று மேவலாற் கடுவிடப் பணிகளெய் துதலாற்
கன்று மானுகண் டுறைதலாற் கதிர்மணிக் கனக
மன்று ளாடிய பரம்பர னிகர்க்குமவ் வனமே. (௫)

பசுங்கொடி-உமாதேவி, பச்சைக்கொடி. பாம்பு.

ஆண்டெ டூங்குயர் சோலைக ளறவரு [illegible]ாய்
மாண்ட நற்கனி மலர்முதல் வழங்கின[illegible]ர்க்கு
மீண்ட ளித்திட வேண்டுமென் றெண்ணிவா னளவாய்
நீண்ட வன்றடஞ் சினைக்கையை நீட்டியே நிற்கும். (௬)

அறவர்-முனிவர். அடை-இலை.

சடையர் குண்டிகை தரித்திடுங் கரத்தர்கண் டிகையின்
றொடைய ராதப மறைத்திடுந் தோகைமென் பீலிக்
குடையர் செய்யகற் றோய்த்திடுங் கோடிக மிறைஞ்சி
யுடையர் மாதவத் துறவர்க ளுறுவதவ் வனமே. (௭)

குண்டிகை-கமண்டலம். கற்றோய்த்திடுங்கோடிகம்-காவிவஸ்திரம். இறைஞ்சி-மரவுரி

ஆத பந்தெறு வேனிலு ளம்புதந் துளித்துச்
சீத நீர்பொழி மாரிகா லிமம்பெயுந் தினங்கண்
மாத வந்தவ றுதிளைத் தும்பரு மதிக்கப்
பாத கங்களைக் கடிந்திடும் படிவரப் படிவர். (௮)

ஆதபம்-வெயில். இமம்-பனி. படிவர்-விரதமுடையவர். படிவர்-முனிவர்.

உருப்ப வெந்தழல் வேட்பவ ரொண்மலர் சமிதை
தருப்பை தண்டளி ரெடுப்பவர் தமனியச் சிகரப்
பருப்ப தந்தனைத் தனுவெனக் குனிசெய்த பரனை
விருப்ப மோடருச் சிப்பவ ரெண்ணிலார் விளம்பில். (௯)

சமிதை-ஓமவிறகு.

இன்ன நைமிச வனத்தியல் பனைத்தையு மெடுத்து
வன்ன மாமணி கிடங்கொளிர் பஃறலை வாயாற்
சொன்ன ஆழிகள் பற்பல தொலைந்திடத் துணிந்து
பன்ன காதிபன் பகரினும் பகர்ந்திடற் கரிதால். (௧௰)

பன்னக அதிபன்-ஆதிசேடன்.

தெருண்ம னத்துயர் வியாதன்மா ணாக்கரிற் சிறந்தோன்
மருண்ம னத்தினர்க் களவிடற் கரியநான் மறையின்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR : MADRAS-41

பொருண்ம னத்துணர் சூதன்முற் புராணநூல் வல்லோ
ரருண்ம னத்துட னனையறை மிசவன மடைந்தான். (௧௧)
தெருள்-ஞானம்.

வேறு.

வந்தமா முனிவன் றனக்கெதிர் புகுந்து வருகென வுரைத்திவண் வரநீ
யெந்தமா தவஞ்செய் தனமென முகம லியப்பியங் கியாவரு மிறைஞ்சி
யந்தமா மணிப்பொற் றவிசினி லிருத்தி யருத்தியோ டருக்கிய முதலா
முந்தவா தரவிற் பூசனை விதியின் முறைதவ றுவகை முடித்து. (௧௨)

மழைக்கரு முகின்மின் னிறத்தசெஞ் சடில மாதவர் சூதனை நோக்கி,யி ழைப்பதற் கெளிதாய்ப் பவக்கடல் சுவற்றி யிருங்கதிப் பேறுநல் குவதாய்க், குழைக்கய னடர்ந்து கழிக்கயன் மருட்டுங் கூர்விழிக் கோதைபங் கிருக்கு,மு ழைக்கரப் பெருமான் விரதமொன் றெமக்கீண் டுரைத்திட வேண்டுமென் றிரப்ப. (௧௩)

நன்றென முகமு மிதயமு மலர்ந்து நயனநீர் பொழிதர விருந்தே
முன்றவ மிழைத்த பயனிது கேட்க முயன்றது நீவிர்முக் குறும்பை
வென்றமா தவத்தீர் விடையுயர்த் தருளும் விமலனுக் குரியநல் விரத
மொன்றுள தமர ரனைவரு நோற்ப துரைக்குவ னுவந்துகேட் டிடுமின். (௧௪)
முக்குறும்பு-காமம் வெகுளி மயக்கம்.

மின்னைநேர் சடிலத் தவிர்மதிக் கொழுந்து மிலைச்சிய சிவனிசிப் பெருமை
யன்னவூர் தியுமோ ராயிரங் கலைவா ணர்தனு மறைந்திடற் கரிதான்
மன்னுமா தவஞ்செய் நந்திவா னவற்கு வழுவையு முழுவையு முரித்தோன்
முன்னைநா ளுரைத்த தென்னொரு நாவான் மொழிந்திட முடியுமோ முடியா.
வழுவை-யானை (கயமுகாசுரன்.) உழுவை-புலி.

உலகுயிர் பிரமன் படைப்பதுந் திருமா லுயிர்த்தொகை காப்பது மூலகி
லலகிலா வளம்பெற் றியக்கர்கோ னளகை யளிப்பதுங் களிப்பொடிந் திரன்று
னிலகுபொன் னுலகம் புரப்பது மதிய மிரவிசெங் கழற்கிறை யிவர்க
டலைமைபெற் றதுவுஞ் சிவநிசி விரதந் தனையிழைத் தெனவுளத் துணர்வீர்.
இயக்கர்கோன்-குபேரன்.

கூறுநான் மறையோர்க் கிருநிலம் பசும்பொற் குவைபசுக் கோடிநல் கி டினும், வேறுவே றுரைத்த விரதநோற் றிடினும் விரியுளைப் புரவியின் வே ள்வி, நூறுசெய் திடினும் புரளவெண் டரள நுரைத்திரை கொழித்திடுங் கங்கை, யாறுமூழ் கிடினுஞ் சிவநிசி நோற்போர் பெறுபய னடைதன்மற் றரிதால். (௧௭)
கோடி-வஸ்திரம்.

அந்தண ரரசர் வணிகர்வே ளாள ராதியா விழிகுலத் துதித்த
வெந்தொழி லாள ரந்தமா விந்த விரதமே நோற்றிடி லவர்தா
மிந்திர னயன்மா லிமையவர் முனிவர் யாவரு மிறைஞ்சிநின் றேத்தக்
கந்தடு களிறன் றுரித்துமெய் தரித்த கண்ணுதற் கடவுளிற் பொலிவார். ()
வெந்தொழில்-கொடும்பாவம்.

ஆவினைப் புரிநூ லணிதரு மருமத் தருமறைக் கிழவரைக் கருங்கண்
மாவினை யளித்த கடலமு தனைய மழலைமென் மொழிச்சிறு மகாரைக்

காவிளைப் பொருவுங் கருங்குழற் செவ்வாய்க் கன்னிய ரிவர்களைச் செருந்த
தீவினை யனைத்தும் பரிதிமுன் னிருள்போற் சிவநிசி நோற்றிடிற் றீரும். ()
செருந்த-கொன்ற.

மறைகளிற் சாம மகங்களிற் புரவி மகமலை களின்மக மேரு
நிறைபுன னதியிற் கங்கையே யோரைந்தாய் நிகழ்ந்தபூ தத்திலா காய
முறைதெரி சுரரிற் கருமுகி லூர்தி முதன்மைபெற் றுயர்ந்தவா றென்ன
வறைதரு விரத மனைத்தினு முரைக்கு மரனிர வதிகமென் றறிமின். (௨௰)
புரவிமகம் எனக்கூட்டியுரைக்க.

மற்றொரு விரதஞ் சிவநிசிக் கிணையா மதிப்பது மாண்டமீண் டுதித்துப், பெற்றன தொழில்க ளியற்றிநின் றழலும் பிரமன்மான் முதலிமை யவரைப், பற்றலர் புரமோர் கொடியினி லடலை படவட வரைகுனித் தருளுங்,கற்றையஞ் சடிலக் கண்ணுதற் கிணையென் றறிவிலா ருரைப்பது கடுக்கும்.()
பற்றலர்-அன்பற்றவர், (முப்புரத்தவுணர்.) அடலை.சாம்பல்.

அன்புளா ரன்றி யன்பிலா ரெனினு மரனிர விஃதிலுண வகற்றிப், புன்புலா லுடலம் வருந்திடத் துயில்கண் பொருந்திடா தருச்சனை புரிந்தாற், றுன்பநீள் பிறவிச் சுழிக்கட லழுந்தித் துயருறா திறக்கமே முதலா, மின்பமார் பூதத்திற் போகமார்ந் தமல னிணைப்பதம் பெறுவரென் றிசைத்தான்.

இனையன மொழிகள் கனைகட லமிழ்த மெனச்செவிப் புலம்புக முனிவ, ரனைவரு மகிழ்ந்து மெய்ம்மயிர் பொடிப்ப வங்கையாற் றொழுதுபைங் குவளைச், சுனைபயில் கயிலைச் சிவநிசி விரதத் தோற்றமு நோற்றிடு மியல்பும், வினையக றவத்துச் சூதமா முனிவ விரித்துரைத் தருளென விளம்பும்.(௨௧)

பெற்றுயர் கற்ப வீற்றுல கீன்ற பிதாமக னுலந்தபே ருலக, முற்றுமற் றொடுங்கிப் பிரளயத் துயிர்கண் முடிந்திடுங் கங்குலி னுளத்தன், புற்றுமா மறையா கமவிதிப் படிகண் டொழுதவே னுண்டுபொட் டயரும், பொற்றுணர்க் கடுக்கைத் தொடைமிடை சடிலப் புனிதனை யருச்சனை புரிந்தாள். (௨௪)
அன்புற்று உமா எனப்பிரிக்க. உமா-உமை. கடுக்கை-கொன்றை.

யாமமோர் நான்குஞ் சென்றகன் றுகாந்தத் திருட்பொழு தகன்றபி னிதழித்
தாமமார் புனைந்த சோமசே கரன்பொற் றாளிணை பணிந்தவன் றனது
வாமமா ரிமய வல்லியின் றனையான் வழிபடு கங்குல்வா னவரு
நாமநீர் வேலி யுலகுளோ ரெவருஞ் சிவநிசி யெனநவின் றிடவும். (௨௫)
இந்நூலாசிரியர் நீர்வேலிப்பாகமான சுன்னாகத்தவராதலிற் றமதூரவர் எனவும் கடல்சூழ்புவியினரெனவும் பொருள்பட நீர்வேலியுலகுளோர் எனக்கூறினர்.

இச்சிவ நிசிநோற் றியாவரா யினுமுன் னிணையடித் தாமரை கருதிப்
பச்சிமத் தடைந்த பரிதிபூ ருவத்திற் பருப்பதத் துதித்திடு மளவு
நச்சிநற் பூசை புரிந்தவர் முத்தி கண்ணவும் வேண்டுமென் றிரப்ப
வுச்சியின் மணிசே ருரகபூ டணனு முமையவட் கவ்வர மளித்தான். (௨௬)

ஆதலாற் சிவராத் திரியெனு நாம மனைவரு மறைந்திட நிகழ்ந்த, தீதலாற் பரம னிரவினிற் றோற்ற மின்னுமோர் காரணமுளதென், றோதவா ரிதிசூ ழுலகுளோர் பொருட்டா லுறுவர்கேட் டுவந்துள முருகச், சூதமா முனிவன் வியாதன்முன் மொழிந்த சொற்படி சொல்லுவான் றுணிந்தே. ()

பின்னுமோர் கற்ப விறுதியி னிரசப் பிரசமென் கமலவீட் டிருக்கு
மன்னவா கனனு முலகுமா ருயிரு மழிந்திடு மற்றைநா ளிருண்ட
வன்னமா முகில்க ளீண்டியோ ரேழு மறிகட னீர்முகந் தெழுந்து
மூன்னமே பொழிந்த பிரளயப் புனல்வான் முகட்டள வளாவிமுட் டியதால்

ஊறிலா னுயிருக் குயிரதா யிருக்கு மொருபொரு ளொப்புட னுயர்வு
வேறிலா னகண்ட பூரண மான வெறுவெளி வெறுத்தெதி ரடக்கு
மாறிலா னிமய மலைமக டனைத்தன் வாமமீ திருத்தினோன் வாழ்நா
ளீறிலா முதல்வன் யாவரு முய்ய யோகமுற் றிருந்தன னிப்பால். (௨௯)

கானிமிர் துளபக் கண்ணியு மணியுங் கவின்பெறப் புனைந்திடுங் கரிய
மேனிய னளித்த சராசர மனைத்து மீளவும் படைப்பதற் கெண்ணி
யூனிமி ருடற்செஞ் சட்பெருங் கேழ லுருத்தரித் தாழ்ந்தபே ருலகைக்
கூனிய மருப்பிற் றுங்கியப் புனலுட் குளித்துமீ தெடுத்துயர்த் தியபின் (௩௦)

சரிதிசைக் கிரிக ளெட்டுமெண் டிசையிற் றளம்பிடா வகைமுத னட்டி
விரிகதிர்ப் பசும்பொற் கொடுமுடி விளங்கு மேருவை யணிபெற நிறுத்திப்
பரிவுறு முயிர்க ளனைத்துமீ ரேழு புவனமும் பண்டுபோற் படைத்தற்
குரியநான் முகத்துக் குரவனை விரவு முந்தியம் போதினு லுதவி. (௩௧)

பங்கயத் தயனைக் கடைக்கணித் துலகம் பண்டுபோற் படைத்திடப் பணித்துத், துங்கவேற் றடங்கட் டிருமகள் சுருதி துதித்திடுந் துணைப்பதம் வருட, வெங்கணமா மணிச்சூட் டரவணைப் புறத்து வெண்டிரைப் பாற்கடனடுவ, ணங்கண்மா ஞால முழுதுமுண் டுமிழ்ந்த வமலனங் கறிதுயில் புரிந்தான். (௩௨)

உந்தியி லுதித்த நான்மறைப் பிரம னுரைக்குமுக் காலமு முணர்ந்து
புந்தியிற் றெளிந்தீ ரேழுல குடனே புலவர்கந் தருவர்கிம் புருடர்
வெந்திற லரக்க ரியக்கர்வா ளசுரர் விஞ்சையர் கருடர் பைசாசர்
முந்திய சித்தர் மனுடர்நீ டுரகர் முனிவரர் முதன்முதற் படைத்தே. (௩௩)

பூதிய மைந்தி னனுபவம் பொருந்திப் பொருவின்முக் குணங்களைத் தழுவி
யாதியிற் புகலுன் கிருபதின் மேலுன் கமைந்தநூ றுயிர பேத
மோதிய யோனி நாலிடத் துதிப்பித் தொற்றையா ழியந்தடந் தேரூர்
சோதிவா னிரவி குளிர்கதிர் மதியந் தோற்றுவித் தனனனத் துவசன். ( )

பாருல கெவையுஞ் சராசரத் தொகையும் படைத்தபின் பண்ணவர் முதலாச், சீருல விடுமீ ரொன்பது கணமுந் திரண்டிரு மருங்குசே விப்பக், கூருல வியவெள் ளெயிற்பெரும் பேழ்வாய்க் கோளரி சுமந்தபொற் றவிசிற், காருல வியமைக் குழற்கருந் தடங்கட் கலைமகள் கொழுநன்வீற் றிருந்தான். (௩௫)

பின்னரோர் தினத்திற் றன்வகுத் தமைத்த பேருல கனைத்தையு நோக்கச்
சொன்னமா கணங்கள் சூழ்வர வெழுந்து துலங்குமே லுலகுபா தலங்கள்
பொன்னவிர் குடுமிப் பூதர முதலாப் போயவன் கண்டுடல் புளகித்
தென்னினு முதல்வ ரினிப்பிற ரொருவ ரிலரென விருஞ்செருக் குற்றே. ( )

உளமிகத் தருக்கிக் கொண்டுமண் டலம்பண் டுண்டவன் றெண்டையங் கனிவாய்த், தளரிடைக் கரிய கெண்டையந் தடங்கட் டாக்கணங் கின்றவ

ன் சாமத், துளவணி மருமத் தரியர ணையிற் றுணைவிழி முகிழ்த்தறி துயில்செய், இளர்நெடுந் தமரத் திரைமணி கொழிக்குங் கீரவா ரிதிமருங் கடைந்தான். (கஎ)

தாக்கணங்கு-இலக்குமி. தலைவன்-நாயகன்.

விண்ணினின் றிழிந்து முதிர்ந்தசூற் காள மேகமொன் றமுதசா கரத்தி, னண்ணிய தெனவே நெட்டுடற் பருவாய் நகுமணிச் சுடிகைவா ளரவிற், புண்ணிய முதல்வன் யோகநித் திரைமுன் புரிவது கண்டுளம் பொருமி, யெண்ணிநின் றடர்ந்து கண்படை வளர்வோன் யாவனீ யெழுந்திரென் றிசைத்தான். (கஅ)

வேறு.

அகலந்தனி லலர்மின்பயி லடலென்றயி லொருவி
யிகல்கொண்டிவை புகல்கின்றனை யார்நீயென வினவப்
புகலம்பர முலகும்பர்கள் புவனங்கனல் பவனஞ்
சகலந்தனி யுதவும்பொரு டானென்றுரை தந்தான். (கக)

பூவுந்தியில் வந்தோனிவை புகலப்புய லனையான்
ருவுந்திரை தவழுங்கட றரையெண்டிசை வரைபார்
மேவும்பல வுயிரும்பர்கள் விதியிங்குனை மூதன்மற்
றியாவுந்தரு பரதத்துவன் யானென்றுரை செய்தான். (உ0)

மறைநாலுமென் னுவுற்றது மண்கால்புனல் விண்டீ
நிறைவாகிய பொருள்யாவுமென் னினைவின்படி படைப்பே
னிறைவாகிய பரதத்துவன் யானல்லது நீயென்
றறைவாயறி வற்றாயென வயனுங்கழ றுற்றான். (உக)

அக்காலையி லிருவோரையு மடர்மாயை மறைக்கப்
புக்காருணர் வில்லாரமர் பொருவான்முயல் பொழுதிற்
கைக்கார்முக முனிவுற்றெதிர் கண்ணானுருணி வித்துத்
திக்காலைகள் வெருவும்படி சிறுநாணொலி செய்தான். (உஉ)

வலிசேர்புய நெடுமால்கர மருவுங்கொடு மரநா
ணொலியாலர வாசும்பர்க ளுடனுட்கிட வுவரார்
கலியார்கடை யனல்கால்கிளர் காலங்கள் கடுப்பச்
சலியாதட லுடனின்றடு சரமாரி பொழிந்தான். (உங)

கால்கிளர்காலமென்பதிற் காலமென்பதை யனையவிரண்டோடுங்கூட்டி, ஆர்கலிகிளர்காலம்-கடல்பெருகியுயர்கின்ற சலப்பிரளயகாலம்; கடையனல்கிளர்காலம்-தேயுப்பிரளயகாலம்; கால்கிளர்காலம்-வாயுப்பிரளயகாலம் என்று பொருள்கூறுக.

கடுத்தானுருத் தெழுந்தாலெனக் காயுங்கத மிகவுந்
தடுத்தான்முத லகிலஞ்சுடு மயிலம்புகள் பலவும்
விடுத்தானவை முடுகாதயல் விலகும்படி விரைவிற்
றடுத்தானொரு குசைகொண்டுயர் சலசத்தவி சுறைவோன். (உச)

சீறித்திசை முகனீடிய சிறையோதிம மதன்மே
லேறிப்பல படைமந்திர மெடுத்தோதினன் விடுத்தா
னூறித்தரு கருணைக்கட லுவணப்பு ளுகைத்தே
னாறிச்சில கணைகொண்டொரு நொடியிற்றுகள் செய்தான். (உரு)

கண்டந்தண னிவனுகமொர் கடிகைப்பொழு தளவிற்
றுண்டஞ்செய்வ னென்றேழ்கடல் சுவறச்சுரர் பதற
வண்டங்கள் வெடித்துட்கிட வசனிக்குல நாணுந்
தண்டொன்றது கொண்டங்கரி தடமார்பி லெறிந்தான் (௪௬)

அசனிக்குலம்-இடிக்கூட்டம்.

முதிரச்சின மெதிரச்சுதன் முடுகுங்கதை கடுகிற்
பிதிர்பட்டுதிர் தரமைப்புயல் பிளிறுற்றிடு மொலிபோ
லதிரப்பொரு செருவிற்றின மட்டாட லரக்க
ருதிரப்பிண முடைநாறிடு மோர்தண்டமு னுய்த்தான். (௪௭)

விண்ணுடெரி கதுவத்திரை விரியுங்கடல் சுவறத்
தண்ணார்மதி தபனன்றிசை தடுமாறினர் திரிய
மண்ணுடழி வுற்றும்பரு மடியும்படி மறமுற்
றெண்ணுதமர் பொருதிட்டன ரீரைம்பது வருடம். (௪௮)

பொருதிப்படி மலைவுற்றிடு போதிற்றிரு மார்பன்
சுருதிக்கிறை வன்சென்னி துணிக்கும்படி நெஞ்சிற்
கருதித்துணை விழியிற்கனல் காலக்கனல் காலும்
பரிதிப்படை விட்டானது பலியாதுறல் கண்டே. (௪௯)

குரமாமுகத் துருமேலினிக் கொள்வான்கொதித் தேதன்
சரமானதங் கெடுத்தேவினன் றனியாடல்விற் குனித்தே
திரமாமுக மொருநான்குள செழுநான்மறை யவன்றன்
வரமார்கணை விடுத்தான்வளர் வடவைக்கனன் மான. (௫௦)

மாமுகத்துரு-கற்கியவதாரம்.

பெண்டான்முடி கொண்டானிடம் பெற்றானுத லிற்றீக்
கண்டானுறு மெண்டோளிறை கண்டானகன் மண்டா
னுண்டானுறு நுண்டாதித ழொண்டாமரை யுறைவோன்
றண்டானுதி வண்டான்முதிர் சமரம்பொரு தமரம். (௫௧)

முடிகொண்டபெண்-கங்காதேவி. இடம்பெற்றபெண்-பார்வதி. நுதி-கூர் வண்டு-பாணம். தமரம் ஆரவாரம்.

கடுவெஞ்சின மொடுதம்படை விடுகின்றனர் கடிதின்
றடுவெங்கள மிசைதுஞ்சுவ ரரியம்புய ரெனவே
சுடுவெங்கனல் சிகைகொண்டெழு சுடரின்றிரள் வடிவாய்
நடுநின்றனன் மதியம்பொதி நளிர்செஞ்சடை முதல்வன். (௫௨)

எடுக்குங்குட மாதத்தினி லிலகும்பிறை குறையத்
தொடுக்குந்திதி பன்னான்கெனச் சொல்லுஞ்சதுர்த் தசியி
னடுக்கங்குலி னப்பேரொளி கண்ணுற்றபி னன்னோர்
விடுக்கும்படை நீறாயவை வெந்திட்டன மாதோ. (௫௩)

எடுக்கும் என்பது குடத்திற்குச் சாதியடை. குடமாதம்-மாசிமாதம்.

## வேறு.

நீன்மலை தனக்கு மூத்த நீலமா மலைக்கும் வேதப்
பொன்மலை தனக்கு நாப்பட் புரைதவிர் பதும ராக

மன்மலை நின்றதென்ன மாறுகொண் டவர்தம் மிற்றாஞ்
சொன்மலை வுறாத வண்ணந் தோன்றிய சுடரைக்கண்டார். (ருச)

நின்மலை-உமாதேவி. மூத்த நீலமலை-விட்டுணு. வேதப்பொன்மலை-பிரமா. மாறுகொண்டவர் கண்டார் எனமுடிக்க.

பங்கயத் தயன்மால் விண்ணோர் பார்த்தகட் புலனுக் கெட்டா
தங்கவர் மனத்தி னாலு மளவிடற் கரிய தாகிச்
செங்கதிர்ப் பரிதி கோடி திரண்டொரு வடிவாய்க் கூடிப்
பொங்கொளி விரித்தாலென்னப் பொலிந்தபே ரொளியை நோக்கி. (ருரு)

அதிசய மடைந்து நீண்ட வழற்பிழம் பாகி நிற்கு
மிதினடி முடிகள் காண்பா னிருவரு மிசைந்து தம்மிற்
கதிதரு மடிக டேடக் கடவனென் றேன மாகித்
துதிபெறு முகுந்தன் கீழேழ் தொன்னிலங் கீண்டு சென்றான் (ருசு)

கன்னமா மதங்கள் சிந்துங் கரிமுத லாக முன்னோர்
சொன்னவா றுயிர்க ளெல்லாந் துணுக்கிடப் பவளச் செங்கா
லன்னமாய்ச் சிறைக்கான் மேரு வசைத்திடப் பறந்து வாச
வன்னவா ரிசத்தோன் வானின் மணிமுடி தேடிப் போனான். (ருஎ)

மருவருந் துளவ மாலு மலர்மிசை வதிகின் றோனு
மிருவரு மநந்த கால மிறந்துட லிளைத்த தன்றித்
திருவரு மழலின் செய்ய சேவடி முடிகா ணாமல்
வெருவரு மனத்த ராகி வெள்கினர் மீள்கின் றாரால். (ருஅ)

கூடியங் கிருவர் தாமுங் கோலநீ டொளியை நோக்கி
யாடியி னடங்கும் வெற்பி னமர்ந்துய ரன்ப ருள்ளத்
தூடிருந் தருள்வோய் நின்னை யுணர்ந்திலெ மெமதுசென்னி
சூடியாம் வாழ வின்றுன் றுணைப்பதங் காட்டு கென்றார். (ருகூ)

ஆடி-கண்ணாடி.

மாசிமா தத்திற் றோன்று மதிக்கலை குறைந்து தேயு
மாசில்பன் னான்காம் பக்கத் தனையிரு ளியாமந் தன்னிற்
றேசினால் விளங்குஞ் சோதிச் செழுஞ்சுட ராகி நின்ற
காசிலா நுதற்கட் பெம்மான் றனதுருக் காட்டி னின்றான். (சுo)

நீலகண் டமுமெண் டோளு நெற்றியிற் கண்ணு நீறுங்
காலனைக் காய்ந்த காலுங் கையின்மான் மழுவுங் கண்டு
மாலவன் வாமந் தன்னின் மலரயன் வலப்பா னின்று
சூலபா ணியனை நோக்கித் துதியல சொல்ல லுற்றார். (சுக)

ஓதியா யணுவா யெண்ணி லுயிர்க்குயி ராகி யென்றும்
பேதியாப் பரம தாகிப் பிறப்புட னிறப்பி லாமற்
சோதியா யெழுதாக் கேள்விச் சுருதியின் முடிவா யெங்கட்
காதியா யநாதி யாகு மடிகணின் னடிகள் போற்றி. (சுஉ)

ஓதி-மலை.

விடைக்கொடி யுயர்த்தாய் போற்றி விரிமலர்ச் செழும்பொற் கொன்றைத்
தொடைப்புயா சலனே போற்றி துலங்குபொற் றேட்டிற் றுவும்
படைக்கருங் கடைக்கட் செவ்வாய்ப் பைந்தொடி பங்கா போற்றி
சடைப்பரம் பரனே போற்றி சங்கரா போற்றி போற்றி. (௬௩)

விரித்துல கனைத்து மாக்கி வீக்குநாட் சராச ரங்கள்
பரித்துள புவன மூன்றும் பாலநேத் திரத்தீ யூட்டி
யெரித்துநீ றாக்கிப் பூசி யென்பணிந் திலங்கு சூலந்
திரித்துநின் றாடு நின்பொற் சேவடி போற்றி போற்றி. (௬௪)
வீக்குநாள்-சங்கரிக்குங்காலம்.

இலகொளிக் கதிரோன் றாகி யீர்ம்புனற் கும்பந் தோறும்
பலவுரு வாகித் தோன்றும் பான்மைபோ லங்கங் காய்நின்
றுலகுயிர்க் கனுப வங்க ளூட்டுவித் தொழிந்த காலத்
தலகிலாக் கருணை நல்கு மடிகணின் னடிகள் போற்றி. (௬௫)

அருவமா யுருவ மாகி யகண்டமா யசல மாகி
யொருபரம் பொருளாய் வண்ண மொப்புட னுயர்வு மின்றி
நிருமல னாகி யெங்கு நிறைந்துநீங் காதுநிற்குங்
கருதரு ஞான னந்தக் கருணையங் கடலே போற்றி. (௬௬)
அகண்டமாய்-அனைத்துமாய். எங்குநிறைந்து எனமூன்றாமடிகூறுதலால், அகண்டமாயென்பதற்குக்கண்டப்படாமல் என்றுரையாதுவிடுக. அசலமாகி-அசைவின்றி.

காலனார் வீழத் தாக்குங் கழைகழற் காலா போற்றி
மூலமாம் பொருளுக் கெல்லா மூழுமுதற் பொருளே போற்றி
பாலநேத் திரனே போற்றி படர்திரைப் பாலின் வேலை
யாலமுண் டிருண்ட கண்டத் தண்ணலே போற்றி போற்றி. (௬௭)

பொடியெழப் புரமோர் மூன்றும் புன்னகை கோட்டிச் சுட்டாய்
கொடியின்மீ னெழுதும் வேளைக் குளவிழி யழலிற் கொன்றாய்
படிமுதற் ககன மீறாய்ப் பரந்தியாம் பரிந்து தேடி
யடிமுடி காண்டற் கெட்டா வத்தனே போற்றி போற்றி. (௬௮)
வேள்-மன்மதன். குளவிழி-நெற்றிக்கண்.

நீர்வடி வான செய்ய நெருப்புல வுலவை வானம்
பார்வடி வாகத் தோன்றப் படைத்திட முன்ன மன்னுங்
கார்வடி வான கூத்தற் கவுரியு நீயு மொன்றாய்ப்
பேர்வடி வின்றி நின்ற பிஞ்ஞகா போற்றி யென்றே. (௬௯)

எய்ச்சிலை யுண்டென் றேதற் கேதுவா மிடையாண் மாரன்
கைச்சிலைப் புருவ மைக்கட் கவுதமன் பன்னி கொண்ட
மைச்சிலை யுருவ மாற்று மலர்ப்பதன் வடத்தண் டார்ந்த
பச்சிலைப் பள்ளி யானுட் பரிவுடன் பழிச்சி யேத்த. (௭0)
எய்த்து இலை என்றுபிரிக்க; தொடைநோக்கி எச்சுஎன்றாயிற்று. கௌதமன்பன்னி-அகலிகை. மைச்சிலை-கருங்கல். வடம்-ஆலமரம்.

மருவிரு கமலப் போதின் மன்னுநான் முகத்தோன் வெற்பி
னருவிபோல் விழிநீர் சோர வாகநெக் குருகி யுன்பாற்

றருவிரி மலர்க ளேவித் தமனியச் சபையி லாடும்
பொருவிரி கமலச் செம்பொற் பூவடி போற்றி செய்தான். (ஙக)

வேறு.

நிலத்தானைக் கடுவொடுக்கு மிடற்றானை மழுத்தானை நீங்காச் செங்கை
வலத்தானை மலைமகள்சே ரிடத்தானை வரிசிலைக்கை மதனைக் காய்ந்த
சலத்தானை முசலபுயா சலத்தானை தனைசூழத் தருக்கி வாழ்தென்
புலத்தானை யுதைத்தமலர்ப் பதத்தானைப் போற்றிசெய்தார் புலவரெல்லாம்.

நிலத்தானை-பூமியின் உடை (கடல்); கடு-நஞ்சு. சலம்-கோபம். முசல புய
அசலத்தானை-உலக்கைபோன்ற புயமலைகளையுடையசேனைகள்,

கந்தரநேர் கந்தரத்தான் கருணைவிழிக் கடையருளிக் களிப்பி னோடு
மந்தரவா னவர்புகழ்புள் ளரசுகைக்கு மச்சுதனை யளிதே னுண்ணுங்
கொந்தவிழ்நாண் மலர்க்கமலத் தவிசிருக்கு நான்முகனைக் குறித்து நீவிர்
சிந்தைதனில் விழைந்தவரங் கேண்மினது தருவலெனச் செப்ப லுற்றான்.

கரியெனநின் றுயிர்க்கருள்செய் கண்ணுதனீ கனற்பிழம்பாய் நின்ற காலை
விரிசுடர்விட் டெழுமொளிசேர் விளக்கில்வீழும் விட்டிலென வீழ்ந்து நீறு
பெரியுமெம தந்திரங்க ளீங்கெமக்கு மீண்டுதவி யாங்க ளொன்றும்
புரியுமிரு தொழிலுநிலை பெறவுனருள் புரிதியெனப் போற்றி நின்றார். ()

கரி-சாட்சி. இருதொழில்-படைத்தல் காத்தல்.

அன்றமரி விருவீரு முடியாமற் சோதிவடி வாயா நும்மு
னின்றவிராச் சிவநிசி யந்நிசிவருநாட் களில்விதித்த நியமத் தோடு
மன்றன்மலர் கொடு பூசை புரிந்திடினீர் நினைந்தவெலாம் வழங்கல் செய்வா
மென்றயன்மா லிருவருக்கு மனமகிழ வரமளித்திட் டியம்பும் பின்னும்.(எரு)

சோதிவடிவாய் யாம் நும்முன் என்றுபிரிக்க,

ஆதியிலம் பிகைநோற்ற விரதமிதன் பெருமைபெவ ரளக்க வல்லார்
சாதிமுறை நெறிதவறுஞ் சண்டாளர் நோற்றிடினுந் தக்கோ ராகி
மோதிவருங் கடல்புடைசூ ழுலகில்விரும் பியபோக முற்றிப் பின்னர்ப்
பூதிதரும் பெரும்பாவக் கடல்கடந்து முத்திநெறி பொருந்து வாரால்.(எசு)

ஆவிந்த மறையவர்கட் களித்தாலும் புாவிமக மாற்றி னாலு
மேவிந்தச் சிவநிசிபோற் பலன்றரா வெனவியந்து விண்ணி னோங்கு
மாவிந்த நடைபயின்று வந்தனைய கரியுரித்த வரதன் வாமக்
கோவிந்த னரவிந்தன் கோவிந்தன் முகநோக்கிக் கூறிப் போனான். (எஎ)

ஆ விந்தம் பசுக்களைவிந்தமென்னும்(பெருந்)தொகையாக. மாவிந்தம்-பெ
ரியவிந்தகிரி. வாம கோ இந்தன்-இடக்கண் சந்திரனுகவுடையவர். (சிவன்)

உலங்குலவும் புயமுகுந்த னிவ்விரத நோற்றுயிர்காத் துடற்று போரிற்
சலங்குலவு மரக்கர்குலச் சலதிவட வையிற்சுவற்றுந் தானை பெற்றுப்
பொலங்குலவு மிதழ்விரிந்து தேன்றுளித்து வழிந்திடுமம் புயப்பொற் பூவி
னிலங்குலவு மயிலைமணந் திமையவர்கண் முதலெவர்க்கு மிறைவ னானான்.

உலம்-திரண்டகல். பூவின் இல்லம் குலவும் மயிலை-பூவாகிய மனையில்வசிக்கி
ன்ற இலக்குமியை.

நல்லுணர்வுற் றுயர்கமல நான்முகனோற் றுலகமுநால் வகையிற் றோற்றும்
பல்லுயிரு நினைத்தமனப் படிபடைத்துத் தனதுகரப் படையும் பெற்றுச்

சொல்லுமறை முழுதுணர்ந்து தூவியனப் புள்ளூர்ந்து சுணங்கு பூத்த
வல்லுறழ்மைக் கருங்கண்முலை வாணிதனை மணந்துபெரு வாழ்வு பெற்றான்.

நால்வகையில் தோன்றும்-அண்டசம், உற்பிசம், சுவேதசம், சராயுசம். நினைத்தமனப்படி-(கரத்தாலியற்றாது) சங்கற்பமாத்திரையாக. வல் உறழ் முலை என இயைக்க. வல்-சூதாடுகருவி; மைக்கருங்கண் இடைப்பிறவரல்.

சீதரனுந் திசைமுகனு நோற்றதற்பி னிவ்விரதஞ் சிறந்த தெங்கு
மோதவரு மாகமதிச் சிவநிசியுற் பவமீதென் றுணர்வீ ரென்றே
மாதவத்தி னுயர்சனகன் முதலான மிசவனத்தோர் மகிழ்ந்து கேட்பச்
சூதமுனி வரனிகழ்ந்த சரித்திரத்தை விரித்தெடுத்துச் சொன்னான் மன்றே

சிவராத்திரியுற்பவச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் க0ரு.

---

## சிவராத்திரிமான்மியச்சருக்கம்.

சொன்ன சூதனை நோக்கியவ் வனத்துறை துறவர்கண் மறைகூறு
மன்ன மாவிர தத்தினை நோற்றிடு மடைவுமன் னரன்றாளிற்
பன்ன மாமல ரிட்டருச் சனைபுரி பரிசுநீ பரிவோடின்
றின்ன வாறென விரித்தெமக் குரைத்தியென் றிரப்பவங் கிசைக்கின்றான்.

பன்னம்-பத்திரம்.

மாக மாமதிச் சிவநிசி யுற்பவம் வகுத்துரைத் தனமிப்பா
லாக வத்துட னோந்துள வரனிரா வவற்றைநீ ருணர்வீரால்
யோக ராத்திரி சோமவா ரத்தினன் றுதயகா லையிலேதொட
டேக மாகவந் நிசிக்கடை யளவுவா விசைந்திடி லதுவாமே. (௨)

உவா சோமவாரத்தில் உதயகாலையிற்றொட்டு அந்நிசிக்கடையளவு இசைந்திடில் இது யோகராத்திரியாம் என்று கூட்டுக.

திங்க ளின்கலை குறைசதுர்த் தசிமதிக் கிழமையிற் றிகழல்லிற்
றங்கு சாமநான் களவுதொட் டிருந்திடிற் சயிலமீன் றருண்மானைப்
பங்கில் வைத்திடும் பரமனைப் பூசனை பண்ணுக பரிவோடு
மிங்கு ரைத்தவா கமங்கண்மற் றிதனையும் யோகராத் திரியென்றே. (௩)

ஈறு வந்தசா மத்தரை நாழிகை யிருளுவா விருந்தாலுந்
தேறு கின்றவச் சதுர்த்தசி யப்படிச் சேரினுங் கொளல்வேண்டு
மூறு தீர்தவத் துறவீர்காள் விதிமுறை யுரைக்குமிங் கிவைநோற்கிற்
கூறு மற்றுள சிவநிசி விரதமுக் கோடிநோற் றிடலொக்கும். (௪)

அப்படிச்சதுர்த்தசிசேரினும்-ஈற்றுச்சாமத்திற்சதுர்த்தசிஅரைநாழிகைகூடினாலும்.

பருவ மாறுள வருடமோ ரொன்றுறு பன்னிரு மதிதோறு
முருவ மாமதி நிறைந்தது குறைந்திடு மோரிரு பக்கத்து
மருவு மாசதுர்த் தசியது நான்கினு நோற்பது வழக்காகு
மிருவ ரார்ந்தமா தவருரைத்தை நித்திய சிவநிசி யெனச்சொல்வார். (௫)

அதிக மாதமா மித்தினிற் குளிர்கதி ரம்புலி குறைபக்கத்
திதியன் றன்றுதன் றிங்கண்முற் றிருதியை சித்திரை மதிதேயு

மதியி னட்டமி யிடபமா தத்துமுன் மருவுமட் டமிமாசில்
பதிக யாழ்மதி மதிவளர் சதுர்த்தியாம் பகர்ந்தகற் கடகத்தில். (௬)

முன்மருவுமட்டமி-பூர்வபக்கஅட்டமி. கற்கடகத்தில் என்பதனை அடுத்தபிற்கவியில் விரியும்வெண்ணிலாக்கலைகுறைபஞ்சமி என்பதனோடுகூட்டியுரைக்க.

விரியும் வெண்ணிலாக் கலைகுறை பஞ்சமி விளங்குமா வணிதன்னிற்
பரியுஞ் சுக்கில பக்கவட் டமிபுரட் டாதிமுற் பதின்மூன்று
மரிய வைப்பசிக் கம்புலி வளர்திதி யாதிரண் டறைதேளிற்
றெரியு முற்படு சத்தமி பிற்படு திதியிலட் டமிதானும். (௭)

ஒப்பின் மார்கழி யுபயபக் கத்தினி லுறுதிதி பதின்மூன்குஞ்
செப்பு மான்மதி வளர்மதி தனிலுறு திருதியை யிவைசூலக்
கப்பு வேற்கரக் கண்ணுத லருச்சனைக் குரியவா கமமெல்லாந்
தப்பி லாதெடுத் திவைகண்மா தச்சிவ நிசியெனச் சாற்றும்மே. (௮)

மாதின் மார்கழிச் சதுர்த்தசி யாதிரை மருவிலுத் தமமிகு
மூதி லாக்குடத் திங்களிற் குளிர்கதி ருடுபதி குறைபக்கந்
தேதி நின்றிடு சதுர்த்தசி தூசன்கதிர்க் கிழமையிற் சேர்வுற்று
வீதி னாற்கதி கொடுக்குமக் கோடியாஞ் சிவநிசிக் கிணையாமால். (௯)

உற்ற பன்னிரு மதியிலிவ் விரதநோற் றுளம்விழைந் தனமுன்னுடை
பெற்று ளோரயன் மாசியிற் கேசவன் பிறங்குபங் குனிதன்னிற்
சொற்ற சித்திரைத் திங்களிற் பார்ப்பதி சூரியன் விடைமாதத்
தற்ற மற்றிடு மிதுனமா தத்தர னாடியிற் குமரேசன். (௧௦)

அரன்-(இங்கே) உருத்திரன்.

சிங்கத் தம்புலி கன்னியிற் சேடனிந் திரனெடுந் துலைத்திங்க
டங்கு கார்த்திகை நாமக டனுமதி தனின்மனோன் மனிதையிற்
றுங்க மாரியி விடபதே வன்பசுஞ் சுகமொழி யுமைவாம
பங்க னீடரு டங்கிடத் தக்கநற் பக்கராத் திரிசொல்வாம். (௧௧)

சுகமொழி-இனிமொழி.

மகர திங்களி னபரபக் கத்திடை வருபிர தமையெய்தப்
புகலு மன்றுதொட் டெதிர்ந்தபன் மூன்றுநாட் புசிப்பதோர் பொழுதாகிப்
பகர்த ரும்பதி னன்கினி னேற்பது பக்கராத் திரியாகு
மிகப ரந்தரு விரதமற் றிதற்கிணை யாவரே புகல்கிற்பார். (௧௨)

அருட ருஞ்சிவ ராத்திரி யிப்படி யைந்துபட் டனவாகு
முருகு காதலோ டைந்தையு நோற்றனன் றுரைத்தவை முடியாதேன்
மருவு மிங்கிதி னென்றனை விதித்திடும் வரன்முறை வழுவாமற்
பெருகு மன்புட னேற்றவர் பெறற்கரும் பெருங்கதி பெறுவாரால். (௧௩)

ஊதை முன்படு பஞ்சியி னுறுவினை யோட்டியொண் வேரோட்டக்
கோதை பங்கன தருட்கடற் குளித்திடுங் கோதறு குணத்தீர்கா
ளோதை யாமெடுத் துரைப்பதிங் குமக்கினி யிமையவ ரறியாரிப்
பேதை மானுட ரறிவரோ சிவநிசிப் பெருமையின் றிறனம்மா. (௧௪)

ஒள் துவர் ஓட்டம்-ஒள்ளியபவளம்போன்ற உதடுகளையுடைய.

MAHAMAHOPADHYAYA
…R. U.V. SWAMINATHA IYER LIBRARY.
…UVANMIYUR : MADRAS-41

வேறு.

மத்தகமால் களிற்றுரிவை போர்த்துழுவை யுரித்துடுத்து மதியஞ் சூடும்
வித்தகனீ ணிறமிடற்றுச் சிவனிரவா கியவிரதம் விளங்க நோற்கி
லுத்தமமத் திமமதம மெனவொருமூ வகைப்படுமவ் வொழுங்கிற் சொல்வன்
முத்தழல்வேட் டிடுமுனிவீர் கேண்மினெனச் சூதமுனி மொழிவ தானான்.
அவ் ஒழுங்கில்-அவற்றைமுறையாக.

விரித்தசெழுங் கதிர்ப்பரிதி மேற்றிசைபோ யந்திவந்து மேவுங் காலுந்
தெரித்ததிர யோதசியாந் திதிநின்று பின்புசதுர்த் தசிதான் கூடித்
தரித்தவிரா வன்றிமற்றைப் பகன்முழுதுந் தங்கியிடிற் றறுகட் டந்தி
யுரித்தபிரா னிரசனிக்கு ளுத்தமத்தி லுத்தமமா யுரைப்பர் மன்னோ. (கசு)
இரசனி-இரா.

உதித்தகதி ரத்தமித்த பின்கூடுஞ் சதுர்த்தசியுத் தமமா மென்பர்
துதித்தவுத யாதியுத யாந்தமதாய்ப் பகலிரவு தோய்ந்து நிற்குங்
கதித்தசதுர்த் தசிகதிரத் தமிக்குமுன்சேர் சதுர்த்தசிநற் கங்குற் போதின்
மதித்தபத்து நாழிகையின் பின்கூடுஞ் சதுர்த்தசிமத் திமமா மன்றே. (கஎ)

அல்லினிரு பதுகடிகை யளவுசதுர்த் தசிதானின் றதற்குப் பின்னர்ச்
சொல்லினுயர் மதிபரிதி யுடன்கூடு மமாவாசை தொட்டத் தோடு
புல்லியிடி னதமசிவ ராத்திரியா மெனவெடுத்துப் புகல்வ ரல்லி
னல்லியல்சேர் பதின்மூன்றுந் திதிதொட்ட சதுர்த்தசியே நன்ற தாமால்.()

கங்குறனிற் பதின்மூன்றுந் திதியுடனே சதுர்த்தசியோர் கலைதான் கூடி
லங்கதுவே சிவசியாக் கொளல்வேண்டுஞ் சிவரூப மாகு மேன்மை
தங்குசதுர்த் தசிதிரயோ தசிசத்தி ரூபமிவை தாமொன் றாகித்
துங்கமுறக் கூடுமிராச் சிவலிங்கா காரமெனச் சொல்வர் மன்னோ. (கக)

ஆசிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதா னுவியக லங்கம் போலாம்
பேசுமிதிற் பூசைசெய்யிற் பிரமகத்தி தோடமுண்டாம் பிறங்கு மந்தத்(னங்
தேசமுழு வதுங்கெடுமுற் புண்ணியம்போஞ் சிந்தைசெய்யிற் றிடுக்கிட் டுள்
கூசுநர கங்கடமிற் கொடியுயிரென் ரவமதனிற் குளிப்பர் மாதோ. (உ0)

ஊறிலமா வாசைதொட்ட சதுர்த்தசிவை திகர்விரத்தர்க் குரிய தாகுங்
கூறுபுகழ்ச் சைவர்முன்னாட் கொளல்வேண்டுந் திருவோணங் கூடி நீற்கு
மாறிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதான் விரத்தருக்கும் வாழ்வின் மிக்க
தூறில்கிரு கத்தருக்கு மாகுமமா வாசையெனுந் தோட மின்றே. (உக)
விரத்தர்-துறவிகள்,

அற்றமிலத் தராத்திரிமுன் சதுர்த்தசியோர் கலைகூடி லன்று கொள்க
செற்றமிலச் சதுர்த்தசிநள் ளிரவினிற்பின் னொருகலைதான் சேடித் துற்றுன்
மற்றநாட் கொளல்வேண்டும் வைதிகரும் விரத்தர்களு மதிக்கும்பக்க
முற்றதுதா னிரண்டுபடி லிரவிலதி கத்திதிதா னுசிதமாமே. (உஉ)
இரண்டுபடில்-இரண்டுமுறின். முதனாள் அர்த்தராத்திரிமுன் சதுர்த்தசிகூடியும், அச்சதுர்த்தசி மற்றநாள் நடுராத்திரிக்குப்பின் சேடித்தும் இருப்பின் என்பதுவிளக்கம். சேடித்தல்-மிஞ்சியிருத்தல். இரவில் அதிகத்திதிதான்உசிதம்-இந்தஇரண்டுஇராக்களில் எந்தஇரவிற்சதுர்த்தசி அதிகம்இருக்கதோ அந்தஇரவேஉசிதம்,

திதித்திரயஞ் சேர்ந்தவரில் வைதிகர்க்குஞ் சைவருக்குஞ் சிறந்த தாகு
மதிக்குமற்றை நிசிக்கடையி லமாவாசை கூடமுதன் மழுமா னேந்து
நதிச்சடையோன் றனைப்பூசை புரிந்திடுதல் சைவருக்கு நன்று மென்றே
விதித்தன ரான் மதிக்கிழமைச் சதுர்த்தசிக்கு மிந்தமுறை வேண்டுந் தானே.

மதிக்கும் அற்றைநிசிக்கடையில் என்றுபிரித்துரைக்க. திதித்திரயம்-மூன்றுதிதி. முற்றிதியிற்பிற்கூறும் அடுத்தநடுத்திதியின்முழுக்கூறும் பிற்றிதியின்முற்கூறுமாக மூன்றுதிதி பகலிரவாகிய ஒருதினத்துட்கூடிவரின் அது திதித்திரயமெனப்படும். ஆயினும் இங்கே திதித்திரயமென்றது திரயோதசி சதுர்த்தசி அமாவாசைத்திதி மூன்றையுமாம்.

அற்றனின்மூ வைந்துகன்ன லாமளவிற் சதுர்த்தசிமுற் றினத்திற் கூடி
மற்றைநா ளிரவுபதி னைந்துகன்ன லளவிலுவா வந்தொன் றுறி
யுற்றிடிற்பிற் றினந்தனிலே பூசைபுரிந் திடலாசா தொழிக முந்தச் (ர்க்கே.
சொற்றதினத் தருச்சனைசெய் திடவிதித்தார் சைவநெறித் துறைநின் றோ

கன்னல்-நாழிகை.

முற்றிதியி லோர்பொழுதுண் டிடையில்விதித் திடுந்திதியின் முழுது
முண்ணு, திற்றிதனிற் றுயிலொருவி யேறேறி தனைப்பூசித் தியாமநான்கு
ம், பிற்றிதியிற் சிவனடியார்க் கன்னநல்கிப் பாரணந்தான் பின்னர்ச் செய்
யச், சொற்றிடுமா கமமாதச் சிவநிசிநோற் றிடக்கருதித் துணிந்து ளோர்க்
கே. (௨௫)

ஓதவருஞ் சோமசிவ நிசிதனக்குச் சதுர்த்தசியி லுண்டு வாவிற்
றுதவிழ்பூங் கொன்றையணி வேணியனைப் பூசைசெய்து சாம நான்குந்
தீதகன்ற பிரதமையிற் பாரணஞ்செய் திடவேண்டுஞ் செப்பு மைந்து
பேதமுள்ள சிவநிசிக்குட் சதுர்த்தசிசங் கரனிரவாய்ப் பிறங்கி நின்றால். (௨௬)

இன்னசிவ நிசிவிரத நோற்றிடுவோர் முற்றினத்தி லெய்தா நின்ற
வன்னதிர யோதசியி லொருபொழுதுண் டரிவையர்தோ ளணைத லின்றிச்
சொன்னவிர வகற்றியற்றை வைகறையிற் புனிதநதித் தோயத் தாடிப்
பின்னர்தின மணியுதிக்குங் காலையிற்செய் கடனனைத்தும் பிறழா தாற்றி. ()

மதிமுடியோன் கோயிறனை வலம்வந்து தண்டனிட்டு வணங்கி வாயாற்
றுதிபுகன்றில் வயினேகி யிழிகுலத்தோர் பாதகர்பாற் றன்னி டாமற்
கதியறுமற் றவருடன்வாய் பேசாமற் கண்ணினெதிர் கண்டி டாம
னதியிடைப்போய் நண்பகலி னுணவிதி வழுவாது நன்னீ ராடி. (௨௮)

தூயவெண்டு சிரண்டுடுத்திட் டுச்சியிற்செய் கடன்கழித்துச் சுடலை யாடு
மையனைப்பூ சிக்குமிடங் கோமயத்தான் மெழுகியபின் னம்பொன் னுடை
செய்யதுகி னேத்திரத்தால் விதானித்து வாண்முகன்னல் சிறக்க நாட்டி
மையகனுண் மலர்மாலை தோரணங்க ணிரைநிரையின் வயங்க நாற்றி. (௨௯)

நேத்திரம்-பட்டுவஸ்திரம். நாற்றி-தூக்கி.

கண்ணுதலை யருச்சித்தற் குரியபொரு ளனைத்தினையுங் கருதித் தேடி
விண்ணுலவு கதிரருக்கன் மேற்றிசைவே லையின்முழுக வீழும் வேலை
தண்ணுலவு சந்தனநற் றூபதீ பாதியிம சயில மீன்ற
வொண்ணுதலோர் பாகனுறை சந்நிதியின் முன்னமிலை யுதவி யன்பால். ()

அந்தியினிற் றண்புனறோய்ந் தருக்கியநற் கிரியைசெப மாற்றிப் பின்னர்
வந்திளமா மதிமுடித்த வள்ளறனைப் பீடிகையில் வைத்துத் தாபித்
திந்தியமோ ரைந்தவித்திட் டாகமநூன் மறைகளெடுத் தியம்பாநிற்கு
மூந்தியமந் திரங்களினாற் பூசைவிதி வழுவாமன் முடித்தல் வேண்டும். (௧௧)

முன்னமுதற் சாமத்தி லானினைந்தா லாட்டிடுக முறைமை யாகப்
பின்னரிரண் டாஞ்சாமத் தைந்தமிர்தா லாட்டிடுக பிரசந் தன்னு
னன்னயஞ்சேர் மூன்றாய சாமத்தி லாட்டிடுக நாலாஞ் சாமங்
கன்னலின்சாற் றினிலாட்டக் காரணவா கமமெடுத்துக் கழறிற் றன்றே. ()

ஆசகல்கோ சலந்தயிர்பால் கோமயநெய் கௌவியமைந் தாகுஞ் செந்தேன்
காசகல்சர்க் கரைததிபா னெய்யிவையைந் தமிர்தமெனக் கவைவரித்தை
மாசகல்கௌ வியம்போலத் தனித்தனியே தாபித்து மதியஞ் சூடி
மீசன்மணி முடிமீதி லாட்டிடவா கமநூல்க ளெடுத்துக் கூறும் (௧௩)

சந்தனமுற் சாமத்தி லகிலிரண்டாஞ் சாமமதிற் சாம மூன்றிற்
கந்தமிகுங் கருப்பூரங் கடைச்சாமங் குங்குமஞ்செங் கமலப் போதில்
வந்தருளான் முகன்முகுந்தன் மகபதிவா னவரெவரும் வணங்கி யேத்து
மந்தமிலா முழுமுதல்வன் றிருமேனி குளிரமிகு மன்பிற் சாத்தி. (௧௪)

முற்சாமம் வில்வமதிற் பிற்சாம முளரிமலர் மூன்றாஞ் சாம
நற்சாதி மலர்நாலாஞ் சாமமதி னந்தியா வர்த்தப் பூக்கொண்
டற்சாருங் களத்திறைக்குச் சாத்துகவென் றாகமத்து ளதிக மான
சொற்சார முள்ளசித்த தந்திரநூ ளுருக்குத்திதனைச் சொன்ன தாமால்(௧௫)

முண்டகமுற் சாமமதிற் றுளசியிரண் டாஞ்சாம மூன்றாஞ் சாமங்
கண்டகஞ்சேர் கூவிளமுத் தளக்கினைநான் கெனப்பகுத்த கடையிற் சாமம்
விண்டலர்ந்து மதுத்துளிக்கு முற்பலத்தின் மலர்சாத்த வேண்டு மென்றே
யண்டரெலாம் புகழ்ந்தேத்துஞ் சிந்தியமா மாகமநூ லறைந்த தன்றே.(௧௬)

வில்வநொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில்பஞ்ச வில்வ மாகச்
சொல்வரிவற் றின்றழைமுக கிளையாகக் கொண்டயன்மா ளுடர்க்துங் கா
நல்வரதன் றிருமுடியி னுன்குசா மமுஞ் சாத்த னன்று மென்று (ளு
கல்வியறிந் தவருணரக் காரணா கமமுரைத்த கருத்தா மன்றே. (௧௭)

எதமின்முற் சாமமுற்கப் பருப்பொடன்ன மாகுமற்றை யிரண்டாஞ் சாமந்
தீதகல்பா யசமாகுஞ் சாமமொரு மூன்றதனிற் றிலஞ்சே ரன்ன
மோதவரு சாமமொரு நான்கதனிற் சுத்தான்ன முரைத்தார் பூத
நாதனிவேத் தியந்தனக்குச் சுத்தான்ன மாஞ்சாம நான்கிற் கும்மே. (௧௮)

சறுவனே யுக்கிரனே சங்கரனே சிவனேசாம் பவனே சான்றுப்
பெறுகதியை நல்கியிடு மீசான னேமகவுக் கிரனே பேசு
மறவறுபூ தாதிபதி யேயென்னு மந்திரமோ ரெட்டு மோதி
யுறுதியுடன் றூபாதி நிவேதனங்க ளனைத்தினையு மொழுங்கிற் செய்தே.
சரவ-என்னும்வடமொழியைத்தொடைநோக்கிச் சறுவ என்றார். எல்லாப்
பொருளுமாயுள்ளவர் என்பதுபொருள்.

நாமத்தி னிருக்கெனுஞ்சொன் னூட்டுமறை முந்தவந்து நண்ணுஞ் சாமந்
தோமத்தி னகற்றிரண்டாஞ் சுருதியிரண் டாஞ்சாமஞ் சொற்ற மூன்றுஞ்

சாமத்திற் சாமமறை யீற்றிலுறு மறைநாலாஞ் சாமந் தன்னி
லீமத்தி னின்றுடு மாதிதிரு முன்னோதி யிருகை கூப்பி. (௪௦)

உருகுமுளத் துடனிருந்தே யூனுருவி யிருவிழியு முறக்க மின்றி யிருளுறுகங் குலின்யாம நான்கினுமிப் படியருச்சித் திறுதி தோறும், பொருவிலருக் கியங்கொடுத்து நாயடியேன் புரியுமிந்தப் பூசை தன்னைத், திருவுளத்தி னயந்தருள்வா யெனத்துதித்துத் தண்டனிட்டுத் திருமுன் வீழ்ந்தே.

இன்னணநற் சிவபூசை யியற்றியற்றைப் புலரிதனி லெழுந்து போகி
நன்னதியிற் புனலாடிக் காலையிற்செய் கடன்கழித்து நவின்ற வாறே
யன்னதினத் தினும்பகற்போ தரனையருச் சித்ததற்பி னாதி தீக்கை
சொன்னகுர வனைப்போற்றி யந்தணருக் காடையன்னஞ் சொன்ன மீந்தே

ஆதிதீக்கை-சிவதீக்கை.

அங்கவர்த மனுமதியாற் பாரணஞ்செய் திடல்வேண்டு மற்றை வைகற்
றங்குபகற் கடனனைத்துங் காலசந்தி யுடன்முடித்துத் தாழுங் கீழ்பாற்
செங்கதிர்வந் துதித்தாறு கன்னலுக்குட் பாரணந்தான் செய்தா ராகிற்
றுங்கமுறு கவளமொன்றுக் கனந்தபல முளதெனநூல் சொல்லு மாதோ. ()

அலைசெறிபாற் கடல்விடமுண் டருள்வான்முப் புரந்தழலுக் களிப்பான் மே
சிலைகுனித்த சிவனிரவிப் படிபோற்போர் சிவகதியிற் செல்வ ரன்றிக் (ருச்
கலைமுழுதுங் கற்றுணர்ந்த மாதவத்தீ ரன்னவர்முற் கருவின் மூவேழ்
தலைமுறையி லுள்ளவருஞ் சத்தியமுத் தியிற்சேர்த றப்பி டாதால். (௪௪)

அறைமறைமந் திரவிதியா லருச்சிக்க விராகிலரே லன்ப ருள்ளத்
துறைபரம னைந்தெழுத்தை யுச்சரித்தீ ரெட்டுவகை யுபசா ரத்தாற்
பொறைதருமன் புடன்பூசை புரிந்திடுக பொறியளிகள் பூந்தா தூது
நறைகமழ்செங் கமலமலர் நான்முகத்தோன் பூசையினு நயப்ப னம்பன். ()

விராகு-உணர்வு, தகுதி.

இத்தகையு சிவார்ச்சனைசெய் திடமாட்டார் விருத்தர்கொடி யிடையார் நோயு
ருத்தமநற் சிவநிசியி லூனுருவித் துயினீத்துச் சாம நான்குஞ்
சித்தமிகக் களிகூர்ந்து சிவபுரா ணங்கேட்டுச் செபங்கள் பண்ணி
முத்தனுறை சினகரத்திற் சென்றரனைச் சேவித்தன் முறைமை யாமே. ()

அசிக்கணுமை பங்கனைமுற் சாமத்தி லருச்சித்தாங் கதற்குப் பின்னர்ப்
பசிக்கழிந்தோர் நீர்சிறிது பால்சிறிது பருகவன்றேற் பழங்கள் சற்றே
புசிக்கசல பானநன்று மத்திமம்பால் பழமதமம் பொருவில் கந்தஞ்
சுசிக்கொளப்பந் தோசைபிட்டு மாந்தலத மத்தமஞ் சொல்லுங் காலே. ()

அசி-வாள்.

பகர்தருபா ரணமுழுவாப் புணர்ந்திடமுன் பலன்கொள்ளசவர் பண்ணல் வேண்டு, மிகறருழுப் புரமெரித்த புரமனுயர் சீர்த்திகளை யெடுத்து முன்னோர், புகல்சரிதை பாராட்டிப் பிற்பொழுது போக்கியெழு புரவீத் தேரோ, னகல்பொழுதிற் கடன்கழித்துத் துயில்வரற்றை யந்தியன்ன மருந்த லாகா.

பாரணந்தான் புரிந்ததற்பின் பகற்பொழுதிற் சோம்பொடுகண் படைசெய் தாரே, லாரணங்கள் பயின்றகுல வந்தணரைம் பதிற்றிரட்டி யாயினோரைக், காரணங்க ளொன்றுமின்றிக் கொன்றகடும் பழியடைவர் கருதுஞ் சாந்தி பேரணங்கி லோமமறை விதிப்படியே புரியிலந்தப் பிழைபோ மன்றே. ()

முத்தியினை விரும்பிமுதற் சங்கற்பந் தவறாது மூவெட் டாண்டு
பத்தியுட னிவ்விரத நோற்றதற்பின் வேதியர்க்குப் பசுப்பூ தான
நித்திலவெண் ணகைக்கன்னி காதான மன்னமுட னிதிய நல்கிப்
புத்தியுடன் சிவநிசியாம் விரதமொழி வதுவழக்காப் புகல்வர் மன்னோ.(௫0)

வேறு.

இந்தநல் விரதந் தனைச்சிவ னந்திக் கிசைத்திட வுணர்ந்துசெங் கதிரோன்
கந்தவேள் கதைக்கைக் காலன்விற் காமன் கடவுளர் கண்ணொரா யிரத்தோ
செந்தழற் கடவுண் மதிநிதிக் குபேரன் செப்பிய வரன்முறை நோற்றுத் (ன்
தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத் தகைபெறு தலைவரா யினரால். ()

என்றுரைத் திடலு நைமிச வனத்தி லிருந்தவ ரிருகரங் கூப்பி
நன்றுரைத் தனைநீ நானிலத் துள்ளோர் நவையறு சிவநிசி நோற்றிட்
டொன்றுதற் கரிதா முத்திபெற் றவர்க ளுளரெனி லுரையென வுயர்ந்த
குன்றுறழ்தவத்துச் சூதமா முனிவன் கூறுவன் கேண்மினென் றிசைப்பான்

இரும் தவர்-பெருந்தவத்தோர்.

சிவராத்திரிமான்மியச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௫௫.

---

## சுகுமாரச்சருக்கம்.

கந்த நாண்மலர்க் குவளைநட் புறுகதிர் மதியஞ்
சந்த னாடவிப் பொதும்பரிற் றவழ்ந்துசெல் சாரல்
விந்த மால்வரைக் குத்தரத் துததியின் விரிநீ
ருந்து வெண்டிரைச் சிந்துவென் றொருநதி யுளதால். (௧)

சந்தனாடவி-சந்தன அடவி என்றுபிரிக்க. உததியின்-கடல்போல்.

விடுங்க திர்த்திர ணித்திலக் கோடுகள் விரவி
நெடுந்த ருக்களை முரித்துநன் னீலவண் டார்ப்ப
வடுந்தொ ழிற்புரிந் தடவிமால் வரைநின்று வரலாற்
கொடுங்கொ லைக்கடம் பொழிகவுட் களிறெனக் குலவும். (௨)

நித்திலக்கோடுகள்-முத்துக்களோடீக்கப்பட்டுள்ள கரைகள் என்றும் முத்து
க்களை உட்பொருந்திய கொம்புகள் என்றுஞ்சிலேடையாகவுரைக்க.

கலைகள் கற்றறி புலவர்வாய்த் தோன்றிய கவிபோன்
மலையி னடப்பிறந் தளக்கரும் பொருள்கொடு வந்து
தலைமை யுற்றசீர் பெற்றுயர் சங்கமார்ந் தெங்கு
முலவி மாநிலத் தவர்களுக் கின்பமே யுதவும். (௩)

சங்கம்-சங்கு, சபை.

வந்து பூண்முலை யெயிற்றியர் வயிறலைத் திரங்கக்
காய்ந்த புற்குரம் பைகளழித் தம்புவிற் கவர்ந்தே
யாய்ந்த பாலையிற் குறும்புக ளடக்கிவே லரசர்
வாய்ந்த வெள்வளை முழங்கவந் தாலென வருமால். (௪)

கருது மந்நதிக் கரைமருங் குளதுகட் கமலத்
திரும கட்கணி யன்னது தேவரும் வியப்பத்
தரும நீதியுஞ் செல்வமுந் தழைப்பது தகைசால்
பொருவில் குஞ்சர புரியெனப் புகல்வதோர் நகரம். (௫)

உழவ ருவயற் கமலவாண் முசத்திய ருவப்ப
மழவ ருதநல் லாடவர் மணவினை முடிக்கும்
விழவ ருதவெண் சங்கொலி வீதிதோ றிரட்ட
முழவ ருதவம் முதுநகர்ப் பெருமையார் மொழிவார். (௬)
மழவு-இளமை.

நீரு கந்தகார் நிகர்நிறம் படைத்திடு நெடுமால்
ஏரு கந்தபைந் துகிலுடுத் தரிக்கலை யிகந்து
பாரு கந்தளந் திடநிமிர்ந் தாலெனப் படுமம்
போரு கந்திக ழகழிசூழ்ந் திடுநெடும் புரிசை. (௭)

வீழ்ந்து விண்டுகில் வேலையென் றுண்ணநீர் மிகுந்திட்
டாழ்ந்த கன்றுநீ டிஞ்சியை வளைந்தபே ரகழி
தாழ்ந்து மீதுய ரடிமுடிச் சக்கர கிரியைச்
சூழ்ந்து வெண்டிரைப் பெருங்கடல் சுற்றிய தொக்கும். (௮)

குறையில் பொன்னெயிற் குடுமியிற் றொடுத்துயர் கொடிக
ளறைதி ரைப்புன லகழிசூ ழ்ந்நக ரரிவை
நிறைவ னப்பெதிர் நோக்குறு மாடியா நிலவின்
கறைது டைத்திட நீட்டிய கரங்களிற் கவினும். (௯)

நிலவு மாமணி விமானங்க ணிலைத்திருந் தென்னப்
பலவு மால்வரைக் குலநிரைத் தெனக்கதிர் பரப்பி
யுலவு மான்மதிக் கூன்முது குரிஞ்சிட வுயர்ந்து
குலவு மாடகத் தியற்றிய கூடமா டங்கள். (௧௦)

மாற தாமென நிழலுடன் மலைகர மலைக
ளாற தாமென விடுமதம் பெருக்கெடுத் தலைப்பச்
சேற தாய்நெடுந் தேர்களுஞ் சனங்களுஞ் செல்ல
நீற தாய்த்துக ளெழுந்துவிண் புதைக்குநீள் வீதி. (௧௧)
கரமலைகள்-யானைகள்.

வையம் யாவையும் விலைபெற வளர்முலை வருத்த
நையு நுண்ணிடை நாரியர் புலவியிற் கழித்த
துய்ய மான்மதச் சேற்றொடு துவளுமுத் தாரஞ்
செய்ய மாமணிக் கலன்கிடந் தெறிப்பன தெருக்கள் (௧௨)

ஆதி நூலுண ரந்தணர் சாலைகளொருபா
னீதி மன்னவர் நிறைமணி மாளிகை யொருபா
லூதி யம்பெறு வணிகர்வாழ் வசதிக ளொருபாற்
கோதின் மண்மகள் புதல்வர்தங் குலமனை யொருபால். (௧௩)

மெலிக்கு நூலிடை யறுமென மேகலை யரற்றிச்
சலிப்ப நாண்மலர்த் தாளணி தண்டைநூ புரங்கள்

கலிப்ப நீடிய கார்தளங் கைவளை கலினென்
றொலிப்ப மாதர்க ளுடைக மாடரங் கொருபால். (கச)

அலைக டற்கடைந் தரிசுரர்க் கமுதளித் ததுபோற்
றலைமை பெற்றமுத் தமிழ்க்கட றாலமத் ததனா
னுலைவு றக்கலக் கிச்சுவை செவிப்புலத் துண்பான்
கலைகள் கற்பவர்க் குரைப்பவர் கழகங்க ளொருபால். (கரு)
தாலம்-நாக்கு. கழகங்கள்-வித்தியாசாலைகள்.

வார்வி சித்திடு மணிமுர சோதையுங் கொடிஞ்சித்
தேர்வி டுத்திடு மோதையும் பிளிறுசிந் துரங்கள்
போர்வி டுத்திடு மோதையும் புரவியின் கனைப்புங்
கார்வி டுத்திடு மோதையின் மும்மடி காட்டும். (கசு)

மறைவி ரித்துரை பயிற்றுந ரோதையு மன்னர்
இறைய ளக்கவந் தீண்டின ரோதையுந் தேவர்க்
கிறைமை யிற்றினஞ் சாறய ரோதையு மெழுந்திட்
டறைக டற்படு முழக்கமுந் துளக்குற வலைக்கும். (கஎ)
சாறு அயர்-திருவிழாநடத்துகிற.

துண்ட மாமதி தவழ்மதிற் றென்னக ரதனுட்
கண்ட வாருயிர்த் தொகைமுழு தடங்கிய கணக்கா
லண்ட கோளகை கவித்திடும் பேருல கனைத்து
முண்ட முண்டகக் கண்ணினா னுதரமொத் துளதால். (கஅ)

அரிபு ரந்தரன் விரும்புமந் நகரளிப் பவன்றே
னூரிபு ரந்தரித் துயர்வட வரைகுழைத் தருத்துத்
திரிபு ரஞ்சுடு சிவனடி சிந்தைசெய் பவன்றட்
பரிபு ரந்திகழ் திருவுறை பரபுரஞ் சயனே. (க௯)
நகரளிப்பவன் பரபுரஞ்சயன் என்றுகொள்க. வினையஇடைப்பிறவரல்.

காந்து செம்மணிச் சேடனுங் கமடமுங் கடம்பா
யேந்து கோட்டுமோட் டிபங்களோ ரெட்டுமெண் கிரியு
நாந்த கத்தொடு சமரமேற் றெதிருற நணுகும்
வேந்த ருஞ்சுமை யாறிட மேதினி பரிப்போன். (உ0)
மோடு-பருமை. நாந்தகம்-வாள்.

வேத நான்முறை திறம்பிடா தெங்கணும் விளங்க
மாதர் கற்பெனும் வரம்பழி யாமன்மா நிலத்தோர்
பாத கம்பழி பயின்றிடா தருள்விழி பரப்பி
யாத ரத்துட னறப்பயிர் வளர்த்தர சளித்தான். (உக)

அனைய கோமகற் காசிசொல் புரோகித னானோன்
வினையி னீங்கிய சுரர்குரு நிகர்ப்பவன் வெண்ணூல்
வனையு மார்பினன் முத்தழல் வேள்விகள் வளர்ப்போன்
றனைய ரின்றியே நெடிதுநாட் டவத்தொடு சரித்தான். (உஉ)

சொற்ற வேதிய னில்வயிற் றோர்சுதன் றீமை
முற்று மோருருக் கொண்டென முடங்குவெண் டிரைக

ளொற்று பாற்கட லிடைவிட முதித்தென வெழில்கூர்
பெற்ற மூர்மறைக் கொழுந்தினை தருள்பெறப் பிறந்தான். (உ௩)

தோன்று மைந்தனுக் குயர்சுகு மாரனென் றருளா
லீன்ற தந்தைபே ரிட்டழைத் தேர்மணி யழுத்தி
யான்ற பொன்னணி யணிந்தையாண் டணுகிடு மளவின்
மூன்று நூல்வினை நான்மறை விதிப்படி முடித்து. (உ௪)

ஆத வன்வட திசையணை யுத்தரா யணத்திற்
றீத கன்றிடு மோரைகூ டியசுப தினத்திற்
றூத விழ்ந்தவெண் டாமரை யாள்சரண் வழுத்திப்
பாத கம்பயின் மகற்குநான் மறைபயில் வித்தான். (உ௫)

ஆய்ந்த பற்பல கலைகளு மரவினுக் கமுத
மீந்த தாமெனக் கமரிடை யுகுத்தபா லென்ன
வோய்ந்தி டாமலற் பகலெலா முணர்த்திட வுணர்ந்து
வாய்ந்த காமவேள் கணைக்கிலக் காமெனை வளர்ந்தான். (உ௬)

கவள மால்களி றெனவரு காட்சிகண் டுருகித்
துவள நூலிடை நடந்துபின் றொடர்ந்துதா முலைத்
தவள வாணகை கோட்டிமா றருந்தனங் காட்டிப்
பவள வாயினார் காமுறு பருவமெய் தினனால். (உ௭)
மாறருந்தனம்-மால் தரும் தனம்-மயக்கம்பயக்குங்கொங்கை.

கஞ்ச நாண்மலர்க் கண்ணினன் கலைமதி தகர்த்து
விஞ்ச வேநிரைத் திணைசகிவைத் தனையவெண் ணகையான்
சஞ்ச ரீகமட் டார்பசுந் தாரொடுந் தழுவி
மஞ்சு கீண்டெழு மின்னென நுடங்குநூன் மார்பான். (உ௮)
சஞ்சரீகம் மட்டு ஆர்-வண்டுகள் தேனை உண்ணும்.

பெய்யு மாமழை முகிலெனப் பிளிறுசிந் துரத்தின்
கைய தாமெனக் கவின்றரு தாழ்தடக் கையான்
றுய்ய வாரிச முகைமுறுக் கவிழ்செழுந் துணரின்
செய்ய தாளினன் றேடரு மாடவர் திலகன். (உ௯)
துணர்-மலர்.

சொன்ன விண்டுவிற் றிரண்டுயர் பணைத்தடந் தோளான்
வன்ன மேகலை மடந்தையர் கண்கவர் வதனன்
கன்ன லஞ்சிலைக் காமனை காட்சிதந் தனையா
னன்ன வன்றிருப் பேரெழி லாரெடுத் தறைவார். (௩0)
சொன்னவிண்டு-பொன்மலை, (மேருமலை.)

தென்ற லந்தடந் தேர்மிசை வருமதன் செங்கை
மன்ற லம்புகள் படப்படப் பதைத்துளம் வருந்திப்
பொன்ற யங்குபூட் புணர்முலைக் கணிகையர் போக
மன்றி லென்றிட நுகர்ந்தவா வடங்கில னாகி. (௩௧)

பழுதி லன்புட னுதயமுற் பகருமுப் பொழுதுங்
கொழுந ரன்றியோர் கடவுளைத் தளிர்க்கரங் குவியா

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
---- NAGAR MADRAS-600 090.

வழுவில் கற்புடை மடந்தையர் தமைமன மருட்டித்
தழுவி யானின்த் தொருமழு விடையெனச் சரித்தான். (௩உ)

மாம ஞனன மசானன மாக்குமா ரிதழித்
தாம ஞகம புராணநூல் சதுர்மறை யென்னு
நாம நாவினி னவின்றிடா ஞெடொறுஞ் சிலைக்கைக்
காம ஞகமம் வேதமீ தாமெனக் கற்பான். (௩௩)

மாமன் ஆனனம் அசஆனனம் ஆக்கும்-மாமனுடைய (தக்கனுடைய) தலையை ஆட்டுத்தலையாக்கிய; ஆர்-ஆத்தி.

ஈடு வாடைமற் றிலேபன மெனுமருந் தியற்றிப்
பீடு சா னிறை முறைமையிற் பெருந்தகை பெற்ற
கோடு மாமணிக் கும்பநேர் குவிமுலை சுமக்கும்
வாடு நூலிடை மகளிரை வசப்பட மயக்கும். (௩௪)

ஈடு வாடை இலேபனம் எனும் மருந்து-இடுமருந்து வாடைமருந்து பூசுமருந்துகளை. கோடு-(யானைக்)கொம்பு.

உலக்கு நாளணித் தாயினர்க் கொளிக்குமீ னெக்கு
நலத்தி னேர்சிலைக் காமவே ணணுகினு நழுவாப்
பெலத்த முல்லையாந் தருக்களை வேரொடும் பிடுங்கி
நிலத்தி னீங்கிட விசைத்தெறி சுழல்வளி நிகர்த்தான். (௩௫)

உலக்கும் நாள் அணித்தாயினர்க்கு ஒளிக்கும் மீன்-சாகுங்காலங்கிட்டப்பட்டவருக்கு(க்கண்ணுக்கு)மறையும் அருந்ததி; முல்லையார்தரு என்றது-கற்பாகியவிருக்ஷங்களை. வளி-காற்று.

அந்தி வெண்பிறை முடித்தவ னடித்துணைக் கமலஞ்
சிந்தை செய்கிலன் றிருவுருக் களைச்சிலை யென்றே
நிந்தை செய்தன னீதியாய் நித்தமு மியற்றுஞ்
சந்தி வந்தனை மறந்தனன் றறந்தனன் றருமம். (௩௬)

திருஉருக்களை-தேவவிக்கிரகங்களை; சிலையென்று-கல்லென்று.

இந்த வாறிவ னொழுகிய படிறுகண் டியாருந்
தந்தை பாலெடுத் துணர்த்திடத் தனையனைக் கூவி
யந்த மாநகர்க் கலைஞரை யழைத்தரு கிருத்திச்
சிந்தை தேறுற வுறுதிநன் மதிபல செப்பும். (௩௭)

படிறு-தூர்த்தநடை, கூடாவொழுக்கம்.

பிறர்ம னைக்குரித் தாகிய பேதையைப் புணர்ந்தோ
ரறம கத்தநண் பொடுபுகழ் பெருமையோன் றடையார்
மறமி குத்தவெம் பவம்பழி மாற்றரு மச்ச
மிறலி யற்றிடும் பகையிவை நான்குமெய் திவோர். (௩௮)

நீடு ருதுநல் லிளமையென் றுளத்திடை நினைந்து
நாடு ரார்பிறர் மனையெனி ஞமரீர் வைப்பில்
வீடு ருப்புகழ் மேவுவர் வித்தைகை வித்தங்
கூடு ரார்நர கக்குழி கிடந்தழுந் துகிலார். (௩௯)

கைவித்தம்-கைப்பொருள்.

ஊறு தீர்மரத் தூரியி னென்றென வொன்றி
வேறு பேதகங் காட்டுபுன் யனத்தினோர் விழைவாற்
கூறு நீணிதி கவர்விலை மகளிர்பாற் குறுகி
யேறு காமமே நுகர்பவர்க் கிகபர மில்லை. (௪௰)

மரத்தூரி-புல்லுருவி. (குருவிச்சுஎன்றும் தேசவழக்கமுண்டு.)

என்று பற்பல நன்மதி துன்மதி யிதயந்
துன்று மச்சுகு மாரனுக் குரைத்தலுஞ் சொற்ற
தொன்று மற்றவன் செவிப்புல நுழைந்தில துபலஞ்
சென்று தைத்திடா நெடுமர முளையெனச் சிதைந்த. (௪௧)

உபலம்-கற்பாறை.

கப்பி நாடொறுங் கழித்துண வளிப்பினுங் கோழி
தப்பி லாதுபுன் குப்பைபோய்க் கிளைத்திட றவிரா
தொப்பி னூல்படித் துறுமதி யோர்பல கோடி
செப்பி னாலுந்தம் மனம்புரி செயல்விடார் தீயோர். (௪௨)

களிப்பி னுஞ்சுடுங் கடவுளர் கடல்கடை யமிர்த
மளிப்பி னுஞ்சுடு மறைதிரைக் குளிர்புன லகத்துக்
குளிப்பி னுஞ்சுடுங் குன்றுறு குகைகளிற் குறுகி
யொளிப்பி னுஞ்சுடுங் காமமிக் கூர்தர வுழன்றான். (௪௩)

தூய நீத்திழி தொழில்புரி தூர்க்குணத் திவனைத்
தாயு நீத்தன டந்தையு நீத்தனன் றமர்க
ளேய நீத்தனர் நிலநிதி மகளிர்மே னிகழு
மாய நீத்ததின் மயக்கறத் துறந்தவர் மனம்போல். (௪௪)

நிலம் நிதி மகளிர்மேல் நிகழும் மாயம்-மண் பொன் பெண்களிடத்துண்டாகும் ஆசை.

தொழுகு லத்தவர் மரபினிற் றோமறத் தோன்றிப்
பழுது பற்பல விளைத்திழி குலத்தொழில் பயின்றான்
முழுமு தற்பொரு ளாய்மறை நடஞ்செய்நான் முகத்தோ
னெழுது மத்தக விதிவழி விலக்கினோ ரெவரே. (௪௫)

தொழுகுலத்தவர்-பிராமணர்; மத்தகவிதி-தலைவிதி.

கன்னி மாடமுங் கடிமதிற் காவலுங் கடந்து
துன்னு மாரிருட் பொழுதின்மங் கையர்முலை தோய்வா
னன்ன மன்னவர் தமைப்பிறர் விலக்கினு மமையா
ரின்ன தன்மையி னிங்கிவை நிகழ்ந்துறு மேல்லை. (௪௬)

முத்த மீதினு முளரிமென் முகிழ்முலை முகத்தும்
வைத்த பற்குறி நகக்குறி கண்டுதம் மனையார்
தத்த மக்குள கற்பழிந் தாரெனச் சலித்துக்
கைத்த சிந்தைய ராகியக் கடிநக ருள்ளார். (௪௭)

முத்தம்-உதடு.

காவல் கட்டழித் திரவினிற் கரவினா லெய்தி
யாவ ரீத்தொழில் புரிபவ ரெனமனத் தெண்ணிப்
பாவ முற்றிய படிற்றொழுக் கச்சுகு மாரன்
மாவ னப்புடை யான்செய லிதுவென மதித்து. (௪௮)

அற்ற நோக்கியாம் பற்றினு மகப்படா ளுசை
பெற்ற மாதர்நம் மொழிப்படி யினிமனம் பிரியா
ரிற்ற தாகுமில் வாழ்க்கையென் றிரங்கியுட் கவலை
யுற்று ளோர்திரண் டென்செய்கே மிதற்கென வுசாவி. (சக)

அற்றம்-சோர்வு.

## வேறு.

காசினி யென்னு மாதின் கலிக்கரி யாடை நீக்கி
மாசகல் புகழ்வெள் ளாடை சாத்திய மன்னன் முன்போய்க்
கூசுத லின்றி நந்தங் குறைதிறந் தறைவோ மென்னத்
தூசகல் வாரின் மான மிழந்தவர் துணிந்து சூழ்ந்து. (ருo)

கலி-பாவம், தூசு-வஸ்திரம்.

கால்வழி சென்னீ ரென்னக் கருத்தொருப் படுத்தி மான
வேல்வழி கண்ட நெஞ்சர் வெள்வளை கொழுக்கள் கீண்ட
சால்வழி பரந்து மேயுந் தண்பணை நாடு நீதி
நூல்வழி புரக்கு மன்னன் வாயிலை நோக்கி யேகி. (ருக)

கால்வழி செல் நீர் என்ன-வாய்க்கால்வழிஓடுகின்ற தண்ணீர்போல; மானவேல் வழிகண்ட நெஞ்சர்-மானமாகியவேல்துளைத்துப் புறத்தேயோகப்பட்டநெஞ்சினைர்; வளை-சங்கு.

வாயிலோர் தம்மைக் கண்டெம் வரவுரைத் திடுதி ரென்னப்
போயிலோர்க் கன்னை யன்ன புரவலற் போற்றி மாந்த
ராயினோர் கோடி யோரிங் கடைந்தன ரென்னக் கஞ்சக்
கோயிலோ ரிருவர் மேவுங் கொற்றவன் கொணர்மி னென்றான். (ருஉ)

போய் இல்லோர்க்கு என்றுபிரிக்க; கஞ்சக்கோயிலோர் இருவர்-இலக்குமி சரசுவதி.

அரசர்கோ னருளிப் பாடெல் றவரையுட் புகுத்தப் போந்து
கரசரோ ருகங்கள் கூப்பிக் கனைகழற் றாளிற் றாழ்ந்து
பரசநீள் கடைக்க ணோக்கம் பரப்பிநுங் குறையா தென்ன
முரசகே தனனை யொப்பாய் கேளென மொழிய லுற்றார். (ருங)

பரச-துதிப்ப; முரசகேதனன்-முரசக்கொடியோன் (தருமராசன்.)

பூசுர குலேச னின் புரோகிதன் மைந்த னைந்து
வாசநீள் கணைக ரந்த மதன்சுகு மார னென்பா
னீசனாய்த் தனது சாதி நீதியா நியம நீத்துத்
தூசகல் கரவு வஞ்சஞ் சூதுசெய் தூர்த்த னாகி. (ருச)

பூசுர குல ஈசனும்-பிராமணகுலசிரேட்டனாயிருக்கிற.

சூல்வளை முழங்கி யார்க்குந் தொடுகடல் வளாக வைப்போர்
கோல்வளை யாமற் காக்குங் குரிசினின் னகரந் தன்னிற்
கால்வளை வரிவில் லேய்க்குங் கருங்கொடிப் புருவ மின்னார்
மால்வளை மனத்த ராய்க்கற் பிகந்திட வருத்து கின்றான். (ருரு)

வளாகம்-நிலம்; கற்பு இகந்திட-கற்புநீங்கும்படி.

இல்லின்மே வியமின் னார்தங் குணகுண மெவர்க்கு முன்னுஞ்
சொல்லநா ணுறுவர் யாருந் தோற்றுநோய் துடைத்து மாற்ற

வல்லரா மருந்து வர்க்கு மறைப்பவ ருளரோ மன்ன
புல்லரே மானங் காத்துப் புரந்தரு ளெம்மை யென்றார். (ருசு)

கேட்டபோ திருகைப் போதாற் கிளர்செவித் துளைகண் மூடிக்
கோட்டமி றணிக்கோ லோச்சுங் கோவிரு கோக்கள் சேப்ப
வாட்டமில் குமுதச் செய்ய வாயிதழ் துடிப்ப விந்த
நாட்டர சளித்த நீதி நன்றுநன் றென்ன நக்கான். (ருஎ)

கோ-அரசன்; இருகோக்கள்-இருகண்கள்.

சீற்றமீக் கூர நின்ற சேனைகா வலரை நோக்கி
மாற்றரும் படிற னாகி மறைக்குலந் தோன்றி னானைக்
காற்றென விரைந்து சென்றிக் கணத்தினிற் கொணர்மி னென்றே
வேற்றுரி முரசு நாண வீடியென முழங்கிச் சொன்னான். (ருஅ)

சீற்றம்-கோபம்.முரசும் நாண என்றுபிரிக்க.

குரைகடல் விடத்திற் றோன்றுங் கூற்றுவன் றூதரொப்பா
ரரைநொடிப் பொழுதி லோடி யந்நகர் முழுதுந் தேடி
வரையில்புன் றொழில்க ளாற்று மறையவன் றன்னைப் பற்றி
விரைவுடன் கொணர்ந்து கொற்ற வேந்தர்கோன் றிருமுன் விட்டார்

வெய்யவேல் விடலை தூர்த்த விப்பிரன் றன்னை நோக்கிச்
செய்யநான் மறையோர் நீதி திறம்பிடு மிவனைச் சென்னி
கொய்திட வேண்டு மென்னக் குலமறை யவரைக் கோற
லையநின் மரபு நீதிக் கடாததென் றமைச்சர் கூற. (சு0)

கோமுகங் குளிர்ந்து கோபக் கொடுங்கன றணிந்து பின்ன
ரேமுகக் கருங்கண் மாதர்க் கிசைந்தகற் பெனுங்கான் காம
மாமுகத் தீயி னாற்சுட் டரும்பழி சுமந்த விந்தக்
காமுகன் றனைநம் மெல்லை கடத்திநீர் விடுத்தி ரென்றான். (சுக)

ஏமுகம்-அம்பலகு; காம மாமுகத் தீ-காமமாகிய வடவாமுகாக்கினி; காமமாம் உகத்தீ என்றுபிரித்து காமமாகிய ஊழித்தீ என்றுரைப்பினும் அமையும். நம் எல்லை கடத்தி-நமதுநாட்டினின்றும்நீக்கி.

அனையரவ் வுரைகேட் டந்த வந்தணன் றன்னைப் பற்றி
வனைகழன் மன்னன் காக்கு மாநிலங் கடத்தி யப்பால்
வினைவலி யுனக்குச் சூழ்ந்த தென்றவர் விடுத்து மீண்டார்
சினைவளர் தருக்கண் மேவுங் கானெறி சேணிற் சென்றான். (சுஉ)

விண்ணுறு வரைக ளென்ன விளங்குதன் றுணைத்தோள் சேர்ந்த
பண்ணுறு மொழியி னாளை நினைதொறும் பரிந்து நீண்ட
கண்ணுறு புனலா றென்னக் கலுழவேள் கணைகள் பாய்ந்த
புண்ணுறு மார்பிற் றென்றல் புகுந்தழல் போல வீச. (சுரு)

அடுசினக் கரடி கோடி யாடுநீ டரவ மாளி
படுமதக் கலுழி தூங்கும் பணைக்கைமால் யானை பாயுங்
கொடுவரிப் புலிவாழ் காட்டிற் கூளிபோற் றனித்துத் துன்பத்
தொடுதிரிந் துழல்வான் றன்மு னோடையொன் றுற்ற தன்றே. (சுச)

கோடி ஆடும்-வளைந்தாடுகின்ற; மதக்கலுழி-மதயாறு.

தத்திவீழ் திரைக ளெற்றத் தவழ்ந்தூற் சங்க மீன்ற
நித்திலஞ் சரைக டோறு நிலவுகா னிழனீர்ப் பொய்கை
மெத்திய நீள மாழம் விரிவுறு மகல மெல்லா
மத்தியென் றுரைப்ப தல்லா லாரதன் பெருமை சொல்வார். (௬௫)
நித்திலம்-முத்து; அத்தி-கடல்.

அம்புய முகமென் காவி யம்பக மாம்பல் வாய்வெண்
கம்புகந் தரங்கோ கங்கொங் கைசணைக் கால்வ ரால்கூர்
மம்புகழ் புறந்தாண் ஞெண்டு வருமுழுந் தாள்க ளாகப்
பம்புநீர்ப் படுகர் மென்சொற் பாவைய ருருவங் காட்ட. (௬௬)
அம்பகம்-கண்; கம்பு-சங்கு; கந்தரம்-கழுத்து; கோகம்-சக்கிரவாகப்புள்;
வரால் கூர்மம் என்றுபிரிக்க. கூர்மம்-ஆமை; படுகர்-வாவி.

முரிதிரைச் சிலைகால் கோட்டி மூசுவண் டெனுநாண் பூட்டி
விரிமலர்க் கழலங் காவி விசிகங்கள் விரைவின் மாட்டிப்
பிரிவெனுந் துயராற் றுவிப் பிரன்றனைப் பெருத்த பூசல்
புரிதர மதனின் றென்னப் பொலிந்ததப் பொய்கை மன்றோ. (௬௭)
விசிகங்கள்-பாணங்கள்; பெருத்த பூசல்-பெரும்பொர்.

மூண்டவெம் பசியாற் செய்ய முளரியார் முளரி யெங்கு
மாண்டமீ னிரைதேர் வன்மீன் வாய்ப்படா துகண்டு தப்பித்
தூண்டகு வாளை தாவுந் துழனிகேட் டெழுந்து துள்ளி
நீண்டபைங் கயலை நேடித் துரந்துபோய்ப் பாயு நீர்நாய். (௬௮)
செய்யமுளரி-செந்தாமரை; ஆர் நிறைந்த; முளரிஎங்கும்-காடுமுழுவதிலும்.
தூண் தகு வாளை என்றுபிரிக்க; பாயும் துழனி-பாயும்ஆரவாரம்.

முத்தியி லவப்பொய் வேட முயன்றுகண் முகிழ்த்தி யோகம்
புத்தியி னிருந்து தீமை புரிபவ ரென்னத் தூங்கித்
துத்தியா டரவி னெட்டைக் கழுத்தினைச் சுருக்கி மீனைக்
குத்திநுங் கிடக்கண் மூடி யிருப்பன குரண்டங் கோடி. (௬௯)
முகிழ்த்து-மூடி; நுங்கிட-விழுங்க; குரண்டம்-கொக்கு.

ஈட்டுவல் வினையின் சொட்பா லெடுத்திடு மியாக்கை மாண்டு
மீட்டும்வந் துலகிற் றோன்றும் விகற்பமித் தன்மை யென்னக்
கோட்டுவெண் டிரைகண் மோதுங் குரைகடற் புவியுள ளோர்க்குக்
காட்டுவ தென்ன நீரிற் குளித்தெழு கரண்டங் கொள்ளை. (௭0)
கோடு-கரை; கோட்டு-கரையில்; கரண்டம் நீர்க்காக்கை.

தூயவெண் ணிறக்கூன் சங்கஞ் சூலுளைந் தேறி முட்டாண்
மேயசெங் கமலப் போதின் மீதிருந் தொளிருந் தோற்ற
மாயர்கண் படைகண் டன்றோ ரகத்துறி சரிந்து மாயன்
சேயகைத் தலத்தில் வாரித் திரட்டிய வெண்ணெய் போலும். (௭௧)
முட்டாள் என்பதை முள் தாள் என்றுபிரிக்க; ஆயர்-இடையர்; கண்படை-நித்திரை.

கல்லுநீர்க் கயத்து மீனைக் கதுவவீழ்ந் ததுபெ ருமற்
சில்லுகிர்ச் சிரலை வெள்கிச் சிறைவிரித் திருப்ப தோர்பாற்

சொல்லுகற் றிகிரிப் புள்ளுத் துணைச்சிறை புலர்த்திக் கோதிப்
புல்லுயிர்ப் பேடை யோடு புளினமே னடப்ப தோர்பால். (௭௨)

சிரலை-ஒருசாதிப்பட்சி; உகிர்-நகம்; திகிரிப்புள்-சக்கிரவாகப்பட்சி; புளினம்-மணற்குன்று.

மண்டணி லுயர்ந்த பெண்ணைக் கிழங்கினை வகிர்ந்தா லன்ன
துண்டவண் டானஞ் சூழ்ந்த தொழுதிக ளொருபா னீருட்
கொண்டருந் தாக நீங்கிக் குதிக்குமா வினங்க ளோர்பா
லொண்டழை சிறைப்பா லன்னங் கின்னர மிதுன மோர்பால். (௭௩)

பெண்ணைக்கிழங்கு-பனங்கிழங்கு; வகிர்தல்-கிழித்தல்; துண்டம்-அலகு; வண்டானம்-கொய்யடிநாரை; தொழுதி-கூட்டம்.

இன்னதன் மையநீர் வாவி யிருங்கரை தன்னி னெய்தித்
தன்னமர் பேடை தன்னைத் தழீஇச்சிறைக் கரத்துள் ளாக்கி
யன்னமா தரவிற் புல்லு மதுதெரிந் தணங்க னார்மேற்
பன்னரு மாசை கூர விருந்தனன் பரிவுற் றிப்பால். (௭௪)

வேறு.

பஞ்சணி பதப்பரி புரத்தொலி பரப்பி
நஞ்சன விழிக்கடை குழைக்கய னடப்பக்
குஞ்சர மருப்பினிரு கொங்கைகள் குலுங்க
வஞ்சியென வோர்புலை மடந்தையவ ணுற்றாள். (௭௫)

பரிபுரம்-காற்சிலம்பு. குழை-காது. குஞ்சரம்-யானை.

மன்றல்கமழ் மாலையணி வார்குழ றனக்கு
மின்றமிழ் மொழிக்குமை விழிக்குமெய் யொளிக்கு
மென்றளி ரடிக்குநிகர் வேறுலகி லொப்புண்
டென்றவ டனக்குவமை யாவர்புகல் கிற்பார். (௭௬)

ஏர்மருவு நூனிக ரிடைக்கொடி நுடங்கத்
தார்மருவு வார்குழல் சரிந்திட விரிந்தே
யார்பத மிரங்கவரு மன்னநடை மின்னை
மாரனிக ரானசுகு மாரனெதிர் கண்டான். (௭௭)

ஆர்பதம்-வண்டு.

பொன்னுலகில் வாழுமட மாதுகொல் பொறிப்பைப்
பன்னக நகர்க்கணுறை பாவைகொல் பசுங்கார்
மின்னவிர் சிலம்பினுறை மெல்லியல்கொ லென்னா
வின்னன நினைந்துபி னெழுந்தருகி லெய்தி. (௭௮)

பொறி பை பன்னகம்-புள்ளியானபடமுடைய சர்ப்பம். சிலம்பு-மலை.

சேயவரி வாள்விழி யிமைத்திடு திறத்தாற்
றோயநில மீதடி மிதித்திடு சுவட்டா
லாயபுவி மீதுவள ரன்னமிவ ளென்னத்
தீயகுண வேதியன் மனத்திடை தெளிந்தான். (௭௯)

மங்குனிற முற்றிடு மடப்பிடியை நாடும்
வெங்கய மெனத்தனி விரைந்துமு னடந்தே
யிங்கெனெதி ருற்றிடுவன் யாவனிவ னென்னாத்
திங்கணிகர் வாணுத டிகைத்தன டரித்தே. (௮0)

ஏமமணி மால்வரை யெனக்குலவு கொங்கை
வேமசனி காலுமுகின் மீதெழு தடித்தின்
வாமமிகு நேரிடை மடந்தையரை வெல்லுங்
காமனிவ னாமென மனத்திடை சுணித்தாள். (அக)
ஏமம்-பொன். அசனி-இடி. தடித்தின்-மின்போன்ற.

உட்புலமை யற்றுமய லூற்றசகு மாரன்
மட்குட மெனத்திகழ் வரைப்புய மிலக்காய்க்
கொட்புற நெரித்தபுரு வச்சிலை குனித்தே
கட்கணை தொடுக்கவிர கக்கடல் குளித்தான். (அஉ)

முளைத்தெரி கனற்கணெய் முகந்துகுவ தென்ன
விளைத்தமரில் வென்றிபுனை வேள்கழையி னீள்வில்
வளைத்துமண மேவுமலர் வாளிகொ டெந்தான்
துளைத்தவ னுரத்தினிடை தூவலள வாழ. (அங)
கழை-கரும்பு. தூவல்-(அம்பின்) இறகு.

மெய்வச மழிந்துதழன் மீதின்மெழு காகிப்
பொய்வசன மன்றிது புலங்கொளுதி பொன்னே
உய்வதரி தாமுயி ருலந்துபடு முன்னுன்
கைவச மெனுவிவை கரைந்தன னிரங்கி. (அச)

இக்குவளை வார்விலி னிருத்திமத னேவு
மக்குவளை வாளிவரு மென்றுமன மஞ்சேன்
மிக்குவளை மீதுலவி மீளுநின் முகத்தின்
மைக்குவளை தானருள் வழங்கலுறின் மாதோ. (அரு)

இக்கு-கரும்பு. அ குவளை-அந்தக்குவளை(மலர்). மிக்கு வள்ளைமீது உலவி-மேற்பட்டு வள்ளைக்கொடிபோன்றகாதளவுஞ்சென்று. மைக்குவளை-கருங்குவளைமலர்போன்றகண்.

தீரமுறு வேலைவரு செய்யதுவர் வாயி
னாரமுறு வாணில வரும்பிடி னணுத்தான்
கோரமுறு மாரழு லெனக்குட திசைக்க
ணீரமுறு வாணிலவு தென்செயு மெழுந்தே. (அசு)
தீரம்-கரை. வேலை-கடல். துவர்-பவளம். ஆரம்-முத்து. கோரம்-பயங்கரம்.

கூடவிழை யாகவளர் கும்பமுலை யென்று
மாடன்மத மால்களிறெ னக்கைவச மாகு
னீடனுவ ணக்கியமர் நித்தமு மியற்றும்
வேடனுபர் வேழமதை வேறன்மிகை யன்றே. (அஎ)
நீள் தனு-நெடியவில். வேள் தன்-மன்மதனுடைய. வேழம்-யானையாகிய அந்திக்காலம்.

தூயகுமு தத்தினுறு தொண்டைதுவ ரொக்கும்
வாயினித முற்றகுடி நீரது வழங்கிற்
காயமுட னத்திகள் கனற்றிவரு பித்த
[illegible]ப்பெரிய வெப்பவியு மெற்கே. (அஅ)

என்றலை மருட்டுகுழ லுக்கிணைய கூறித்
துன்றலை கடற்படு துரும்பினிலை யற்றோன்
மன்றலை மிகக்கமழ் மலர்க்கர மெடுத்துத்
தன்றலை குவித்திரு சரண்டொழுது நின்றான். (௮௯)

என்று அல்லை மருட்டும் குழலுக்கு-என்று இருளை ஏமாற்றுகின்ற கூந்தலினளுக்கு. துன்று அலை-நெருங்கிய திரை.

மம்மருற வேள்கணை வருத்தமய லென்னு
மம்மகர வாரிதி யடக்கலரி தாகி
விம்மமன மீதது வெளிப்படைசெய் வாளாய்ப்
பொம்மன்முலை யாள்சிறிது புன்னகை புரிந்தாள். (௯௦)

செம்பவள வாயிதழ் திறந்தெயி றிலங்கக்
கும்பமுலை யாண்முறுவல் கொண்டகுறி கண்டே
வெம்புதழ லொத்தவிர கத்தினின் மிகுத்தோ
னம்புய மலர்க்கையவ ளங்கைமலர் பற்றி. (௯௧)

ஏகமன மாகியிரு வோருமெவ ராலும்
போகவரி தாகுமொர் பொதும்பரிடை புக்கு
மேகநிற மானபிடி யுங்கரட மேவு
நாகமு மெனக்கலவி நன்னல நுகர்ந்தே. (௯௨)

நாகம்-யானை.

வேறு.

இன்றளவு மன்றுடல மெத்துணைநா ளினியிருக்கு
மன்றளவும் பிரியாம விருப்போமென் றலராத
மென்றளவ முகைநகையும் வேதியனு மிசைந்துதம்மிற்
புன்றசைகண் முடைசமழும் புலைப்பாடி தனிற்புகுந்தார். (௯௩)

தளவ முகை நகை-முல்லையரும்பொத்தபற்களையுடையபெண். புன் தசை கள் முடை கமழும்-இழியஇறைச்சியுங்கள்ளும் துர்க்கந்தம்வீசும்.

தரைபயிலான் பசும்பச்சை தனைக்கவ்வி யிசித்துசளுங்
குரைமுகநாய்ச் சிறுபறழின் குறுங்கழுத்தி னெடுங்கயிற்றாற்
சுரைபடர்நீள் புற்குரம்பை துன்றுகரும் புதல்வர்பிணித்
தரையினிசைத் திடுசதங்கை கறங்கிடவீர்த் தாட்டயர்வார். (௯௪)

பச்சை-தோல். இசித்து-இழுத்து. பறழ்-குட்டி. அரையின் இசைத்திடு சதங்கை கறங்கிட-அரையிற்கட்டியசதங்கை ஒலிக்க.

அணைந்திரைநன் மணிவரன்றி யார்த்திடுமார் கலியமிழ்திற்
கிணைபுகல்மென் மொழிபயிலா விளங்குழவி பசிக்கிரங்கித்
துணைமுலைப்பால் சுரந்தருத்தித் தோற்பாய றனிற்றுயிற்றிப்
பிணைவிழிப்புன் புலைமகளிர் தாலாட்டு மிசைபெருகும். (௯௫)

வரன்றி-வாரி. பாயல்-சயனம்.

பிறங்கியபுன் மாலைகளிற் பெருங்குடம்பெய் பிழிபருகிக்
கறங்குபறை முகத்தறைந்து களித்தாடிக் களைத்துவிழுந்
துறங்குபறைப் புருடர்துயி லொழிந்தெழுவான் புலரிதனின்
மறங்குலவு முட்படைக்கால் வாரணங்க ளொலியிடும். (௯௬)

பிழி-கள்ளு. வாரணங்கள்-கோழிகள்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
THIRUVANMIYUR :: MADRAS-41

இத்தகைய புலைச்சேரி தன்னிலிருந் திருண்டமன
மத்தனெனப் புலவுதின்று மதுப்பருகி வசமழிந்து
முத்தநகைப் புலைமகடன் முலைநலத்தே றலுநுகர்ந்து
சித்தமிகக் களிகூர்ந்து சிலநாட்கல் கழித்ததற்பின். (௯௭)
மத்தன்-பிராந்தியுற்றவன். முத்த நகை-முத்துப்போலும்பற்கள். தேறல்-கள்ளு.

பங்கயக்கட் புலைமகளாற் பன்னமெனப் பகர்வயிற்றுச்
செங்கண்மழ விடைபோலச் செனித்துதித்தார் சிறுவரைவ
ரங்கவர்க்கு மதுப்பிசித மருத்தியருத் தியின்வளர்க்கப்
பங்கமிகுங் கடற்புவியிற் பாதகமைந் தெனவளர்ந்தார். (௯௮)
ஆல் பன்னம்-ஆலிலை. பிசிதம்-ஊன். பங்கம்-சேறு.

மன்னுநெடும் பொதியவரை மன்றல்கமழ் தென்றலுடன்
பன்னுதமிழ் பயந்ததெனப் பண்ணவர்பற் பலர்பயிலும்
பொன்னுலகி லரம்பையுருப் பசிநிகராம் பொற்பினுடன்
பின்னுமிரு கன்னியரைப் பெற்றுமணப் பிரியமுற்றான். (௯௯)

மறமறலி யையவரென வளருமைந்து மைந்தருடன்
கறைவடிவாட் படைகதைகூர்ங் கணைநெடுங்கார் முகந்தாங்கி
யறைதருபே ரடவிகளி லாறலைத்துப் பொருள்வவ்விச்
சிறைபடுநீர்க் கயல்கவர்ந்த சிரலையெனக் கடிதகல்வான். (௧௦௦)
கறை-இரத்தம். ஆறு அலைத்து-வழிச்செல்வோரைவருத்தி. சிரலை-சிச்சிலிப்புள்.

அந்தணரெண் ணிலர்குழக்கன் றானிடப மளவிறந்த
கொந்தவிழ்நாண் மலர்க்கோதைக் கோதையர்கள் குதலைமொழி
மைந்தர்நரை முதிர்விருத்தர் வருந்துறவர் வருந்துறக்கொல்
லிந்தவிதக் கொலைகடம்மை யாவர்கணித் தெடுத்துரைப்பார். (௧௦௧)

புக்குபுனற் றடங்கரையிற் புரிதருகண் ணியிற்படுத்துத்
தொக்கநெடுங் கயலிரைதேர் தோலடிப்புட் டிவர்முட்டாண்
மிக்குயர்வண் டானமுடன் விரிந்தசிறைப் பெரும்போதாக்
கொக்குமுதற் பக்கிகளைக் கொன்றுகொன்று தின்றுபின்னும். (௧௦௨)
முட்டாள் என்பதை முள் தாள் என்றுபிரிக்க. வண்டானம்-கொய்யடிநாரை.
போதா-பெருநாரை.

மேவீவளர் வனங்கடொறும் வில்வணக்கி விறற்பகழி
தூவிவெரு வொடுகுதித்துத் துள்ளுபுள்ளி மானினங்க
டாவியுக ளிரலையுரற் றலைக்கேழன் மரைக்குலங்க
ளாவிசெகுத் தூனருந்தி யடுபுலிபோற் றிரியுமந்நாள். (௧௦௩)

விரிந்தகொடு வினைவசத்தான் மெயிற்பிணிகள் பிடித்தலைத்துப்
புரிந்தசுரு ளிருளோதிப் புலைமகள்பொன் றிடப்புலம்பிப்
பரிந்தனலின் மெழுகாகிப் பற்பலநாட் பயில்பெடையைப்
பிரிந்தவன்றிற் சேவலெனப் பெருந்துயரக் கடல்வீழ்ந்தான். (௧௦௪)

எழுமயங்கு முளந்தேறு தேங்குமுடற் பொறைசோர்ந்து
விழுமிருகட் புனல்குமிழி விட்டோட விம்மிவிம்மி

யழுமசனிக் குடைந்துபுர ளரவெனநீ ணிலந்தலையா
லுழுமிரங்கும் வெதும்புறமெட் டுயிர்ப்புயிர்த்துப் புழுங்கிமொல் (௧0௫)

கண்மணியே யெனதாசைக் கங்குல்விடிந் திடவுதித்த
விண்மணியே யிப்பியின்வாய் விண்டுமிழும் வெண்டரளத்
தண்மணியே பாற்சலதி தருமமுதே தயங்குகதி
ரொண்மணிநீத் திமெரவி னுனையிழந்து ழுய்வேனோ. (௧0௬)

துப்புறழ்செவ் வாயிதழுந் துடியிடையுஞ் சடிதடமு
மைப்புருவக் கார்முகமு மதிமுகமு மிருவிழியுங்
கொப்புலவு மிருகுழையுங் குருகுலவு கரத்தழகு
மெப்பிறவி பிறந்துனைநா னினிக்காண்ப தென்றயரும். (௧0௭)

கொப்பு-ஒருவகைக்காதணி. குருகு-வளையல்.

ஓங்கிளைய பெருந்துயர முழந்துமிக வருந்துமந்நாட்
பூங்கமலக் குறமுகைபோற் புடைத்தரும்பிக் குமிழ்த்தெழுந்து
கோங்கமுகை யெனக்குலவக் கொங்கைகளங் கவனளித்த
மாங்குயிற்சொல் லியர்விரக மருவுமங்கைப் பருவமுற்றார். (௧0௮)

மாரிவளந் தருமுகிலை மணிக்கருநீ ணிறமணலை
வேரிகமழ் செழுந்துணர்கள் விளங்கிதழிக் கருங்கனியை
நீரிலெழுஞ் சைவலத்தை நிகர்த்துநெய்த்து நெறித்திருண்ட
காரிருளின் பிழம்பென்னக் கவின்கொண்ட கருங்குழல்கள். (௧0௯)

வேரி-தேன். சைவலம்-பாசி.

கஞ்சநெடுங் கயல்கமழுங் காவிபிணை கணைக்கிணையா
யஞ்சனந்தோய்ந் தடலனங்க ளுகமங்கற் றலைகடலி
னஞ்சமுதங் கலந்திலங்கு நகுமணிப்பொற் குழைகிழித்து
வஞ்சமிகுங் கொலைபயின்று மதர்த்தனவால் வரிவிழிகள். (௧௧0)

கன்னியர்க ளின்னணநற் கலைவளர்ந்த மதியமொப்பத்
துன்னியமுட் டாட்சமலத் தூயமுகை முறுக்குடைந்து
மன்னியமென் றேடவிழும் பதனோக்கி மதுநுகர்வா
னின்னிசைப்பூம் பொறிச்சுரும்ப ரிருந்ததென விருந்தவனும். (௧௧௧)

இருந்தவன் என்றது-சுகுமாரனை.

செக்கரெழு மிளமதியுந் தென்றலுமன் றிலும்பசைப்பக்
கைக்கணைகொண் டடர்ந்துமதன் கடும்பூசல் பொரக்கனலின்
மிக்ககொடுங் காமமெனும் விடந்தலைக்கொண் டாற்றிலனாய்
மக்களிரு வரையுமன மருண்டுமனை யெனமணந்தான். (௧௧௨)

பெருவரைபோ லகன்மார்பிற் பிறங்கியபொற் சுணங்குபொடித்
திருவரைக ளெனவளரு மிளமுலைக்கோ டுழுதுழக்கப்
பொருவருமா தரவினுடன் புணர்ந்துநல னுகர்ந்திடுநாண்
மருவருபூங் குழலியரு மைந்தரிரு வரைப்பயந்தார். (௧௧௩)

தரைமிசைத்தன் புதல்வியர்க டாமீன்ற தனையரிரு
வரையுமன மகிழ்ந்தெடுத்து மடிமீது வைத்துமுரி

திரையெறிவா ரிதிபிறந்த தெள்ளமுதக் குதலைகள்கேட்
டுரைதருவெண் ணுரைச்சுரையூ றாட்டிவளர்த் துவப்புற்றான். (௧௧௪)

சுரை-கள்.

## வேறு.

இவ்வண்ண மிங்கிவன்றா னிருந்திடுநாட் பசும்பாவி யிரவி தன்னை, மைவண்ணப் பாந்தள்பகு வாயினிற்பெய் துமிழ்காலை மறையோர்க் கெல்லாஞ், செவ்வண்ணக் கனகமுதற் கலைமுலைப்பாற் றுரைவிடுஞ் செருத்த னல்லான், கொய்வண்ண மலர்க்கோதை கோமகன்றான் றானமிகக் கொடுப்பவாங்கி. (௧௧௫)

இரவி தன்னை உமிழ் காலை என்றது- கிரகணவிமோசனகாலத்தை. கலை-வஸ்திரம். செருத்தல் ஆன்-மடியையுடையபசு.

வந்தநல்லந் தணர்கடமை வனசரியின் மறித்துருத்து மைந்த ரோடுங்
குந்தநெடுங் கதைவழிவாள் கொடுமரஞ்சா யகங்களினாற் கொடிறு தந்தஞ்
சிந்தவுடற் செதுக்கைசெய்து கலக்கியவர் கைப்பொருள்கள் சேர வவ்வி
வெந்தழலார் விழித்தறுகண் மிருகாரி யெனத்தனதின் மேவி னானே. (௧௧௬)

வனசரி-காட்டுவழி. கொடிறு-கபோலம். செதுக்கைசெய்து-காயப்படுத்தி. சேர வவ்வி-முழுவதுங்கவர்ந்து. தறுகண் மிருகாரி-வன்கண்மையுடையசிங்கம்.

பல்லொடிந்து கவுளொடிந்து பழுவொடிந்து முழவெழுவிற் பணைத்த திண்டோட், கல்லொடிந்து கரமொடிந்து காலொடிந்து மார்பொடிந்து கலங்கி வாயிற், சொல்லொடிந்து பனவரெல்லாம் பகைத்திமிரந் துடைத்திலங்குஞ் சுடர்வேன் மன்னன், செல்லொடிந்து முடிதவழுங் கோயில்வா யிலைநோக்கிச் சென்றா ரன்றே. (௧௧௭)

முழவு எழுவில் பணைத்த-மத்தளம் இருப்புலக்கைகள்போற்பருத்த. கல்-மலை. பனவர்-பிராமணர். செல்லொடு இந்து-மேகமுஞ்சந்திரனும்.

சென்றுமுறை யோமுறையோ வென்றசொற்றிண் டிறல்வேந்தன் செவியிற் கேட்டுக், குன்றுறழ்கோ புரவாயிற் காவலரைக் கூயவரைக் கொணர்மி னென்னப், பொன்றுயிலு மணிமார்ப னரசிருக்கு மண்டபத்திற் புகுத்தப் போனார், கன்றமனத் துடனவர்தங் காயமுறுங் காயமெலாங் கண்ணிற் கண்டான். பொன் துயிலும்-இலக்குமிவசிக்கின்ற. (௧௧௮)

யாவரிது செய்தனரிங் கெனவினவ நீயெமக்கீண் டீந்த வெல்லாம், பாவ நெறிச் சண்டாள னொருவன்மைந்த ருடன்மறித்துப் பறித்துக்கொண்டே, யாவவென வளைத்தடித்திட் டாயுதத்தா லவஞ்செய்தெமை யடர்ந்தா னென்னக், காவலன்வா யிதழ்துடிப்பக் கண்டழல்கான் றொருகைமற்றைக் கையிற் றாக்கி. ஆவ என-ஆவாவென்ன. (௧௧௯)

முன்னின்ற முடங்குளைவான் மடங்கனிகர் படைத்தலைவர் முகத்தை நோக்கி, மின்னின்ற விறற்றானைக் கரத்தானை சிலகொடுபோய் விளங்கு செங்கே, ழென்னின்ற கதிர்சுருக்கி யிரவிகுட திசைக்கடல்வா யெய்துமுன்னர்க், கன்னின்ற மனத்தவனைக் கடிதோடிக் கொணர்மினெனக் கற்பித்தானே. (௧௨௦)

தானைக்கரத்தானை-ஆயுதக்கையினரானசேனைகள். செம் கேழ் எல் நின்ற கதிர்-செந்நிறமான ஒளிபொருந்திய கிரணம்.

ஆயவரும் விரைந்துகதை யாழிசிலை வாளியொள்வா ளயில்வே லேந்திக்
காயவருங் கடுமறலி தூதரிவ ரெனவெருவக் கண்டோர் கானிற் [ஞ்
போயவனை முடுக்கர்மரப் பொதும்பர்செறி யடவிதொறும் புழைக்கை வேழ
சீயமுழு வெண்குபுலி திரிசரிக டுருவியெங்குந் திரிய லுற்றார். (௧௨௧)

முடுக்கர்-முழைஞ்சு. எண்கு-கரடி. சரிகள்-வழிகள். துருவி-தேடி.

கையரிக்கொண் டிடுஞ்சேனைக் கணங்கண்டு மருண்டுமனங் கலங்கிக் காதன்
மையரிக்கண் ணியரோடு மக்களொடு மவ்வனத்தின் மறைந்து வைகி
நெய்யரியிற் றீக்கொண்டு நன்ககற்றும் படிற்றொழுக்க னெடிக ளோதை
செய்யரிற்கா னகன்றிரவிற் பற்பலகா வதங்கடந்து சென்ற பின்னர். (௧௨௨)

நெய்யரியில் தீக்கொண்டு நன்கு அகற்றும் படிறு ஒழுக்கன்- பன்னாடை (ஆ காதலைவைத்துக்கொண்டு நல்லதைப்புறத்தேசிந்தவிடுவது)போலத்தீமைகளைச்செய்துகொண்டு நன்மைகளைச்செய்யாதுவிட்ட தூர்த்தநடையினனானசுகுமாரன். நெடிகள்-சிள்வண்டுகள். அரில் கான்-பருக்கைக்கற்கள்பரந்த காடு.

காட்டியசெந் நிறச்சூட்டு வாரணங்கூ யழைப்பவொற்றைக் காற்றேர் தூண்டி
சேட்டிளஞ்செங் கதிர்ப்பரிதி கீழ்த்திசைக்க ணுதயவரை சேருங் காலை [ச்
நாட்டியதீ வினைக்கொடியோன் பயமூல மாநடந்து நரருக் கின்ப
மூட்டியவூ ணவதேயப் புடையிலொரு வரைச்சார லொளித்திட் டானே.()

தொல்வினையின் படிநெடிய வரைவனங்க டொறமுழன்று தொடர்ந்து கா
பல்வினையும் புரிந்துவழி மறித்திரலை முயலுடும்பு பன்றி மான்கள [னிற்
கொல்வினையுஞ் செய்துகடுங் கொடுங்கூற்ற மிவனெனப்பேர் கொண்டு நாளு
நல்வினைய மொன்றுமின்றித் தீவினைமேம் படச்செலுத்தி வாழு நாளில் ()

அவ்வரையி னெடுஞ்சாரற் கரைக்காதத் தளவையின்மா லயன்புத் தேளிர் [க்
தெவ்வரைவென் றிகுலிசப் படையோன்மா னுடரெவருந் திரண்டு போற்ற
கைவரையொன் றுரித்தருளுங் கறைமிடற்றுக் கண்ணுதல்கட் கருணை நல்கிச்
சைவரையீ டேற்றுகிற்பான் வீற்றிருக்கு நாகநகர் தானொன் றுண்டால் ()

நாகநகர்-திருநாகேச்சுரமென் னுந்தலம்.

அந்தநகர்ப் பூசுரர்பார்த் திவர்வணிகர் சூத்திரர்முன் னாயி னோரும்
பந்தணிகைச் சந்தமுலைப் பண்டருசொற் பைந்தொடியார் பலரும் பானற்
கொந்தவிழ்நாண் மலர்வாசங் கமழோடை களிற்குழூமிக் குளிர்நீ ராடிச்
சுந்தரஞ்சே ராசார முடுத்தபின்னு சாரமிகு சுத்த ராகி. (௧௨௬)

ஆசாரம் உடுத்தபின்-வஸ்திரந்தரித்தபின்.

வெய்யகொடும் பாதகங்க ணீறுக்குந் திருநீறு விரவச் சாத்தித் [சோதிச்
துய்யமணிக் கண்டிகையின் றொடைபுனைந்தஞ் செழுத்தோதித் துலங்குஞ்
செய்யமணிக் குண்டலங்கண் முதலாம்பொற் கலனிலங்கச் செக்கர் மேனி
யையனுறைந் தருடருநா கேச்சுரத்திற் சென்றுதொழு தன்பு கூர..

வெண்டரளத் தொடைநாற்றி விதானித்து நெய்த்தகளி விளக்குமேற்றி
வண்டமரும் வலம்புரிமா தவிமுல்லை மல்லிகைசெவ் வந்தி பிச்சி
தண்டளிர்சேர் மணமிகுத்த மந்தாரங் கரவீரஞ் சாதி வாசப்
புண்டரிகங் கருங்குவளைப் போதுகடே யருச்சனைகள் புரிந்து போற்றி.(௧௨௮)

வலம்புரி-நந்தியாவர்த்தம். கரவீரம்-அலரி.

சங்குபட கந்துடிமத் தளந்தாளந் தளங்கியசல் லரிமல் லாரி
மங்குன்முழக் கெனமுழங்கப் பரதவிதிப் படிநடன மகளி ராடக்
கங்குறனிற் கண்டுயிலா தண்டர்பிரா னருட்கோலக் கடலிற்காரி
னுங்குசிவ நிசிவிரத மாசியிற்பிற் சதுர்த்தசியி னேற்க லுற்றார். (௧௨௯)

ஈதுணரா னல்வினையொன் றிருந்ததனாற் சுகுமார னிருபொற் றோட்டின்
மீதுலவு தடநெடுங்க ணுமைபாகன் சன்னிதிமுன் மேவி வாசத்
தாதுலவு நந்தனங்க டடவிமட மனைவியர்கூந் தற்குச் சூட்டப் [லாம்.
போதுகொய்வான் போதுமந்தப் போதுகண்டா னவணடந்த புதுமை யெல்

இங்கிதொரற் புதமிதுவெ னிரவிலென்றத் திசைநோக்கு மெல்லை மாந்த
ரங்கணிறைந் 'தரகரசங் கரவெனமூ வைந்துகன்ன லகன்ற பின்னர்த்
தங்கியபொங் கொளித்தீபத் தட்டேந்திப் பரிமாறுஞ் சமயந் தன்னிற்
றிங்களணி செஞ்சடையோ னினிதுறையுஞ் சிவலிங்கந் தெரிசித் தானே.()

மீட்டுமந்த வனத்திலெய்தி வெவ்வினைகள் பலபுரிந்து விருப்ப நெஞ்சிற்
காட்டுமனைக் கிழத்தியரோ டின்பநல நுகர்ந்துசின்னாட் கழிந்த பின்னர்
வாட்டுபெரும் பிணியலைப்ப மத்தெறியுந் தயிரின்மன மறுகி யாழ்கி
யீட்டுபெரும் பாதகந்தா னிறந்ததெனத் தனதுடனீத் திறந்திட் டானே.()

வேறு.

பெரிய வாயரகல் வானி னுற்றசிறு பிறையெ யிற்றர்சிகை பெற்றெழுந்
தெரியு நீள்வடவை யொத்த குஞ்சிய ரிடித்த சொல்லினர் துடித்துநீர்
சொரியு மாரிமுகி லால காலமிலை தொக்க நீலவரை யொக்குமா
கரிய மேனியர் சிவந்த கண்ணினர்கள் கால தூதர்பலர் மேவினார். (௧௩௩)

தால மொத்தகர மீதெ டுத்தசிலை தண்டு வாளிவளை சக்கரஞ்
சூல மிக்கவடி வாள்சி ரத்தொகை துணிக்கு நீடிய கணிச்சிகூர்
வேல முற்கழுமுள் பிண்டி பாலமொடு வீசு பாசமிவை கொண்டுநீள்
வால சைத்துமிகு புலிபுல் வாயினை வளைத்த தாமென வளைத்தனர். (௧௩௪)

தாலம்-பனை. கணிச்சி-மழு.

பற்று மென்பர்சிலர் பாவி யாவிபத றிப்ப தைக்கவிரி பாறையி
னெற்று மென்பர்சில ரீர நாவதனை யீரு மென்பர்சிலர் பாரெலா [ன்
முற்று ணர்ந்துகொலை செய்த கால்கரமொ டித்தி றென்றிவை யுரைத்துமு
மற்ற டம்புய முரிந்து சிந்திட வரிந்து கட்டினர் வருத்தியே. (௧௩௫)

அடிப்பர் பற்பல விலங்கு கொன்றுதசை யன்று மென்றுநனி தின்றபல்
லொடிப்பர் மார்புபழு வூடு தைப்பர்கதை யோச்சி மேலிட வுரப்பிமே
லிடிப்பர் பாசமது கொண்டு கண்டமதி லிட்டி ழுக்கியிரு கையினும்
பிடிப்பர் கண்ணிணை பிதுங்க வீர்த்துநெறி பேரு வார்முய லும் வேலையில்.

வணங்கி முந்தியெதிர் நின்ற நந்திதனை வருக வென்றெமது வாயில்வாழ்
கணங்கள் சென்றொரு கணத்தி னெய்தியடு கால தூதர்கொடு போகமுன்
குணங்கெ டாதசுகு மார னைக்கயிலை கொடுவ ரச்சடுதி கூறெனப்
பணங்கொள் பாம்புமதி பாணி வேணியண பரம னற்கருணை பண்ணினான்.

போற்றி யங்குவிடை கொண்டு வாயிலிடை யோந்து நந்திகண நாதர்போய்க்
கூற்றி னாருயிர் குடித்த காலனருள் கூர வந்தசுகு மாரனைத்
தேற்றி யாதரவு செப்பி யற்பினொடு செம்பொன் மாமணி விமானமீ
தேற்றி யோர்கொடியில் வம்மி னீரென வியம்பி யங்கவரை யேவினான். ()

நீற ணிந்திலகு நெற்றி யார்மிக நெடுத்த புன்சடை முடித்துளா
ராற ணிந்தருளு மெந்தை சேவடி யகத்தி ருத்தியரு ளன்பினு
ரூற ணிந்துவரு முக்கு றும்பற வொருக்கி யோசைகள் பெருக்கநற்
பேற ணிந்துகிளா ரிரச தக்கிரி பிரிந்தி டாமலுறை பெட்பினார். (௧௩௯)

ஒருக்கி-ஒடுக்கி. இரசதக்கிரி-வெள்ளிமலை (கைலாயம்).

தாம மாகமிகு கண்டி கைத்தொடை தரித்து ளார்வினை யரித்துளா
ரேம மால்வரை யசைத்தொர் கையினி லெடுக்கு மற்புய மிடுக்கினார்
நாம வேறிகிரி கொந்த ழற்கழுமு ணகுக நைப்படைக ணவியநீள்
வாம மேவுவடி வாளி னோடுதிறன் மறலி தூதரிடை மருவியே. (௧௪௰)

ஏமமால்வரை-பொன்மலை. நவியம்-மழு.

விடுமி னிந்தமறை வேதி யன்றனை விடுத்தி டாவிடில் விறற்படை
யெடுமி னெம்முட னெதிர்ந்து வெஞ்சம ரியற்றி யுங்கள்வலி யாவையுங்
கெடுமி னங்கமுடி புயமெ னும்பெரிய கிரியி ழந்துயிரை யெமதுகைக்
கொடுமி னென்றுசில வாசு கங்களெதிர் கூறி னார்வலிமை கூரவே. (௧௪௧)

வேறு.

முனிவர் போன்மிக நீறு பூசி முறுக்கி வேணி முடித்துளீர்
தினையி லோரொரு பாதி நீதிகள் செய்தி லீரெமை வெய்யதீ
யனைய வாய்மொழி பேசி யேசி யடர்த்து வன்மை நடத்துவீ
ரினைய ராயிது செய்த நீரிவண் யாவ ரேவலி னெய்தினீர். (௧௪௨)

வேணி-சடை.

என்று வன்றிற லியம தூத ரியம்ப லூர்தவ ரென்றுபொற்
குன்று கொண்டுமுன் முப்பு ரந்தழல் கொள்ள மென்னகை கோட்டிமா
கன்று கொண்ட கரத்த னையெதிர் காம னைக்குள விழியழற் [ன்
கன்ற ளித்தரு ளாதி நாயக னன்பர் பின்பிது கூறுவார். (௧௪௩)

தவர்-வில். குளவிழி-நெற்றிக்கண்.

துண்ட வான்மதி கங்கை மாநதி சூடி னானிசை பாடிமா
வண்ட ரூமலர் மூண்ட காசன மறைய வன்பொறை மண்டல
மூண்ட மான்முத லும்பர் மங்குவ ரிம்ப ரென்பதை யுன்னிமு
னெண்ட ராவிட முண்ட ராவணி கண்ட மீதி லிருத்தினான். (௧௪௪)

எண் தரா விடம்-நினைத்தற்கரியநஞ்சு; அளவற்றநஞ்சு.

கால னாருயிர் கால வேயொரு காலி னாலுதை செய்துநீ
டால மேநிக ரந்த காசுர னவனை மூத்தலை யயினெடுஞ்
சூல மேகொடு குத்தி மார்பு துளைத்து வானி லுயர்த்தியோ
லோல மேயென வாவி பாவி யுலக்கு மட்டு முணக்கினான். (௧௪௫)

திரிக ளாசல மதனை யம்மை திடுக்க மெய்த வெடுத்தவ
னுரிய மாமணி முடிபு னைந்தக மொருப துங்கர மிருபது

நெரிய நாரண னேன மாய்முத னேடு பாத மிரண்டிலோர்
விரியு நாண்மல ரடியி ளுயக விரல மூத்தி மிதித்துளான். (கசக)
முடிபுனைந்தகம்-கிரீடமணிந்தசிரசு. ஏனம்-பன்றி.

உறுதி வானவர் மான வர்க்கிடை யூடு ருமல் விலக்கவுஞ்
சிறுமை தீர்தர முத்தி புத்திகள் செய்த வர்க்கருள் செய்யவு
மறுவி லாமதி போல வால மருப்பு நெற்றியி னுங்கணும்
பெறும தாசல வதன னுமொரு பிள்ளை பெட்பொடு பெற்றனோன்.()
புத்தி-போகம். வால மருப்பு-வெள்ளியகொம்பு. மத அசல வதனன்-மதமலையான யானைமகன்.

நாலு மாமறை யோது நான்முக னுரி நாசி நறுக்கிவந்
தாலு நீடிரை யத்தி யுற்றெழு மர்க்கர் பற்க டகர்ந்துநற்
சாலு மாமதி விட்டி கற்புரி தக்க னைத்தலை வெட்டிமுற்
கோலும் வேள்வி யழித்தி யென்றொரு கோர வீரனை நல்கினேன். ()
நாரி-பெண் (சரசுவதி). அத்தி-கடல். அர்க்கர்-சூரியர். சாலு மாமதி-தகுபெரும் புத்தி. கோரம்-அச்சம்.

கொடிய தாரக னுயி ரந்தலை கொண்ட சிங்க முகன்கடற்
படியின் மிக்குயர் சூர நீதிசெய் பற்ப ருனவர் குலமெலாம்
வடிகொள் வேல்கொடு கொன்று பொன்றிகழ் வான நாடு புரப்பதற்
கடியர் தீவினை யறவ ருட்டரு மறுமு கத்தனை யருளினேன். (கசக)
சூர் அநீதிசெய் என்று பிரிக்க.

ஏவ யாமிவ ணெய்து கின்றன மிங்கி வன்றனை விட்டுநீர்
போவ தேகட னென்று நின்றுள பொர்றமை யோடினை புகலவும்
பாவ சாகர மான மானமில் பனவ னைப்பல நரகின்வாய்
மேவ வேவிட லன்றி மீள விடோமெ னுவலி பேசினார். (கரு0)

மட்ட றப்புரி புன்றொ ழிற்சுரு மார னுரவ ரைப்புயக்
கட்ட றுத்தன ருட்க றுத்தனர் கட்க னற்பொறி கக்கவாய்
விட்ட ழைத்திதழ் பற்க டித்து விடுத்து நேமி யெடுத்துவே
றொட்டி லக்கமில் வாளி மாமழை தூவி னார்சிவ தொண்டரே. (கருக)

கரமு றிந்தனர் வார்க ழற்புனை காறு ணிந்தனர் கவுளுடன்
சிரமு டைந்தனர் சூல வேல்கதை திகிரி கால்வளை சிலைநெடுஞ்
சரமி ழந்தனர் குடர்ச ரிந்தனர் சவிகு றைந்தனர் தமதுவெந்
நுரநெ ரிந்தனர் தென்பு லத்திடை யோடி னார்யம தூதரே. (கருஉ)
சரம்-பாணம். வெந்-முதுகு.

வேறு.

படிபுகழ்விஞ் சையர்நரப்புக் கருவிதட விச்சுருதிப் பண்கள் பாட
விடியொலியின் மிகவதிரு மந்தரதுந் துபிமுழங்க விரண்டு பாலுங்
கொடிகுடைகள் பலநிலவக் குலவியநற் கற்பகப்பொற் கோட்டிற் பூத்த
கடிகமழ்பூ மழைபொழியக் கற்றைமணித் திரணெடுங்காற் கவரி வீச.(கருரு)

3014



நகுமார நகைக்கருங்க ணரம்பையர்பல் லாண்டிசைப்ப நவையிற் றீர்ந்த
சுகுமாரன் றனைக்கவின்செய் மானமிசைக் கொண்டணைந்தார் சுரர்கள் போ
தகுமார னுடலடலை படவிழித்த தனிநுதற்கட் டலைவன் வைகு [ற்றத்
மிகுமாரத் திரள்சாயத் தள்ளியரு விப்புனல்பாய் வெள்ளி வெற்பில்.(௧௫௪)

நகும் ஆர நகை-ஒளிருகின்ற முத்துப்போலும்பற்கள்· அடலை-சாம்பல்.

பொங்குகதிர் விமானத்தி னின்றிழிந்து நந்திவிடப் புகுந்து பொற்பார்
மங்குறவழ் வரையரசன் மடப்பாவை யிடப்பாக மருவத் தான
வெங்கரிக்கூற் றேந்தணையின் வீற்றிருக்கும் விமலனைவெண் டிரைகள் வீசுங்
கங்கைநதி முடித்தசடைக் கண்ணுதலைக் கண்குளிரக் கண்ணுற் றானே. ()

கரிக்கூற்று-யானைக்குயமன்(சிங்கம்).

கறைசெறியுங் கருந்தாதைச் செந்தாதிற் புரிந்ததன்மை கடுப்ப நீதி
பொறையறிவொன் றில்லேனை நல்லறிஞ ருடன்கூட்டிப் புரந்தாய் போற்றி
யிறைவபரம் பரனெனவீழ்ந் திறைஞ்சுதலு மெமதுருப்பெற் றிருத்தி யிங்ங
னுறைதருநற் கணங்களுட னெனத்திருவாய் மலர்ந்தமல னருளிச்செய்தான்

கருந்தாது-இரும்பு. செந்தாது-பொன்.

• அக்கணத்திற் சுகுமார னரனுருப்பெற் றுண்டிருந்தா னமரிற் றேற்று
த்,தெக்கணத்திற் சென்றடைந்த தூதர்சமன் றனைத்தொழுது திரைநீ ருண்
ட,மைக்கணத்தி னசனியென வந்தெம்மை யடித்தறிவின் மறையோன்றன்
னைப், பொக்கணத்திற் பலியிரப்பான் கணங்கள்கயி லையிற்கொண்டு போனா
ரென்றார். மைக்கணம்-முகிற்கூட்டம். பலி-பிட்சை. (௧௫௭)

சேட்டவுட னிருவிழியுங் கனற்பொறிகான் றிடச்சினமீக் கிளரச் செய்ய
வாட்டடக்கை புடைத்துநன்றெம் மதிகாரமெனப்புகன்று வரைகள் போலுந்
தோட்டடங்கள் குலுங்கநக்குச் சித்திரகுத் தரைநோக்கிச் சுகுமா ரன்பா[ன்
லீட்டருநற் புண்ணியங்க ளுண்டுகொனீர் தெரிந்துவிரைந் தியம்பு மென்றா

சித்திரகுத்தர்-சித்திரனும் குத்தனும். (யமனுடையகணக்கர்)

மற்றவனுந் தேர்ந்துசுகு மாரனெனுங் கோரமிகு மறையோன் றீமை
முற்றுமியற் றித்திரிந்தான் சென்மமுத லின்றுடல முடியுங் காறு
நற்றவம்புண் ணியமொழுக்க மிறையளவு மில்லெனப்பின் னமனு நெஞ்சிற்
செற்றமுட னெழுந்துநதிச் சென்னியான் முன்னியான் செல்வ னென்றே.

நிழலுமிழுஞ் சனக்கிரியி னீலமுகி லிருந்ததனை நிகர்ப்ப நீண்ட, சுழற
ருநாக் கண்டைகண்டத் தசைந்தடிபேர்த் திடுந்தோறுந் தொனிக்க வந்த,
வழலுமிழ்கட் பெரும்பகட்டின் மிசையேறிக் குறையிறைவற் சுறைவான் செ
ம்பொற், கழலணிசித் திரகுத்த ருடன்றூதர் சூழ்வரத்திண் கயிலையெய்தி.()

அஞ்சனக்கிரி-நீலகிரி. கண்டை-கண்டாமணி. பகடு_எருமைக்கடா.

அண்ணலுவ ணப்பாக னடலயிரா வதப்பாக னன்னப் பாகன், பண்ண
மர்யாழ்க் கந்தருவர் விஞ்சையர்வா னவர்முனிவர் பலரும் போற்ற, வொண்
ணறுமா மலர்க்கரத்திற் பிரம்புபற்றிச் சுற்றிநந்தி யுலவ வந்தி, வண்ணனு
றை பேரவைக்கட் புகுந்தொதுங்கி யொல்கிநின்று வழுத்தல் செய்வான். ()

உவணப்பாகன்-கருடலூர்தி(விட்டுணு).

ஆதிநடு வீறிலியா யானுடன்பெண் ணலியலனு யவையு மாகிச்
சோதிபெறு மருவுருவாய்த் தோற்றுசரா சரமனைத்துந் தோய்ந்துந் தோயாப்
பாதிமதி நுதற்பேதை பாகனுமா யேகனுமாய்ப் பகர்தற் கெட்டாப்
பூதிபுனை திருமேனிப் புனிதநின்று மலரைத்தாள்கள் போற்றி போற்றி. ()

இத்தலையா ரமுதமெழ வேண்டுமெனப் பாப்புவட மியாப்புற் றோங்கன்
மத்தலையா வமரர்கடைந் திடவடவை கருநிறமாய் வந்த தென்னக்
கத்தலைவா ரிதியுதிக்குங் கடுவொடுக்கு மணிமிடற்றாய் கருதா ரூனுண்
முத்தலைவேற் கரநாலு மறைபுகழு மைந்துமுக முதல்வா போற்றி. (கசங)

ஓங்கல்-மலை. கடு-நஞ்சு. மணி-நீலம்.

உலகுயிர்யா வையும்படைத்தற் கயனாகிப் புரந்திடுதற் குவண மூரு
மிலகுமணி மார்பினனாய்த் துடைத்திடுதற் குருத்திரனா யிவையு மன்றி
யலகிறு விளையாடல் புரிந்தருளும் பராபரனீ யாத லானுன்
சலசமலர் மருட்டியபே சவடியடியேன் புன்றலையிற் சாத்தி னேனால். (கசச)

என்றினைய துதிகூறி விழுந்தெழுந்து வாய்புதைத்தங் கெறியும் பாசம்[ந்து
வன்றிறல்சேர் தண்டமுதன் முத்திரையைத் திருமுன்னே வைத்துத் தாழ்
நின்றினிமே லடியேற்கிவ் வதிகாரம் போதுமென நிகழ்த்த வீச
னுன்றிறம்யா துன்னுளத்தி னுறுகுறையே தெம்முனீ யுரைத்தி யென்றான்

அரியயனே முதலமரர்க் கடுத்ததொழில் செயப்புரிந்தா யவர்களங்கங்
குரியபடி நினதேவற் படிபுரிந்தார் குறையிலரெற் குலகத் துள்ளோர்
புரிகொடுந்தீ வினைகளறிந் தியைபுடைய தண்டமெனைப் புரிதி யென்று
மெரிநரகி னவரவர்கள் வினைகளறிந் தூட்டுவித்தே னின்று காறும். (கசசு)

எம்பெருமா னீபணித்த கற்பனைக டவறிலனீ டிஞ்சி யோங்கி
யும்பருல களவளவுங் குஞ்சரநம் புரியினிரைத் தொலிக்கு முந்நீ
ரம்பரவம் பரப்புடவித் தேவர்குலத் தினிற்றோன்றி யறத்தை நீத்துக்
கம்பமிலா துளத்திரவிற் கலைகலன்பொன் றினந்திருடுங் கள்வனாகி. (கசஎ)

இஞ்சி-மதில். அம்பரம்-கடல். அம்பரம்-வஸ்திரம். புடவித்தேவர்-பூசுரர்.
கம்பம்-நடுக்கம். கலை-வஸ்திரம். கலன்-ஆபரணம்.

விலைமகளி ரல்லார்தங் கற்பழித்து மூலைப்போகம் விழைவிற் றுய்த்துப்
புலைமகடோ ணலநுகர்ந்தங் கவளுயிர்த்த புதல்வியரைப் புணர்ந்து சாதி
நிலைதவறி யூனருந்தி வேதியரா னினமடவார் நீத்தோர் தம்மைக்
கொலைபுரிந்த கொடுமறவன் சுகுமார னென்றொருபேர் கொண்ட தீயோன்.

நீத்தோர்-துறவிகள். மறவன்-கொடுமனத்தன்.

உயிருலக்குங் காலமது கண்டெனது தூதரடைந் துருத்து நெஞ்சி
லயிரளவு மிரக்கமின்றிப் பாசமதிற் பிணித்துவரு மந்த வேலை
மயிருறுசென் னிகண்மூளை யுகத்தகர்த்து நின்கணங்கள் வலிமை காட்டிச்
செயிருடனஞ் சேனையெலா முரிந்திரிந்து குன்றவென்றி செய்த பின்னர்.()

அயிர்-சிறுமணல். உக-சிந்த.

மைதவழுங் கிரிச்சிலைறயீர் வச்சிரத்தோன் முதலமரர் வணங்கி வாழ்த்தச்
செய்தவமொன் றில்லானை நவமணிக ளிழைத்திடும்பொற் றேரி லேந்தி

கைதவமற் றருந்தவங்க ளிழைத்துமிக விளைத்தவர்க்குங் கற்பஞ் சென்று
மெய்தரிய நினதுபதத் தெய்துவித்தா ரிதுகுறையென் றியம்பிப் பின்னும்
கைதவம்-கபடம்.

கனமிருண்டு துளித்தமழைத் தாரைகளைக் கணக்கிடினுங் கடலின்றீர
வனவரிவா லுகங்கடனை வான்மீனைக் கணித்தொருவர் மதித்திட் டாலுந்
தினமிவன்றான் புரிந்தகொடும் பாதகங்கட் கிலக்கமில்லைச் செப்பு மன்றே
னனவரத தாண்டவநின் பதம்பெறவும் வழக்குளதோ வறைதி யென்றான்.
தீரம்-கரை. வாலுகம்-வெண்மணல்.

அந்தகனைக் கடைக்கணித்தங் கரனுரைப்பா னந்தணரா னினபர னோர்கட்
பைந்தொடியார் பாலர்வதை மீன்மிருகம் பறவைகொன்று பசுத றின்ற
றந்தைகுரு தாய்பிரம சந்நியாசி சதுர்வேதந் தம்மை நாளு (ன்னும்.
நிந்தைசெய்த னீதிபிழைத் தொழுகல்பொய்ச்சான் றுரைத்துநிதி கவர்த லி

கன்னிகைபொற் கலனிழந்த கைமைகுரு வின்றேவி கணிகை தாசி
யன்னியர்பெண் ணன்னையவ ளுடன்பிறந்தார் தன்புதல்வி யன்றி மாமன்
பன்னிசகோ தரிதூரத் திரியுடனே பதிவிரதை பழிக்குஞ் சாதி
மின்னிடையார் தமைக்கூடன் மிருகங்க டமைப்புணர்தல் விரதம் வீடல்.

குளங்கூப நந்தவனங் கோயின்மடங் களைச்சிதைத்தல் குதிரை யானை (கல்
யளந்திடுமெள் ளெண்ணெய்நெய்பொன் னுபயகோ முகிதான மாக வாங்
வளர்ந்தபெரு மரங்கடமைத் தறித்தன்முகை விரியாத மலரைக் கொய்தல்
விளங்குசிவா லயந்தீர்த்தங் களின்மலமூத் திரம்விடுதல் விளம்பி வற்றில். ()
உபயகோமுகி-(ஈனுந்தருணத்துப்புறப்பட்டிருக்கும் கன்றினதுதலையும் தாய்
ப்பசுவினதுதலையுமாக) இருபுறத்தும் தலையிருக்கும்பசு.

மனமறிய வுச்சிட்ட மிடல்கன்கந் திருடல்கள்ளுண் மதித்து விற்றல்
சொனகுலனுண் சூதகவீட் டனம்பிதிர்பேர் சனந்தூர்த்தர் சோறு தின்றல்
தினகரனை யராத்தீண்டு நாளேகா தசிதசமி திகழு வாவி
லனமருந்த லிடக்கரத்தா லெடுத்தொன்றையயிறலனு சாரஞ் செய்தல். ()
சொனகுலர்-சொன்னகுலர், தட்டார்.

துள்ளுநடைப் பரிமுலைப்பால் சுரந்தொழுகு செருத்தனல்லான்சுருதி தா
வின்னுமுருத் திரமணிமந் திரந்தேவ விக்கிரகம் விபூதி வேகங் (யோர்
கொள்ளுமத கரியடிமை யவுடதங்கன் னிகைதவளங் குலவு பன்ன
லெள்ளுநறு நெய்தயிர்பா லெண்ணெயொடு கள்ளுவிற்ற லிவைக ளாதி. ()
பன்னல்-பருத்தி.

எண்ணருந்தீ வினைபுரிந்த கொடியோருஞ் சிவநிசிநோற் றியாம நான்குந்
தண்ணறும்பூ வாலூறங் கடையாம லருச்சித்தோர் சமான மில்லார்
நண்ணருமா மகம்புரிந்து நதிபடிந்து தானமிக நல்கி னாலும்
பண்ணருநற் பலவிரத மிழைத்தாலு மிதுபோலப் பயன்ற ராவே. (௧௱௭)

அன்னசிவ நிசிவிரதத் தாசஙனு கேச்சுரத்தி லமுத மூறுங், கன்னன்
மொழி யுமையொடெமைக் கண்டிடப்பெற் றனைதனுற் காயும் வெய்யோ
ன், முன்னரெதி ரிருளிம்போ லுடைந்தகன்ற திவன்முதனுண் முயன்ற
பாவ, மென்னருநற் கணங்களுடன் கூடுகின்ற வின்பமுத்தி யீது பெற்றான்.

MAHAMAHOPADHYAYA
Dr U.V. SWAMINATHA IYER LIBRARY

என்றிறைவன் கூறுதலுந் தண்டதரன் மீண்டுரைப்பா
னொன்றினமான் றசையருந்தி மதுக்குடித்துப் புலைமகளிர் குழற்குச் சூட்ட
மன்றன்மலர் கொய்திடுவோன் வந்ததன்றி யன்புகொடு வந்தா னல்ல
னுன்றனரு ளிதுவெனின்மற் றுரைப்பதெவ னெனப்பரம னுவனை நோக்கி.

எண்டருமெட் டுணையுளத்தன் பிலரேனு முளரேனு மிந்நா ளெம்மைக்
கண்டவர்நோற் றவர்பூசை பண்ணினர்நற் கதியடைவர் கால நீநந் [ட்டித்
தொண்டர்தமைக் கொடும்பாசந் தனில்வீக்கித் துட்டவுருத் தோன்றக் கா
தண்டமிழைக் குதறவிருந் தூதருக்கு மிந்தவழி சாற்று கென்றான். (கஅ0)

வீக்கி-கட்டி.

செறிந்தவுயிர் கவருதற்குச் சேணெறிபோய் மறந்தெனது சின வேற் றூதர், நெறிந்தபுரிச் சடைப்பரம நின்னடியா ரென்பவரை நினைவிற் றேரா, தறிந்தறியா திழைப்பர்தண்ட மவர்செயன்மற் றடையாள மறைதியெ ன்ன, மறிந்ததிரைக் கடல்விடமுண் டருடிருவாய் மலர்ந்திறைவன் வகுத் துச்சொல்வான். (கஅக)

சேண்-வானம், தூரம். நெறிந்த-நெறித்தஎன்பதன்விகாரம். நிமிர்ந்தஎன்பது பொருள்.

சிரங்களங்கா திரண்டுதெடந் திண்டிறற்றோ டாழ்ந்தவிரு செங்கை வா ய்ந்த, வுரந்தனிற்கண் டிகைபுனைவோ ருருத்திரமந் திரநவில்வோ ருற்று வேண்டும், வரங்கடரு கரடகட மாமுகனைப் பூமுகங்கொள் வடிவேற் றானை, கரங்கொள்விறற் சண்முகனைத் தசமுகனோ டரக்கர்தமைக் காய்ந்த மாலை.

உரம்-மார்பு. கரடகடம்-கன்னமதம். தானை-ஆயுதம். தசமுகன்-பத்துத தலைஇராவணன்.

பரைசிவரு பமதாகுஞ் சிவலிங்கந் தனைப்பூசை பண்ணு வோர்நல்
விரைகமழு நந்தவனம் வைத்திடுவோர் கற்புடைய மின்னார் மிக்க
வுரைபெறுவெண் டிருநீறு பூசிடுவோர் சிவாலயங்க ளுளுற்று நின்றோர்
திரையெறிவா ரிதியுலகி லெமதடியார் தமைப்பூசை செய்யு மேலோர். ()

நின்மலமா மஞ்செழுத்தை யுளத்தழுத்திச் செபித்திடுவோர் நிகரின் மாக
நன்மதிநீ ராடிடுவோர் பஞ்சபா தகந்தவிர்ந்தோர் நாள்க டோறுந்
துன்மதியி லாததுற வந்தணருக் காடையன்னஞ் சொன்ன மீவோர்
மன்மதியாற் குளங்கூவல் கல்லுவிப்போர் நிழல்சாலை வழியில் வைப்போர்.

கூவல்-கிணறு.

காசியிரா மேச்சுரம்பொற் கனகசபை யாரூர்கா ளத்தி காஞ்சி
மாசில்கழுக் குன்றமுது குன்றமொற்றி யூர்மருதூர் மதுரை யையா
றாசின்மறைக் காடுவெண்கா டானைக்கா மாயூர மருணை புள்ளூர்
தேசுதருஞ் சிரபுரநற் றிருப்புகலூர் முதற்றலங்கள் செகத்தி லுண்டால். ()

அத்தலங்க டமையடைந்து புனிதநீர் படிந்தாடி யமல மாகிச்
சித்தமகிழ்ந் தியாமுறையுஞ் சிவலிங்க தெரிசனஞ்செய் தோர்கள் யாரு
முத்தர்சிவ நிசிவிரத நோற்றவர்மற் றிவரெவர்க்கு முதற்பே ராகு
மித்தகைய ருன்றூதர்க் கெளியரலர் தண்டமிவர்க் கில்லை யென்றான். ()

முத்தர்-பாசநீக்குந்தூயோர்.

கருதியசொற் கேட்டுளத்தி னச்சமுடன் வீழ்ந்திறைஞ்சிக் காலனைய
தருதிவிடை யெனப்பெற்று வைத்திமுத் திரைதாங்கித் தன்னூ ரெய்தி
வருதிறெனத் தூதர்தமையழைத்தரன்சொன் மாற்றமெலாம் வகுத்துக் கூறி
யொருதிகிரி தனையுருட்டித் தென்புலங்காத் தினிதிருந்தா னுவப்பி னோடும்.

இச்சிவராத் திரிவிரத சரிதைதனைக் கேட்டோர்மற் றின்பாய்க் கற்றோர்
கச்சையடுங் கொங்கைமங்கை பங்கனுறை கயிலையெய்திக் களிப்ப ரென்றே
யுச்சிதமாய்ச் சூதமுனி மாதவர்கேட் டுள்ளமுற்று முருகி வாயான்
மெச்சிமகிழ்ந் திடவேத வியாதமுனி மொழிப்படியே விளம்பி னானே. ()

சுகுமாரச்சருக்க முற்றிற்று.

ஆக விருத்தம் ௬௪௯

---

# அங்குலச்சருக்கம்.

இன்னு மாசியிற் சிவநிசிப் பெருமையொன் றிசைப்பேன்
மின்னு வார்சடைத் துறவிர்கா ளுமக்கென விழைவாற்
றுன்னு நான்மறைப் பொருடெரி வியாதனைத் தொழுது
பின்னு மாதவச் சூதமா முனிவரன் பேசும். (௧)

களங்க மாய்க்குறு முயலுறு கதிர்மதி தவழ
விளங்கு மிஞ்சிசூழ்ந் தளகைமா நகரினை வென்ற
வளங்கொள் சாகர புரத்தயல் வளர்வரை வனத்தி
லுளங்கொ ளோகையோ டுறைபவன் றேலுடை யுடையோன். (௨)

வெண்ணி ணத்தடி முடைகமழ் வெடிக்குரல் வாயா
னெண்ணில் வேட்டுவக் கிளைஞரோ டின்பமுற் றென்று
நண்ணி வாழ்பவன் காதினி னுலநால் வாயின்
றண்ணி லாமருப் பரிந்தது குழையெனத் தரிப்போன். (௩)

தடி-ஊன். குழை-தோடு.

தேனு நீடணில் வாற்குரற் செந்தினை மாவுங்
கானி னீயலுங் கபித்தநற் கனிகளுங் கங்குன்
மானு மேனமான் மரைமுயன் முதலிய மாவி
னூனு மைவனத் துண்டியு முண்டிகொண் டுவப்போன். (௪)

குரல்-கதிர். கபித்தம்-விளா. மானும்-போன்ற. ஐவனம்-மலைநெல்.

பொங்கு வெஞ்சினத் தழல்விழிப் பொறிப்புலி போல்வான்
கங்கு லஞ்சனக் கிரிமுழக் கொடுமழை கானு
மங்கு லோருருக் கொண்டுவந் தாலென் வடிவந்
தங்கு மங்குல னென்றுள னொருதனிச் சவரன். (௫)

அஞ்சனம்-கருமை. சவரன்-வேடன்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.

பொன்றி கழ்ந்திடு மவ்வரைக் கருகொரு புனத்திற்
குன்றி யின்வடக் குடமுலைக் குழைக்கலை யுடுக்கு
மின்றி ருந்திடைக் கொடிச்சியோர் கொடிச்சியை வேட்டாங்
கன்றி லுஞ்சிறைச் சேவலு மாமென வணைந்தான். (௬)

குன்றியின்வடம் குன்றிமணி மாலை. குழைக்கலை-இலைகளாற்றொடுத்தசேலை. இடைக் கொடிச்சி-இடையாகிய கொடியையுடையவள். கொடிச்சி-வேட்டுவப்பெண. வேட்டு-விவாகஞ்செய்து.

கொடிய கோளரிப் பிணவுவெங் குருளையீன் றென்னப்
பிடிந டைக்குறப் பேதையங் கிருமகப் பெற்றாள்
கடிய புல்லுகிர்ச் சுட்டியோ டரைமணிக் கவடி
வடிவு சேர்தரு புதல்வருக் கணிந்துள மகிழ்வான். (௭)

கோளரிப் பிணவு-பெண்சிங்கம். புல் உகிர்-புலிநகம். கவடி-சோகி.

உரையிந் நீர்மையிற் களிப்புறு மெயினனங் கொருநாள்
வரையி னீண்மரத் துரித்திடும் வற்கலை வாங்கி
யரையி னீர்த்துமான் றோற்செருப் படிகளிற் றொட்டு
விரையி னீடிருட் குஞ்சிமென் கயிற்றினால் விசித்து. (௮)

தூரக்கும் வெஞ்சரத் தூணிதன் வெரிநிடைத் தூக்கித்
தரக்கின் றோலுறைச் சுரிகைசேர்த் தஞ்சன சயிலத்
தூரக்குந் தோளில்வார் விற்றரித் துயர்சுவா வினங்கொண்
டிரக்க மச்சமொன் றில்லவன் வேட்டமே லெழுந்தான். (௯)

சரதூணி-அம்புக்கூடு. வெரிநிடை-முதுகில். தரக்கு-புலி. சுரிகை-உடைவாள. அஞ்சன சயிலம்-கரியமலை. சுவா இனம்-நாய்க்கூட்டம்.

இலவு தேக்ககி லிரத்திவே லெட்டிபுன் னாக்ங்
குலவு கூவிளங் கொன்றைபூங் குரவசோ கிரப்
பலவு பாடலம் வன்னிசண் பகம்பட ரழிஞ்சி
னிலவு பாலைபைந் தாதுபொன் னிறத்தநீள் வேங்கை. (௧௦)

இரதகி-இதகி. வேல்-வேலமரம். எட்டி-காஞ்சிரை. புன்னாகம்-புன்னை. விளம்-விலவம். பாடலம்-பாதிரி.

விரித டஞ்சினைச் சந்தனம் பொரியரை வெள்ளில்
பெரிய வாகைபிப் பிலம்பிசு மந்தமுட் பிடவங்
கரிய காதிரங் கழையிருண் மதுமலர்க் கடம்பம்
வரிகொ ளார்பதஞ் செறிதரு மராமரம் வகுளம். (௧௧)

வெள்ளில்-விளா. பிப்பிலம்-அரசு. பிசுமந்தம்-வேம்பு. பிடவம்-ஓர சாதிமரம். காதிரம்-கருங்காலி. கழை-மூங்கில். ஆர்பதம்-வண்டு. வகுளம்-மகிழ்.

மரவ நாகநல் வழைமுதல் மரங்களா னெருங்கி
யிரவ லாற்பக லில்லையாங் கிலங்குமா யிரஞ்செங்
கரவ ரோதயன் கதிரொளி புகுந்திடாக் கறங்கு
மரவ மாருதம் புகுந்திடா வனத்திலங் கடைந்தான். (௧௨)

மரவம்-குங்கும மரம். நாகம்-நாகமரம். வழை-சுரபுன்னை. செங்கரவர உதயன்-செங்கிரணங்களையுடைய மேலானசூரியன்.

புட்ட ருக்குலந் தொறும்பயில் பொங்கிருட் புனத்திற்
கட்ட ழற்பொறிக் கூருகிர்க் கவிழ்தலை யுளிய
மட்ட றச்சித லெடுத்துயர் பாழிவன் மீகந்
தொட்ட கழ்ந்ததிற் சோறுக ளருந்துமங் கொருபால். (கங)

புள் தருக்குலந்தொறும்; கண் தழற்பொறி என்றுபிரிக்க. உகிர்-நகம். உளியம்-கரடி. சிதல்-கறையான். வன்மீகம்-புற்று. சோறு-புற்றுஞ்சோறு.

துறும யிர்ச்செறி மடிசெவித் துடிக்குரற் செந்நாய்
தெறுசி னத்துடன் சிலீமுகஞ் செல்கதி யினிற்சென்
றுறுசெ வித்துணை நிமிர்த்துகள் குமிழிநே ரொண்கட்
குறுமு யற்சிறு குருளையைத் துரந்திடு மொருபால். (கச)

செந்நாய்-கோணாய். சிலீமுகம்-அம்பு. கதி-விரைவு. உகள்-பாய்கின்ற.

வளைந்த வாலுளை மடங்கல்கைம் மாவின்மத் தகத்தைப்
பிளந்து கோடுகள் பிடுங்கியே கறித்திடத் தெறித்து
விளங்கு நித்திலஞ் சோரியிற் றுவண்டதால் விரிமா
துளஞ்செ ழுங்கனி விதையெனத் துளங்குமங் கொருபால். (கரு)

மடங்கல்-சிங்கம். கைமா-யானை நித்திலம்-முத்து.

இடிமு கிற்குரற் றழைசெவித் துணைமருப் பேய்ந்த
கடிசி னப்புழைக் கரக்கடக் கவுட்பெருங் களிறு
துடிய டிக்கய மூனிகள்பின் றொடர்ந்திடத் துன்னும்
பிடிந திப்புனல் படிந்துடன் பிளிறுமங் கொருபால். (கசு)

துடி அடிக் கயமுனிகள்-உடுக்கைபோன்றஅடிகளையுடைய யானைக்கன்றுகள்.

முழைக்கட் டுஞ்சிடு கொடுவரிப் புலியின முழங்கி
யுழைத்த பேரொலி கேட்டுவல் லுளிமரை வரையா
டிழைத்த காரிரும் பென்னவே நீண்டகோட் டிரலை
யுழைக்கு லம்பயந் தொதுங்கியே யொடுங்குமங் கொருபால். (கஎ)

வல்லுளி-பன்றி. வரை யாடு மலையாடு. உழைக்குலம்-மான்கூட்டம்.

நீடு வேற்கரக் குமரவே ணெடியமா குலங்க
ளூடு வைத்தபல் லாயிரஞ் சுடர்விளக் கொப்பப்
பாடு சேர்படம் விரித்துயிர்ப் பெறிந்துநற் படிநின்
றூடு நாகநன் மணிகிடந் தவிருமங் கொருபால். (கஅ)

குலங்கள்-கோயில்கள். பாடு-பருமை.

வேறு.

இத்திற நிகழும் வனத்திலவ் வேட னிருஞ்சிறைப் புட்குலம் படுக்குங்
குத்திரக் கண்ணி பற்பல வூன்றிக் குலவுமா வினங்கொலை புரிவான்
புத்தியி னியற்று மியந்திரப் பொறிகள் புடவியிற் புதைத்துய ரடவிப்
பத்திர மரத்தி னடிகளிற் றொடுத்துப் பலவலைவளைவுறப் பூட்டி. (கக)

மடிசெவி வளைவான் ஞாளிக ளேவி வாளிக ளேந்துபின் குறிய
தடிகளி னெறிந்து கற்றிர ளிருத்துந் தட்டைகள் சுற்றியே வீசிச்
செடிவளர் வனத்தில் விலங்குகள் கலங்கச் செய்தவன் றுரத்தலும் வலையி
னடிகளிற் பிணிக்கப் புதைத்திடும் பொறியி லகப்படா தகன்றவங் கனைத்தும்

ஞாளிகள்-நாய்கள். கல்திரள்-உருட்சியானகல். தட்டைகள்-கவண்கல் பொறி என்றதீண்டுக் கண்ணியை.

புன்புல வருந்துந் தந்தவாய் திறந்து பொதும்பரிற் புகுந்துமா வினங்கண்
மென்சிறைப் பறவைக் குலமெலா மருள விளித்தலை போலநின் றழைக்குந்
துன்புட னுழையின் சுவையடி மிதித்த சுவடுகண் டந்நெறித் தொடரு
மென்செய்கே னினியென் றங்கைகள் வங்கி லிடும்புகு மூடும்புநே டற்கே.()

வங்கு-புற்று. நேடற்கு-தேடும்பொட்டு.

வார்சிலை வணக்கி விடுத்திடும் வயிர வாளியான் ஞாளியால் வயங்குங், கோரவெங் குந்தப் படையினாற் றிரண்ட கொடுங்கடுங் கதையினாற் குணிலா, லேர்பெறும் பெருங்கண் வலையினாற் புதைத்த வியந்திரப் பொறியினா லெதிர்ந்தங், கோர்விலங் கோர்புட் கொன்றிடக் கிடையா துள்ளுறு கவலையுற் றுடைந்தான். (உஉ)

குந்தப்படை-தோமரஆயுதம். குணிலால்-குறுந்தடியால்.

இன்னணம் வேட்டத் துலைந்தவன் மேனி யிளைத்திடத் தழைத்த கட் டெழுந்து, துன்னரு முதரத் தழல்சுட மெலிந்து சோகமோ டிருந்தபின் பரமன், பன்னரு மிரவீ தென்றறிக் தவன்போற் பதங்கனோர் பதங்கொடேர் கடவி, மன்னெடுங் கயிலை மலைவலங் கொள்வான் வாருண திசையத்தின் மறைந்தான். (உ௩)

தழைத்த அகட்டு எழுந்து-சுவாலித்துவயிற்றிலெழுந்து. பதங்கன-சூரியன். ஓர் பதம் -ஒருசில். வாருணதிசை-மேற்குத்திக்கு.

கொய்யுளைப் பரியேழ் கொளுவுமோ ராழிக் கொடிஞ்சியந் தேரொடு குடபால்
வெய்யவன் கற்றைக் கதிர்க்கரஞ் சுருக்கி விரிதிரைப் புணரிவீழ்ந் திடலுஞ்
செய்யகோ லோச்சி யுலகினி தளிக்குந் திறன்மிகு மரசர்போ யொதுங்க
வையமா ளுதற்குக் குறுநில வேந்து வந்தபோல் வந்ததான் மாலை. (உச)

ஒருருட் டேரோன் குடதிசைக் கடலி லொளித்துறக் குளித்ததற் பின்னர்
வாருறு வரிவிற் றடக்கையங் குலன்றன் வடிவுநன் ககற்றிவெந் தீமை
கூருறு மவன்றன் செய்கைகுத் திரங்கள் குடிகொளு முளமும்போற் கருகிப்
பேருல கனைத்தும் விழுங்கிமா திரம்விண் புதைத்தது காரிருட் பிழம்பே(உ௫)

வடிவும் உள்ளமும் போற் கருகியென்று முடிக்க.

குனிசிலைச் சவரர் குலத்தினி லுதித்துக் கொடுங்கொலை புரிந்தவங் குலனுந், தனியிருந் தாண்டு மீண்டியா மெய்தச் சரிதெரி யாதிவண் டரிககி,லினியவூ ணின்றி மனைவியுஞ் சிறுவ ரிருவரும் பசிப்பரென் றிரங்கித், துனியுற லொழிந்து தெளிந்துளந் தேறிச் சொல்லருஞ் சூட்சியொன் றுணர்ந்தான்.

சவரர்-வேடர். சரி-வழி. துனி-துயர்.

பாவியேன் வாளா வெறுங்கையோ டெய்திற் பயனிலை பனியிருட் பொழுதி
வாவிக டுருவிக் குளிர்புனல் பருக வருமிரு கங்களுக் கயிலம் [ல்
பேவியே வதைத்துத் தடிகொடு போத லியல்பென மதித்துட னெழுந்து
தாவியஞ் சிறைப்புட் குலம்பயின் றிடுமோர் சூழியின் கரைக்கணுற் றனனே.

துருவி-தேடி. அயில் அம்பு-கூர்ம்பாணம். தடி-இறைச்சி. சூழி வாவி.

முறுகிய சினக்கோ ளரிவயப் புலிவெம் மும்மதக் கரடமால் யானை
குறுகுமென் றஞ்சிப் பாழிநீர்ச் சூழிக் கோட்டுறு கூவிளக் கோட்டி
லூறுவனென் றேறிச் சரிகையான் மறைக்கு முலவைக ளரிந்தரிந் தொதுக்கி
மறுகிய மனத்தா னேணமான் மரைகள் வருமென வரவுபார்த் திருந்தான்.

கோட்டுறும்-கரையிற்பொருந்திய. கோட்டில்-கொப்பில். உலவைகள்-தழைகள்.

வடிசெய்து வகுத்த வைதிக சைவ வழிமொழி வழாமன்மந் திரத்தாற்
படியின்முற் பகலோர் முனிவரன் பூசை பண்ணிய தெண்ணிய படியே
கடியவெந் தொழிற்செய் கிராதனுங் காணுன் கவடுவிட் டெருமா லூரத்
தடியினுக் கருகிற் புராதன விலிங்க மமர்ந்தினி திருந்ததொன் றன்றே. ()

கவடு விட்டு-கவராகத்தழைத்து. மாலூரத்து அடியினுக்கு என்றுபிரிக்க. ஆலூரமெனினும் ஒக்கும். புராதன-பழைய.

அன்றா னிரவென் றறிந்திலன் வெருடுக்கு மம்பிடை தடுக்குமென் றறிந்து, தன்றடங் கையா லெறிந்தவைந் தழையுந் தனியிருந் திடிற்றுயில் வருமே, யென்றது விலக்கி யிருட்பொழு தகறறற் கெண்ணினன் கொய்துவிட்டெறிந்த, மென்றழை முழுதும் பழுதிலவ் விலிங்க வியன்முடி மீதுவீழ்ந் தனவே. (கூ௦)

குறுந்துளித் திவலைப் பனிநனி மூழ்கிக் கொடும்பசிக் கருந்திடா தொழிந்தா, ஞறுந்துயி றறந்து புராரிசந் நிதியி லூறின்மா லூரவெண் டழையாற்,றெறுந்தழ லுதற்கட் சிவசிசி யதனிற் சிவார்ச்சனை புரிந்துவெந் தீமை, யறுந்தவ முடையோ ரொத்தனன் வேடன் கொடிச்சிதன் றிறமினி யறைவாம். (கூக)

உறும் துயில் துறந்து-உண்டாகும்நித்திரையையுந்தவிர்ந்து. புராரி-முப்புரமழித்தவர் (சிவன்.)

## வேறு.

உன்ன ரும்பெருங் காட்டினில் வேட்டமே லுற்றான்
வன்ன வார்சிலை வலவனென் னுயிர்த்துணை மகிழ்ந
னின்ன மெய்தில னென்கொலோ வெனமனத் தெண்ணி
யன்ன மென்னடைக் குறத்திகண் டுயின்றிடா தரற்றும். (கூஉ)

வலவன்-வல்லவன்.

தஞ்ச மொன்றிலன் றமியனாச் சென்றனன் றங்கசா
லஞ்ச னக்கிரி யாமென வுருத்தெதி ரடர்ந்து
மஞ்செ னப்பொழி மதசதுட் பதத்துணை மருப்புக்
குஞ்ச ரக்குலங் கொன்றவோ வென்றுளங் குலையும். (கூகூ)

சதுட்பதம்-நான்குகால். குஞ்சரம்-யானை.

கரிய நீண்மயிர்க் கூருகிர்க் கவிழ்தலைக் கரடி
சரியில் வந்துயிர் கவர்ந்ததோ வென்னமெய் தளரு
முரிய வெஞ்சினக் கொடுவரி கறுத்தொறுத் துடலைப்
பெரிய வாயினிற் பெய்தது வோவெனப் பிதற்றும். (கூச)

சரியில்-வழியில். கொடுவரி-புலி.

அளையு றும்பணி விடங்கனுழ்ந் துமிழ்ந்திடு மகல்வாய்த்
துளையெ யிற்றினே றுண்டது வோவெனச் சோருங்
கிளையு டன்றிரி கரிவழிப் பகையதாங் கிளர்வா
லுளைம டங்கலா லுயிருலந் தனன்கொலென் றுன்னும். (கூரு)

பணி-பாம்பு. மடங்கலால்-சிங்கத்தால்.

காட்ட மன்னநின் புதல்வர்வெம் பசியினு னலிந்து
கோட்ட முற்றனர் கொழுந்தசை கோற்கொளீஇ வெதுப்பி

பூட்ட வந்திலை யுன்றனக் குரிமையா மெனது
வாட்ட நோக்கிலை யென்கொல்செய் தாயென மயங்கும்.

கோற் கொளீஇ-அம்பிற்கோத்து. உரிமையாம்-மனைவியான.

என்றி ருந்தருந் துயருழந் திடைக்கொடிக் கொடிச்சி
குன்றி யின்வடங் கிடந்தொளிர் கொங்கைகள் குளிப்ப
வென்றி யங்கதிர் வேல்விழி நீருகுத் திடும்பை
யன்றி யொன்றில ளயர்ந்தன ளிருந்திடு மமையம். (௩எ)

இடைக்கொடி-இடையாகியகொடி. கொடிபோன்றஇடையென்பதுவிளக்கம்.

பரவி யந்தணர் வந்தனை புரிந்துமுன் பழிச்ச
விரவி யம்புயம் பொற்கதிர்க் கரங்களால விரித்துப்
புரவி யேழ்நுசம் பூட்டிய பொற்றடந் தேரு
மிரவி யுங்குண புலத்துய ரிரவியி லெழுந்தான். (௩அ)

குணபுலத்து உயர் இரவியில்-கிழக்குத்திக்கில் உன்னதமாயிருக்கிற மலையில்.

புலவு வாய்கம ழுங்குலன் றினந்தொறும் புரிந்த
வலகில் பாவவல் லிருள்களைத் துரந்தகற் றுதலா
னிலவு நீறணி நீள்புரி சடைச்சிவ னிசியு
முலகி னீடிருட் கடிபகற் கதிருமொத் துளதால். (௩௯)

இருட்கடி பகல் கதிர்-இருளைப்போக்குஞ்சூரியனதுகிரணம்.

மேவி ளங்கதிர் விரிந்திட விடிந்ததன் பின்னர்
வாவி ளஞ்சிறு மான்விழி யெயிற்றிதன் மைந்த
ராவி ழுந்தகன் ருவரென் றங்குல னினைந்து
கூவி ளம்பனை நின்றிழிந் தனன்வழிக் கொண்டான். (௪0)

எயிற்றி-வேட்டுவிச்சி. கூவிளம் பணை-வில்வமரக்கொம்பு.

ஈறி லாத்துய ருற்றிடு மெயிற்றிதன் னிதயந்
தேறி வேடனைத் தேடுவா னடந்தூறு செப்பத்
தூறி லான்வரல் கண்டெதிர்ந் தோகையிற் றழுவி
மாறி லாதுயர் புற்குடின் மேவினர் வந்தார். (௪௧)

செப்பத்து-வழியில்.

வந்து செந்தினை மாவுடன் வம்பமர் வரைத்தேன்
முந்து புற்பத மேவுநீ வாரவெண் மூர
னந்து நற்றசை நறவுக ளொடொறு நாடித்
தந்து மற்றவ னோடுபென் ஞளவண் சார்ந்தான். (௪௨)

வம்பு-வாசம். புற்பதம்-புல்லரிசிச்சோறு. நீவாரம்-வனநெல். மூரல்-சோறு. நந்து-சங்கு. நறவு-கள். நறவுகள் என்பதிற் கள் விகுதி மாமுதலானஆறுக்குமுரிய பன்மை.

முருந்தி யற்றரும் பற்கழன் றிடநரை முதிர்ந்திட்
டருந்து தற்கரி தாயுடல் பலங்கெடு மந்நாட்
பெருந்தி ரைக்கடற் கடுவுறழ் பெரும்பிணி பிணிக்க
வருந்தி மற்றவன் சடந்துறந் திறந்தனன் மன்னோ. (௪௩)

முருந்து-இறகினடி. கடு உறழ்-நஞ்சுபோன்ற.

வேறு.

சூலமொடு வாளிசிலை தோமர முலக்கை
பாலமயில் வேல்விசிறு பாசமவை கொண்டே
வாலமதி போலெயி றிலங்கவட வைத்தி
யாலநிகர் தூதுவர்க ளவ்வயி னடைந்தார். (சச)

தோமரம்-குந்தம். விசிறு-வீசு.

பற்றினர் புயத்துணைகள் பாசமத னாலே
சுற்றின ரடித்தனர் துடித்திட விடித்துக்
குற்றின ருடற்சவி குறைத்தவச மேண்மே
லுற்றிட வுதைத்துவழி யொல்லைபட ரெல்லை. (சரு)

மங்கையொரு பங்கன்மழு மான்மறி மரைப்பூஞ்
செங்கையி லிருத்திறை சிலாதனன் மகற்கூய்ச்
சங்கைபெறு மங்குல னெனுஞ்சவ ரனைத்தம்
மங்கைகொள் கயிற்றினிடை யாத்தியம தூதர். (சசு)

சிலாதனன்மகன்-நந்திதேவன். யாத்து-கட்டி.

சென்றனர் விலக்கியொளிர் செம்பொனணி தேர்மே
லின்றவனை யேற்றியொ ரிமைப்பி னிவ ணெய்தக்
குன்றன புயத்துவலி குன்றமரு வாரை
வென்றகண நாதரை விடுத்திடுதி யென்றான். (சஎ)

மருவாரை-பகைவரை.

நாதன்விடை கொண்டுகண நாதரை யழைத்தே
யேதமறு மங்குலனை யின்றுகொடு போகுந்
தூதர்தமை வென்றுவிரை விற்சுடர் விமான
மீதினி லிருத்தியிவண் மேவவிடு கென்றான். (சஅ)

நந்திமொழி கொண்டுகண நாதர்கள் விரைந்து
வந்தியம தூதரை வருத்திவலி செய்தே
முந்தியவன் மொய்ம்புகள் முரிக்கவிசி பாசஞ்
சிந்திமணி மொய்த்தொளிகொ டேரின்மிசை வைத்தார். (சகூ)

விசி பாசம் சிந்தி-கட்டியபாசத்தை அறுத்து.

யாவர்பணி கொண்டிவ ணெதிர்ந்திது புரிந்தீர்
போவதிவ னெங்ஙனமொர் புண்ணிய மிலாதான்
மேவவுவ னுமினி விடோமென வெகுண்டு
காவல்புரி காலபடர் காய்ந்தெதிர் கதித்தார். (ருO)

காலபடர்-யமதூதர். கதித்தார்-கூறினார்.

உங்கடலை வன்றன தூரத்திடை யுதைத்தோ
னெங்கடலை வன்பணியி தென்றுமுச லத்தாற்
செங்கடலை நேர்குருதி சிந்தவெம தூதர்
தங்கடலை மோதினர் தரித்திலரகன்றார். (ருக)

முசலம்-இருப்புலக்கை.

வென்றிதரு வானவர் விரைத்தருவி னற்பூப்
பொன்றிகழ் செழுந்துணர் பொழிந்தனர்கள் வாழ்த்த
வன்றியர மங்கையர்க ளங்கிரு மருங்கு
நின்றிலைகொள் வெண்கவரி நேசமொடு வீச, (ருஉ)

விண்டல முதிக்குமதி வெண்குடை நிழற்றப்
பண்டரு மிசைப்பனுவல் கந்தருவர் பாடக்
கொண்டலிடி யொத்ததிர் குரற்குட முழாநற்
றொண்டகம தோடமர துந்துபி முழங்க. (ருங)

தொண்டகம்-குறிஞ்சிப்பறை. அமரதுந்துபி-தேவதுந்துபி.

போயமலன் முன்புக விடுத்தபொழு தெம்பா
லேயகண மாயிவ ணிருந்திடுதி யென்றே
நேயமிக வைத்தெழில்கொ ணெற்றிவிழி யுற்ற
நாயக னுரைத்துவர நல்கின னயந்தே. (ருச)

செங்கணெயி னன்கயிலை சேர்கணம தாகி
யங்கணமர் வுற்றபி னருந்துயர்கொ டேதர்
திங்கண்முடி யானடியர் செய்ததிற மெல்லாம்
வெங்கண்மற லிக்குமுன் விளம்பவிரை வுற்றார். (ருரு)

பாசமெறி தாரைதொடர் பாறுபடி சூலம்
வீசுசுடர் வேன்முசல மின்னுகதை நன்றூ
ராசமுட னங்குசம தங்கையிரு நான்கிற்
றேசுற வுரத்தினிடை செந்தொடை விளங்க. (ருசு)

தொடர்-சங்கிலி. பாறு-பருந்து.

எற்றிய கடற்றிரை யிருத்திய தெனக்கார்
முற்றிநெளி வுற்றபுரு வத்துணை முரிப்பும்
பெற்றிடி யெனக்குரல் பிறங்குபில வாயும்
பற்றிய தழற்குஞ்சி பங்கியும் விளங்க. (ருஎ)

வாதகப பித்தமுத லானபிணி மற்று
மேதமிகு சொற்பணி யியற்றியய னிற்பப்
பாதகர் வெருக்கொடு பதைத்திட வருத்துந்
தூதரிரு பக்கமுறை சுற்றினர்கள் சூழ. (ருஅ)

சாலமொழி மாதர்பலர் சாமரை யிரட்ட
வாலமதி யாமென வளைந்தெயி றிலங்க
நீலவரை போனிதி நெடுந்தவி சிருக்குங்
காலனிரு காலிலிவர் கைதொழுது வீழ்ந்தே. (ருகூ)

நிதி-பொன்.

மூடனை யறத்திற முயன்றறித லில்லா
வேடனை வடத்தினிடை வீக்கிவரு காலைப்
பாடனை வருக்குமிது பண்ணிவள ரொற்றைக்
கோடனை யளித்தவர் கணங்கள்கொடு போனார். (சுO)

பாடு-வருத்தம். ஒற்றைக்கோடனை-விநாயகரை.

என்றிவை யுரைத்திட வெயிற்றித ழதுக்கித்
தென்றிசை நகர்க்கிறைத் திரண்டெழ வளர்ந்த
குன்றின்மிசை பெற்றிடு புயத்துணை குலுங்க
நன்றிது வெனத்தனி நகைத்துட னெழுந்தே. (சுகி)

சஞ்சரிக மொய்த்துழா ரூர்களசை யப்போ
யஞ்சன வரைக்குநிக ரானபக டேறி
விஞ்சிய கணக்கரொடு வீரர்பலர் சூழ
மஞ்சன மிடற்றிறைவன் வாழ்கயிலை வந்தான். (சுஉ)

மஞ்சு அன்ன-முகில்போன்ற.

வேறு.

அரியமா தவத்தோ ருள்ளமொத் துயர்ந்தோ ரணுவினுங் களங்கமொன் றின்றிக், கரியமா முகில்கள் படிதடஞ் சாரற் கயிலையிற் கனகமா மணியா, லுரியநான் முகத்து விதிவிதிக் கரிய வொளிதிகழ் கதிர்களா யிரமும், விரியுமா தவரோர் கோடிவந் துதித்து விளங்கல்போற் றுளங்குமண் டபத்தின்.

விதி விதிக்கரிய-பிரமாசெய்யமுடியாத. ஆதவத்தோர் கோடி-கோடிசூரியர்.

ஐம்படை தரித்த தண்ணறுந் துளபத் தண்ணலு மண்முதற் படைத்த
வம்படை கமலத் தவிசுறை யயனும் வரைச்சிறை யறுத்திடும் வசிச்சம்
பம்படை யெனக்கொள் பாகசா தனனும் பன்னிரண் டருக்கரு மொற்றைக்
கொம்படை களிற்று முகம்படைத் தருளுங் குடவயிற் றைங்கரக் கோவும் ()

ஐம்படை-பஞ்சாயுதம். வம்பு அடை-வாசம்பொருந்திய. வசி சம்பம் படை யெனக்கொள்-கூர்மையானவச்சிரத்தை ஆயுதமாக்கொண்ட.

வார்பெறு கலச முலைக்குறக் கொடியை மணந்தருண் மகிழ்நனற் கடப் பந், தார்பெறு புயத்தோன் றாரகன் சினக்கே சரிமுகன் றகுவர்கட் கிறை யாஞ், சூர்பெறு வரங்க டொலைத்தவை வேலோன் றோகைமே லொகரமூ ர்ந் தருள்வோன், கூர்பெறு முட்டாட் செந்நிறக் குடுமிக் கோழிசேர் கொ டிக்கரக் குகனும். (சுரு)

கேசரிமுகன்-சிங்கமுகன். தகுவர்-அசுரர். தோகைமேலு ஒகரம்-தோகைமயி ல். முள் தாள்-முட்கால்.

உலகமுற் றொடுங்குங் காலையி லெழுந்த வூழிவெந் தீயென வுருத்துத்
திலகமுற் றிடுவா ணுதன்மறைக் கொடிதோள் சேர்ந்திடுஞ் சிறுவிதி விதியிற்
கலகமுற் றிகலிப் புரிமக மரைக்காற் கணத்தினிற் சிதைத்தவன் பிறைபோ
லிலகவிட் டெறிக்குங் கதிரெயிற் றலகை யேறிடும் வீரபத் திரனும். (சுசு)

மறைக்கொடி-வேதவல்லி. சிறுவிதி-தக்கன். இகலி-மாறுபட்டு.

புடத்திடு பசும்பொற் குழைகிழித் திடுங்கட் பூரணை புட்கலை தரள
வடக்குட முலைக ளுழுதுழு துழக்கு மார்பினன் மாலென முழங்கி
முடக்கிய தடக்கை நீட்டிமூச் சொடுக்கி முரிதிரைக் கடலெலா முகந்துள்
ளடக்கியே யுமிழ்வெள் ளானைமே லேறு மரிகர குமரனு னவனும். (சுஎ)

தரள வடம்-முத்துமாலை. மால்-மேகம். அரிகரகுமரன்-ஐயனார்.

வன்னெனக் குரைக்குங் கரியநா யூரும் வடுகனு மாருதத் தேவு
மன்னலஞ் சேற்றுக் கருங்கடற் கிறையு மக்கினிக் கடவுளு மளகைக்

கெள்ளருந் தலைமை பூண்டபிங் கலனு மிருஞ்சிறைச் சுரும்புபாட் டயர்ந்து
கள்ளருந் திடெந்தார் நிருதியுஞ் சுருதி கருதமீ சானனென் பவனும். (௬௮)

வடுகன்-வைரவர். மாருதத்தே-வாயுதேவன். கடற்கிறை- வருணன். பிங்கலன்-குபேரன். சுரும்பு-வண்டு.

மேவரு விரிவெண் டிரைக்கட லேழும் விலங்கலின் குலங்களோ ரேழும்
பூவருங் கங்கை முதனதி யேழும் பொற்புறு கற்பக நிழல்வாழ்
தேவரு முயர்கந் தருவரு நித்த சித்தரு முத்தரா முனிவர்
யாவருஞ் செங்கை குவித்தர கரவென் றிருமருங் கினுந்திரண் டேத்த. (௬௯)

விலங்கலின்குலங்கள்-மலைக்கூட்டங்கள். இவைதேவவடிவாய்நின்றுதுதித்தன வென்றறிக.

பாரதன் மேலா மண்டகோ ளகைபொற் பருப்பதந் திருப்பவும் வல்ல
சாரத குழுவுங் குழிவிழிப் பேழ்வாய்த் தளர்நடைப் பேய்களுஞ் சார
நாரதன் மகதி யாழ்நரம் புளர நந்திகைப் பிரம்பெடுத் துலவக்
காரதன் வடிவு பெறுநறுங் கூந்த லரம்பையர் கவரிகா லசைப்ப. (௭௦)

பாரதன்மேலாம்-பூமியின்புறத்துள்ள.

கொலைபயி னயனத் தஞ்சன மறுவுங் குளிர்மொழி யமிழ்தமுங் குலவு
மலைமகள் வதன முழுமதிக் குடைந்து வாளெயிற் றரவினுக்கிடைந்து
கலைவள ராம லுடல்குறைந் தொதுங்கிக் கடுக்கைமா லூரமார் கபித்த
நிலைபெறு சடைக்காட் டலைநதிக் கயல்வெண் ணிலவுகான் றிளமதி கிடப்ப.

கடுக்கை-கொன்றை. மாலூரம்-வில்வம். ஆர்- ஆத்தி. கபித்தம்-விளா. இவற்றின்பத்திரபுஷ்பங்கள்.

கறங்கிடுந் திரைநீர்க் கங்கையஞ் சடையிற் கட்செவிக் கடும்பணி சீற
வுறங்கிட றவிர்ந்து கரநக நுதியா லுரித்துமுன் மருங்குற வுடுத்த [மா
மறங்கிளர் தழற்கட் கொடுவரிப் புலித்தோ லுடையனுங் கிடந்தொறு மருண்
ணிறங்கிட வெருவிக் குதித்தெழுந் தற்ற நோக்கியங் கிடக்கரத் திருப்ப. ()

அற்றம்-தருணம், சோர்வு.

கோல்வரை நிகர்க்கும் வரிநெடுந் தடங்கட் குவிதனத் திரதிதோ டோய்ந்த
சேல்வரை துவசச் சித்தசனெரியத் திறந்தகண் டிருநுதற் றிகழக்
கால்வரை யளித்தற் கரிதென விரிந்த கடுநுகர் களனும்வித் துரும
மால்வரை யருவி யென்னமுப் புரிநூல் வயங்குமார் பமுமிக விளங்க. (௭௩)

கோல் வரை என்பன கண் தனம் இரண்டுக்கும் நிரனிறை. சேல் வரை துவசச் சித்தசன்-மகரமெழுதியகொடியினனாகிய மன்மதன். கால் வரை அளித்தற்கு அரிதென விரிந்த-கால்மாத்திரைப்பொழுதளவாவது காத்தற்கு முடியாது என்னும்படிபரந்த. கடு-விஷம். களன்-கண்டம். வித்துருமம்-பவளம்.

தூயசெந் தமிழ்ச்சுந் தரன்றனக் காகத் தூதுபோய்ப் பரவைபா னடந்து
மேயவன் றிறல்சே ரந்தக னாக விலங்கன்முன் கலங்கிட வுதைத்துச்
சேயசெங் கமல மெனச்சிறந் தன்பர் சிந்தையம் போருக மலரக்
காய்கதிர் விரிக்குஞ் செழுமணிச் செம்பொற் கனைகழற் றாளிணை கவின. ()

அந்தகன் ஆக விலங்கல்-யமனதுமார்பாகியமலை.

கம்மையார் கவிகு ழலகினிற் புகலி தோன்றிய கவுணியச் சேய்க்குக்,
கொம்மைவார் முலையா ரமுதமுத் தமிழுங் குழைத்துமுன் குடித்திடப் பரு

ஏர்பெறு மளகை தன்னை யிருநிதிக் குபேரற் கீந்தாய்
பார்முத லெங்கும் வீசப் பவனனைப் பணித்தாய் மற்றை
யார்தருஞ் சலதி யாள வருணனை வைத்தாய் தன்மச்
சீர்கெடு மவர்க்குத் தண்டஞ் செய்வதற் கமைத்தா யென்னை. (௮௨)

திரிபுவ னத்து நீதான் செய்தகற் பனைக ளெல்லாஞ்
சரிவர நடந்த வொன்றுக் தமியனேன் பிழைத்த தில்லை
புரிசடைப் பரம வென்று புரிநெடும் பாசத் தோடு
முரிசெயற் கரிய தண்ட முதலமுத் திரைமுன் வைத்து. (௮௩)

முரி செயற்கு அரிய தண்டம்-முரித்தற்கரியதண்டாயுதம்.

ஆக்குவா னழிக்க வெண்ணி லாரது காக்க வல்லார்
நீக்குவா யிதனை மற்றோர் பணிசெய நிறுத்து கென்று
தூக்குநீ துலைக்கோ லென்றான் சொற்றது கேட்டு நெஞ்சிற்
றூக்குமா றின்று வந்த தாழ்வென்கொல் சாற்று கென்றான். (௮௪)

துலைக்கோல்- நிறைகோல்.

கண்ணிக ளின்றிக் கையிற் கார்முகங் குனித்தம் பேவி
மண்ணின்மா வினங்கள் கொன்றும் வாய்த்தபுட் குலங்கண் மாய்த்தும்
வெண்ணிணத் தடிக டின்று வீக்கிய சடத்தா னன்றொன்
றுண்ணிகழ் வில்லா வேட னுன்பதத் துறைத லுற்றான். (௮௫)

தடி இறைச்சி. வீக்கிய-பருப்பித்த. நன்று ஒன்று உள்நிகழ்வில்லான் என்றுபிரிக்க.

பரிமகம் புரிகின் றானோ பகர்தரு மாக மாதத்
துரியநீர் படிகின் றானோ வுயர்சிவ லிங்க பூசை
புரிதர நினைகின் றானோ புண்ணியத் தலத்தி லுன்னைத்
தெரிசனஞ் செய்கின் றானோ சிவநிசி நோற்கின் றானோ. (௮௬)

எத்தவம் புரிந்தா னிங்ஙு னெய்துதற் கிறைவ வுன்றன்
சித்தமே தெரிந்து நீதி திறம்பிடி லறங்க டேயு
முத்தரும் பவங்கள் செய்யு மூர்க்கருஞ் சரியா யெண்ணிற்
றத்தலைக் கடனீர் சூழ்ந்த தாரணி கவிழு மன்றே. (௮௭)

முத்தர்-பாவமற்றதூயோர்.

என்னுடைத் தூதர் தம்மை யிகல்புரிந் திவனா லின்றிங்
குன்னுடைக் கணங்கள் செய்த துரைத்திடக் கேட்டி யோட்டி
மின்னுடைப் படையாற் றண்டால் வெட்டியும் புடைத்துஞ் சென்னி
முன்னுடைத் துதிரத் தோடு மூளைகள் சிந்தி னாரே. (௮௮)

தாவரும் பவங்கள் செய்வார் தாஞ்சிவ லோக மேவில்
யாவரைத் தண்டஞ் செய்வ தென்றெதி ரியமன் கூறத்
தேவரு முனிவர் தாமுஞ் சிந்தையிற் றியானஞ்செய்யு
மூவருந் தானாய் நின்ற மூர்த்தியு மொழிவ தானான். (௮௯)

விற்பயில் வேடன் முன்னாள் வேட்டமே லெழுந்து நந்த
மற்படு காலை யுண்டி யனந்தலற் றருகிற் சார்ந்து

ஏர்பெறு மளகை தன்னை யிருநிதிக் குபேரற் கீந்தாய்
பார்முத லெங்கும் வீசப் பவனனைப் பணித்தாய் மற்றை
ஊர்தருஞ் சலதி யாள வருணனை வைத்தாய் தன்மச்
சீர்கெடு மவர்க்குத் தண்டஞ் செய்வதற் கமைத்தா யென்னை. (௮௨)

திரிபுவ னத்து நீதான் செய்தகற் பனைக ளெல்லாஞ்
சரிவர நடந்த வொன்றுந் தமியனேன் பிழைத்த தில்லை
புரிசடைப் பரம வென்று புரிநெடும் பாசத் தோடு
முரிசெயற் கரிய தண்ட முதலமுத் திரைமுன் வைத்து. (௮௩)

முரி செயற்கு அரிய தண்டம்-முரித்தற்கரியதண்டாயுதம்.

ஆக்குவா னழிக்க வெண்ணி லாரது காக்க வல்லார்
நீக்குவா யிதனை மற்றோர் பணிசெய நிறுத்து கென்று
தூக்குநீ டுலைக்கோ லன்னான் சொற்றது கேட்டு நெஞ்சிற்
றாக்குமா றின்று வந்த தாழ்வென்கொல் சாற்று கென்றான். (௮௪)

துலைக்கோல்- நிறைகோல்.

கண்ணிக ளூன்றிக் கையிற் கார்முகங் குனித்தம் பேவி
மண்ணின்மா வினங்கள் கொன்றும் வாய்த்தபுட் குலங்கண் மாய்த்தும்
வெண்ணிணத் தடிக டின்று வீக்கிய சடத்தா னன்றோன்
றுண்ணிகழ் வில்லா வேட னுன்பதத் துறைத லுற்றான். (௮௫)

தடி இறைச்சி. வீக்கிய-பருப்பித்த. நன்று ஒன்று உள்நிகழ்வில்லான் என்றுபிரிக்க.

பரிமகம் புரிகின் றானோ பகர்தரு மாக மாதத்
துரியநீர் படிகின் றானோ வுயர்சிவ லிங்க பூசை
புரிதர நினைகின் றானோ புண்ணியத் தலத்தி னுன்னைத்
தெரிசனஞ் செய்கின் றானோ சிவநிசி நோற்கின் றானோ. (௮௬)

எத்தவம் புரிந்தா னிங்ங னெய்துதற் கிறைவ வுன்றன்
சித்தமே தெரிந்து நீதி திறம்பிடி லறங்க டேயு
முத்தரும் பவங்கள் செய்யு மூர்க்கருஞ் சரியா யெண்ணிற்
றத்தலைக் கடனீர் சூழ்ந்த தாரணி கவிழு மன்றே. (௮௭)

முத்தர்-பாவமற்றதூயோர்.

என்னுடைத் தூதர் தம்மை யிகல்புரிந் திவனு லின்றிங்
குன்னுடைக் கணங்கள் செய்த துரைத்திடக் கேட்டி யோட்டி
மின்னுடைப் படையாற் றண்டால் வெட்டியும் புடைத்துஞ் சென்னி
முன்னுடைத் துதிரத் தோடு மூளைகள் சிந்தி னாரே. (௮௮)

தாவரும் பவங்கள் செய்வார் தாஞ்சிவ லோக மேவில்
யாவரைத் தண்டஞ் செய்வ தென்றெதி ரியமன் கூறத்
தேவரு முனிவர் தாமுஞ் சிந்தையிற் றியானஞ்செய்யு
மூவருந் தானாய் நின்ற மூர்த்தியு மொழிவ தானான். (௮௯)

விற்பயில் வேடன் முன்னாள் வேட்டமே லெழுந்து நந்த
மற்படு காலை யுண்டி யனந்தலற் றருகிற் சார்ந்து

பொற்பமர் வில்வஞ் சாத்திப் பூசனை புரித லாலே
சொற்பயில் பாவ வேலை சுவறிடத் தூர்த்திட் டானே. (கூ0)

நந்தம் அல் படு காலை-சிவராத்திரியேளை. அனந்தல்-நித்திரை. வேலை கடல். சுவறிட-வற்ற.

இத்திற மறியாய் நீயு மெழுதருங் கணக்கில் வல்ல
சித்திர குத்தர் தாமுந் தெரிந்தில ரென்று திங்கட்
சத்திரன் றன்னைக் காய்ந்த சங்கர னுரைப்பத் தீட்டும்
பத்திர மெடுத்துப் பார்த்துக் கணக்கரும் பரிந்து போற்றி. (கூக)

திங்கட்சத்திரன்-சந்திரனுகியகுடையினன் (மன்மதன்.) தீட்டும்-எழுதிய.

சிவநிசி யென்ப தோரான் றின்பதற் கூன்கிட் டாம
லுவவசி யாகி நின்று னுவாப்புலி யெண்கு சிங்க
மவமெனைச் செய்யு மாலென் றஞ்சியவ் வில்வத் தேறித்
தவர்விடுங் கணைக ளேவிற் றடைசெயு மிடையி லென்றே. (கூஉ)

உவவசி-பட்டினியன். உவா-யானை. எண்கு-கரடி. தவர்-வில்.

கூர்தருஞ் சுரிகை யாலக் குழைகளைக் கொய்து வீழ்த்தா
னீர்தரு கண்க டம்மி னித்திரை வந்தா லிந்தப்
பார்தனில் வீழ்வே னென்று பயந்ததிற் பன்னம் பண்ணி
யேர்தரு மரைமான் பன்றி யின்றிவண் வருமென் றெண்ணி. (கூஙு)

சுசிகர மில்லா வேடன் றுயிறுறந் திருந்தா னீச
னிசியெனை நினைந்து தொன்றூ னீதியிற் செய்த தன்றென்
றுசிதமாய்க் கணக்க ரோத வொண்டழற் சுடலை தன்னிற்
பசிதமே பூசு மேனிப் பரமனும் பகரும் பின்னும். (கூச)

சுசிகரம்-ஆசாரம். துயில் துறந்து-நித்திரைவிட்டு. பசிதம்-சாம்பல்.

அதையுனக் கறைவங் கேட்டி யறிந்திடா தியற்ற லாலே
சிதைவிலாக் கணத்திற் சேர்ந்தான் சித்திரன் முத்தி நல்கும்
விதைநிகர் கங்கு றன்னில் விதித்தநூல் வழிவ ழாம
லிதையமீ தறிந்து செய்தா லியாமவ னவ னன்றே. (கூரு)

யாம் அவனவன் என்பதை அவன் யாமாவன் என்றுகூட்டி அவன் சாரூபபத விபெறுவன் எனவுரைக்க.

செவ்விர வனைய கூந்தற் சிவைமுத ளேற்றல் செய்யு
மிவ்விர தத்தின் மேன்மை யாவரே கணிக்க வல்லார்
கைவிரல் கண்ணிற் பட்டாற் செய்வதென் கவலை நீக்கி
மைவிர வியகார் மேனி மறலிநின் றூத ரோடும். (கூசு)

சிவை-உமாதேவி.

வைத்தமுத் திரையை வாங்கி வழிக்கொள்வா யென்ன ஞான
வித்தகன் கருணை யோடு விடைகொடுத் தருள வேண்டி
முத்தலைப் படைகொள் காலன் முதல்வனை முறையிற் றுழ்ந்து
சித்தமுந் தெளிந்து தேறித் தென்புலத் தெய்தி னனே. (கூஎ)

### வேறு.

வெங்கொ டுங்கொலை புரிந்த வங்குலனும் வெள்ளி வெற்பிலொரு புள்
ளிமான், செங்கை கொண்டருளு மண்ணல் கண்ணரு டினந்தொ றும்பெ
று கணங்களுக், கங்க ணற்றலைமை பெற்றி ருந்தபினொ ரைந்து பைந்தரு
வளந்தருந், துங்க முற்றகன கந்தி கழ்ந்திலகு சுரர்கள் வாழுலக மேவினான்.

ஆட கப்பொனுல கத்தி னீடுகொடி யாடு மாடுதிகழ் மாடமேற்
காட கத்தினுறை வேட னுற்றனர்கொள் கற்ப கத்தினிழ லுற்றடிப்
பாட கத்தொலி பரப்ப ரம்பையர்கள் பலரு நின்றருகு பணிசெய
மாட கத்திவவின் யாழின் விஞ்சையர்கள் வந்து பாடநனி வைகினான். (௯௯)

மாடகம்-முறுக்காணி. திவவு-கட்டு.

அளவி லாததின மங்கி ருந்துபுக ழளகை மாநகரின் வளமெலாந்
தளர்வி லாதவ னருந்தி முந்திமிகு சாடியிற் றயிர்நெய் தேடியே
களவி னாலிடையர் பாடி யிற்றிருடு கண்ணன் வண்ணமுறு கன்றினை
விளவின் மீதெறி முகுந்த னங்கணர விந்தன் வாழுலக மேவினான். (௧௦௦)

கொண்டல் வண்ணமுடல் கொண்ட கண்ணனருள் கொண்டு வைகிடு
வை குண்டமீ, தண்ட ரண்டினர்செய் தொண்டு கொண்டதனி லான
போகமவை யாவுமுண், டெண்ட விர்ந்ததின மங்கி ருந்துபி னிருக்க வத்தி
னர் பொருந்திடு, முண்ட கந்தனி லிருந்தி டுஞ்சதுர் முகன்றி ருப்பதவி மு
ன்னினான். எண் தவிர்ந்த தினம்-அளவற்றநாள். (௧௦௧)

ஓதி மக்கொடி யுயர்த்த நான்முக னுவந்த லோகமதி லுற்றதிற்
கோதி றப்புரவு துய்த்த பின்புநகை கொண்டு முப்புர மெரித்திடு
மாதி நற்கயிலை யுற்று ளத்தினி லரும்பெ ரும்பொருள் விரும்பவே
யீதி வற்கரன் மருது தந்தருள வின்ப முற்றினி திருந்தனன். (௧௦௨)

ஓதிமம்-அன்னம். துப்புரவு-அனுபவம்.

கைத வத்தினுயர் வேட னீடுசிவ கங்கு லென்பதுணை ராமலே
செய்த வத்திலிது பெற்ற னன்பரம சிவநி சிப்பெருமை சிந்தையிற்
பெய்த ருச்சனை புரிந்து கண்டுயில் பிரிந்த ருந்துத றவிர்ந்துளா
ரெய்து தற்கரிய முத்தி வீடதனி லெய்து வார்களிலை யையமே. (௧௦௩)

என்று சூதமுனி யோத மாதவர்கள் யாரு மேருவி லெடுத்தெயி
லன்று நீறுபட நூறு மாறுபுனை யரச னுக்குரிய விரசனி
யொன்று பாவவல் லிருட்க ருக்கனிக ரொக்கு மென்பதை யுணர்ந்தன
நன்று தேசிகநின் னாலெ னாமுடி துளக்கி நன்மொழிக ணல்கினார். (௧௦௪)

இரசனி-இரவு. தேசிக-குருவே.

அங்குலச்சருக்கமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௪௪௭.

# சௌமினிச் சருக்கம்.

வாதரா யணனென் றோது மறைதெரி முனிவர் கோமான்
பாததா மரைக ளுன்னிப் பரவசத் தோடும் போற்றிச்
சீதநாண் மதியஞ் சூடுஞ் சிவநிசிப் பெருமை யின்னுஞ்
சூதமா முனிவன் மற்றை முனிவரர் தமக்குச் சொல்வான். (க)

வாதராயணன்-வியாதமுனி.

தோடுறு கமலத் தோடு துளிமதுக் குவளை யாம்பற்
காடுறு கமல வாவிக் கயலினங் குதித்தங் காடக்
கோடுறு தவளக் கோடு குமிறுந்தண் பணைசூழ்ந் தம்பொன்
னாடுறு மமரர் தாமு நாடுங்கே கயநன் னாடு. (உ)

கோடு உறு-கரையிலுள்ள. கூனிய என்றுரைப்பினுமாம். தவளக்கோடு-வெண்சங்கு.

அரும்புறு கமலச் சூழி யதனினின் றெழுந்து வாளை
சுரும்புறு மலர்த்தண் சோலைச் சூதநற் கனிகள் சிந்துங்
கரும்புறு வேலி சூழ்ந்த கழனியிற் கதிர்ச்செஞ் சாலி
விரும்புறு முத்து நத்தி னித்திலம் விளங்கு மெங்கும். (௩)

சூழி-குளம். சூதம்-மாமரம். கழனி-வயல். செஞ்சாலி-செந்நெல். நத்தின் நித்திலம்-சங்கீன்றமுத்து.

புன்றலைக் கரிய செங்கட் புரிமருப் பெருமை வாயான்
மன்றலைக் கமழும் வாவி மலர்பல மேய்ந்து வாவித்
துன்றலைப் புனல தார்ந்து சுரந்துறச் சொரியுந் தீம்பால்
கன்றலைத் துண்ண வூட்டிக் காஞ்சிமா நிழலிற் றுஞ்சும். (௪)

நிறம்பயின் முந்நூல் பெற்றோர் நீதிமா மறைநூல் கற்றோர்
திறம்பயி லரசர் வாசச் சீரகத் தாமர் கொங்கைப்
பறம்பயி னெடுங்கட் செவ்வாய்ப் பார்மகள் புதல்வர் முன்னூ
வறம்பயில் குடிக டென்று மந்நாட் டகத்தி லுள்ளான். (௫)

சீரகத்தாமர்-சீரகமாலைபுனைந்த வைசியர். பறம்பு-மலை. பார்மகள் புதல்வர்-வேளாளர்.

வெந்தழல் வேள்வி செய்யும் விப்பிர னொருவன் முன்னாட்
டந்தருண் மடப்பொற் பாவை சவுமினி யென்னும் பேரா
ளந்தர வானில் வாழு மரம்பையை யனையாண் மாரன்
கந்தமா ரைந்து தண்பூங் கணைக்கிலக் காக நிற்பாள். (௬)

விப்பிரன்-பிராமணன்.

வளமிகு செல்வந் தன்னில் வளர்ந்துவற் சரமோ ரேழிற்
றளவமென் மூரற் பேதை தையலா ரோடு கூடி
யுளமகிழ் சிற்றில் கோலி யுறுகழங் கூச லாடி
யிளமயி லனையாண் மங்கைப் பருவம்வந் தெய்தி னின்றாள். (௭)

வற்சரம்-வருடம். தளவம்-முல்லை. மூரல்-பல்.

### வேறு.

தடங்கி டந்திடுந் தாமரை யரும்பெனத் தடித்துப்
படங்கி டந்தபாம் பேந்துபார் பகர்ந்திடத் தரள
விடங்கி டந்திப மருப்பிணை மருட்டிமா மணிப்பொற்
குடங்கி டந்தெனக் குலவிய கொம்மைவெம் முலையாள். (அ)

இப மருப்பு இணை-யானைக்கொம்பு இரண்டை. கொம்மை-திரட்சி.

வடித்த நெட்டிலை வேலொடு மாவடு வடிவாட்
டுடித்த செங்கயல் சுரும்புவேள் கரும்பினிற் றொடுக்குங்
கடிக்க ருங்குவ ளைகடமைக் கடுத்துநீள் வள்ளைக்
கொடிக்கி ணைக்குழைக் குழைகளிற் குதிக்குநீள் விழியாள். (கூ)

மா வடு-மாம்பிஞ்சு. குழைக் குழைகளில்-காதுகளிலணியப் பட்டதோடுகளில்.

கருகு கங்குல்பைங் களங்கனி முழங்கிடுங் கடனீர்
பருகு மங்குனற் பதிகமொத் ததிபரி மளங்கண்
மருவி நெய்த்துநீண் டளிக்குலம் விருந்துண மலர்ந்த
முருக லர்த்தொடை சூட்டியே முடிக்குமொய் குழலாள். (க0)

மங்குல்-மேகம். பதிகம்-பாசி.

கயிர வங்கவிர் தொண்டைமென் கனிகடற் பவளஞ்
செயிர றுஞ்செழுஞ் செங்கிடை கொங்கிடை யிலவம்
பயில்கொ ழுந்துண ரனைத்தையும் பழித்துமைக் கடைக்க
ணயில்வி டங்கொளு மவர்க்கமு துதவுசெவ் விதழாள். (கக)

கயிரவம்-ஆம்பல்மலர். கவிர்-முருக்குமலர். தொண்டை-கொவ்வைப்பழம். செங்கிடை-செங்கிடைச்சி. இலவம்-செவ்விலவம்பூ. இதழ்-உதடு.

சலந்த ரும்பொலந் தாமரை மலர்நிகர் முகத்தாள்
கலந்த ருந்தட மார்புடைக் காளைய ரெனுமா
வலந்த ருங்கட கரிகளை வணக்குமங் குசமாய்
நலந்த ருந்திலந் திகழ்குமிழ் நாணுநா சியினாள். (கஉ)

அங்குசம்-தோட்டி. திலம்-எட்பூ. குமிழ்-குமிழம்பூ.

தேன லர்ந்தரு சருக்கரை செழுங்கனி கரும்பு
பான றும்பொழிற் பசுங்கிளி மொழிகளைப் பழித்துப்
பேன வெண்டிரை கடைந்துமுன் றுளவணி பெருமான்
வான வர்க்கருண் மருந்தெனு மதுரமென் மொழியாள். (கங)

பேனம்-நுரை. மருந்து-அமுதம்.

பாரின் மேல்வளர் மரங்களிற் படர்ந்தமென் கொடியைக்
காரின் மேலெழு மின்னை நுண் ணூலினைக் கடிந்திட்
டேரி னுலுயர் மதனர சிருந்திடு மல்குற்
றேரின் மீதவ னெழுந்துநின் றெத்தசிற் றிடையாள். (கச)

அல்குல்-நிதம்பம். மன்மதன்போன்றஇடையாள்என்றது நுட்பம்பற்றி.

ஊற்றி ருந்தமு தொழுகிடு மல்குலுக் குலகின்
மேற்றி ருந்தர சிலையொடு தொடுகடல் விடுதேர்

காற்றி ரும்பசிக் கருந்திடுங் கட்செவிப் படமுந்
தோற்றி ருந்தவென் றுலதற் குவமையென் சொல்வாம். (௧௫)

மஞ்சஞ் சேர வெனத்துயின் மாயவன் மணக்கு
கஞ்சஞ் சீர்விழித் திருமக ளொடொறு நயக்குங்
கஞ்சந் தோற்றிடிற் கழியனப் பெடைநடை கற்கு
மஞ்செஞ் சீறடிக் குவமைமற் றியாதெடுத் தறைவாம். (௧௬)

மஞ்சம்-சயனம். மணக்கும்-விவாகஞ்செய்த. கஞ்சம்-தாமரை.

இனைய பேரெழில் வாய்ந்திடு மிளங்கொடி தனைக்கண்
டனைய தந்தைதாய் மிகமகிழ்ந் தகமதின் முந்நூல்
புனையும் பூசுர னொருவனுக் கிசைந்துளம் பொருந்தி
மனையி னன்மறைச் சடங்குடன் வதுவைசெய் தளித்தார். (௧௭)

நாம னுங்கலைப் பணவனு நளிர்மதி முகத்துப்
பூம னுங்குழற் பூவையும் புரிவொடு வைகிச்
சோம னும்புக லுரோணியுந் துவசமீ னுயர்த்த
காம னுந்துணைத் தேவியு மெனக்களித் திடுநாள். (௧௮)

நாமன்னுங்கலை-நாவில்நிலையுற்றசாத்திரங்கள். பூமன்னுங்குழற்பூவை-மலர்தங்கியகூந்தலினளாய் நாகணவாய்ப்புட்போன்றவார்த்தையுடைய சௌமினி. சோமன்-சந்திரன். உரோணி-உரோகிணி.

புலந்து றந்துவெம் பிணிகளாற் புணர்ந்துபூ சுரனு
நிலந்து றந்துட லிறந்திட நன்மதி நீங்கிக்
குலந்து றந்திடா நீதியைக் குறித்தவள் களத்திற்
கலந்து றந்துளாள் கலங்கினள் கைமையுற் றிருந்தாள். (௧௯)

களத்திற் கலம்-கழுத்திலணிந்ததாலி. கைமையுற்று-விதவையாகி.

வேறு.

வனவரிக் குயிலு மன்றிலும் வானில் வருநில வெழுமதிக் கொழுந்துந்
தினநிரை புரக்கு மாயர்வேய்ங் குழலுந் திறம்பெறக் கறங்குசே மணியு
மனலெனக் கனலுங் காமவெந் தீயை யநிலமொத் தனுதின மூட்டக்
கனதனக் கிரிகள் பசலைபூத் தலையிற் கண்படை பொருந்திலள் கலங்கி. ()

நிரை புரக்கும்-பசுக்கூட்டத்தை(மேய்த்துக்)காக்கின்ற. ஆயர்- இடையர். சே மணி-எருத்துமாட்டின் கழுத்திற்கட்டிய மணி. அநிலம்-காற்று· பசலை-தேமல்.

கோடுவாய் கூடக் கலைவளர் திங்கட் குடைமதன் படைபடும் பசும்புண்
ணூடுநீ டழற்கோ னுழைந்தெனத் தென்ற லுலவநெட் டுயிர்த்துள முருகி
வாடுநூ லிடைபோ லங்கமு மெலிந்து மதனநோய் பொறுக்கரி தாகித்
தேடுமோ டவர்கள் பலரையுங் கரவிற் சிந்தனை களித்திடச் சேர்ந்தாள். (௨௧)

கோடு வாய்கூட-வளைவுவாய்நிரம்பும்படி. திங்கள்-மதி.

மலைக்கிணை யெனப்பொற் சுணங்கலர்ந் தகன்று வட்டமிட் டெழுந்தி
று மாந்த, முலைக்கிடை யிடையுந் தடித்தரி விளரி முரல்செழு முளரிபோ

ன் முகமு, மலைக்கிடை யுதிக்கு மதியமொத் துடலு மங்கிற மாயமு தூறு, மி
லைக்கிடை மலர்ச்செவ் வாயிதழ் வெளுப்பக் கருப்பமுற் றிருந்தன ளிப்பால்.

சுணங்கு-தேமல். இடைஇடையும்-வருந்துகின்ற இடையும். அரி-வண்டு. வி
ளரி முரல்-விளரிப்பண்பாடுகின்ற.

அங்ஙக ருறையு மறையவ ரெவரு மறிந்தன ரவட்கடிந் தகற்ற (க்
வின்ன லுற் றிரங்கித் துணைவிழிப் புனலா லிணைமுலை களைக்குளிப் பாட்டி
கன்னலிற் கனிந்த மொழிச்சவு மினியுங் கான்வழிச் சென்றிடுங் காலைப்
பின்னவர் குலத்தில் வருமொரு காளை பிறைநுத லவள்கரம் பிடித்தே. (உரு)

எக்குலத் துளைநீ யார்மனை பேரே தெவ்விடத் தெய்துதி யென்ன, மை
க்குழற் குயில்வு முற்றவா றனைத்து மற்றவற் குணர்த்திட மயல்கூர்ங், திக்குவி
ற் குனிக்கு மதனனுக் குடைந்தாண் டிங்கிவள் கொங்கைமேற் காதன், மிக்
குனக் கினியான் பதியெனத் தனதுவியன்மனை மீதுகொண் டணைந்தான். ()

பதி என-நாயகனென.

மருவுயிர்த் திடுதண் மலர்க்குழ லணங்கு மற்றவன் றனுமா மலரிற்
றிருவுயிர்த் திடுமைங் கணைக்கிழ வனுநற் றேவியு மாமெனக் கூடி
யிருவுடற் குயிரொன் றுமெனத் தழூவி யின்பமுற் றிருந்திடு நாளிற்
கருவுயிர்த் தனள்பைங் காவியங் கண்ணி கணவனுந் தனதுளங் களித்தான்.

இன்னணஞ் சிலநாட் கழித்தனன் வேற்றூர்க் கிவளுயிர்க் கணவனே குதலுந்
தன்னலங் கெடுக்குங் களிமது நுகர்ந்து தமியளா யிருந்துகங் குலின்வாய்
மின்னலந் தருநுண் ணிடைமடக் கொடியும் விரகவெந் தீச்சுட வெதும்பி
நன்னலந் துறந்தா னருந்திடும் வேட்கை நனியுறத் தனியிது புரிவாள். ()

நடைதரு கொச்சை நாகுடன் புனிற்று னல்லிளங் கன்றுறு தொழுவி (ன்
னிடைபுகுந் தருந்து மதுச்செருக் கதனு லிரங்குமா னீன்றகன் றினைக்கொ
றுடையதன் னகத்திற் கொண்டுசென் றிரவி னூனருந் திடுவதற் கெண்ணி
மிடையிருட் கடியத் தகழிநெய் வாக்கி மென்றிரி விளக்குமேற் றினளால். ()

கொச்சை-ஆடு. புனிறு ஆன்-ஈன்றணிமையானபசு. தொழுவில்-(மந்தையில்)
கூட்டத்தில்.

அவ்வயிற் செகுத்த தாவிளங் கன்றென் றறிந்தன ளயர்ந்தனண் மயங்கிச்
செவ்வயிற் கண்ணுள் கன்னலோ ரிரண்டு சிவசிவ வெனத்தியா னித்துப்
பவ்வநீ ருலகோர் பழித்தகட் குடித்த பழுதுவந் ததுவெனப் பயந்து
மெவ்வமி லாம லூனுணத் துணிந்தாள் யாவரே விதிவலி கடப்பார். (உஅ)

புள்ளெனுங் கண்ணுள் புள்ளம தெடுத்துப் புறணிக ளுரித்தரிந் துரிசை
யுள்ளவள் ளூரங்கள் வேறுவே றமைத்திட் டுவப்புறக் கருனைசெய் தருந்தி
வள்ளவாய்க் கமல நாயகன் பூரு வத்திசை வரும்பொ ரியின்வாய் (வாள்.
வெள்ளெலும் பனைத்து மள்ளினள் கொணர்ந்து வீதியிட் டிலையிசைத் திடு

புள்-வண்டு. புள்ளம்-அரிவாள். புறணி-தோல். வள்ளூரம்-பசுவினிறைச்சி.

வெய்யதிச் சுழல்கட் கொடுவரி வடிவால் மென்குழக் கன்றினை யொறு
த்தின், றையசோ இன்று போயது மறுகி லனைவருங் காண்மினென் றெறி
ந்து, தையன்மீண் டிற்பா லெய்தினள் வேளாண் டகைபெறு காளைகேட் டெ
ய்திச், செய்யவாய் மையினீ பிழைத்தனை போலு மெனவவட் டேற்றினனி
ருந்தான். கொடுவரி-புலி. மறுகில்-வீதியில். (௩0)

வெறுத்தன ளிகவா னங்கவள் கொங்கை விழைநல வேட்கை மீதூர்ந் திட், டிறுத்தபே ரன்பா லன்றுபோ லென்று மின்பமுற் றிருந்திடு நாளிற், கறுத்துவல் விடத்தை நிகர்த்தவெம் பிணிகள் காயமீ துடற்றிடத் தேம்பி, ம றுத்தவிர் மதியை மருட்டுவொண் முகத்தாள் வருந்தினண் மரணமுற் றனளே.

வேறு.

அச்சமை யத்தினி லடர்ந்து வாரியிற்
கைச்சமைக் கடுநிகர் கால தூதுவர்
பொய்ச்சமை மின்னிடைப் பூவை மென்மொழி
மச்சமை விழியுயிர் வௌவி யேகினார். (௩௨)

கைத்த கச்ச எனவும், பொய்த்த பொச்ச எனவும், மற்ச மைச்ச எனவுந்திரிந் து நின்றன.

நந்தலி றென்புல நண்ணி நண்ணரும்
வெந்திறற் கூற்றின்முன் விடுப்ப நான்முகத்
தந்தமி றீவினை யனைத்து மாய்ந்தபின்
பைந்தொடி முகத்தினைப் பார்த்துக் கூறுவான். (௩௩)

அன்றிருட் பொழுதினி லானின் கன்றினைக்
கொன்றிருந் தரன்றிரு நாமங் கூறிய
நன்றியிற் கொடுந்தழ னரகந் துய்த்திடு
மொன்றிய தீவினைக் குரிய ளல்லைநீ. (௩௪)

சிலைமக ளாக்கிய தேவன் பின்வரு
மலைமகட் குடமிடம் வழங்கி வானதி
யலைமகட் சூடினோ னருளிற் கூறினான்
புலைமக ளாய்ப்புவி போதி நீயென்றே. (௩௫)

சிலைமகளாக்கியதேவன்பின்வரும்- (சாபத்தால்அகலிகையுற்ற) கருங்கல்வடிவத் தை அவ்வகலிகைப்பெண்ணாக்கிய விஷ்ணுபகவானுக்குத்தங்கையாயுற்ற. அலைமக ள்-கங்காதேவி.

அந்தக னுணையா லழகின் மேனியு
நொந்துடல் பொறுக்கொணா நோய்க ளுங்கொடு
கந்தமார் குவளைநேர் கண்க ளின்றியே
வந்தொரு புலைமகள் வயிற்றிற் றோன்றினாள். (௩௬)

அந்தகன்-யமன்.

அறந்தவாத் துறவிர்கா ளணங்கு நோயுடன்
சிறந்தவாட் படைநிகர் திருட்டி யின்றியே
மறம்புரி புலையர்தங் குலத்தில் வந்தவள்
பிறந்தகா ரணமினிப் பேசக் கேட்டிரால். (௩௭)

உம்மையிற் கற்பொரீஇ யுளத்த வாக்கொடு
கைம்மையிற் பலரையுங் கலந்த தீமையாற்
செம்மையின் மேனியிற் றீய குட்டமும்
வெம்மைகொள் சூலைநோய் முதல்வி யாதியும். (௩௮)

உம்மை-சென்றபிறவி.

MAHAMAHOPADHYAYA

பெற்றன ளவளொரு பிடிய தாயினு
மற்றவர் பசிக்கன லவிக்க விட்டுணுக்
குற்றம தாற்பசிக் கொடுமை கூர்துய
ருற்றவ டேம்பிடு முடலந் தாங்கினாள். (௩௯)

பெற்றனள் என்ப முற்கவியோடுசேர்த்துமுடிக்க. அற்றவர்-வறியர். இட்டு ணு-கொடுத்துண்ணுத.

பலத்தினை மிகத்தரும் பசுவின் கன்றினை
வலத்தினிற் செகுத்துவள் ளூரங்கண் மாந்தலா
னிலத்தினிற் புன்றொழி னீச ரொன்றிடுங்
குலத்தினிற் றோன்றினள் கொடிய நீர்மையாள். (௪0)

செகுத்து-கொன்று. வள்ளூரம்-பசுவினிறைச்சி.

எண்ணுநல் வினையினை யிகந்து தீவினை
பண்ணிட வியற்றுகட் குடித்த பான்மையாற்
கண்ணினை யின்றிமைக் கடலு டுத்திடு
மண்ணின்மேற் றோன்றிமெய் வருந்தி னாளரோ. (௪௧)

வேறு.

இனைய நீர்மைய ளீன்றதாய் தந்தைய ரிறப்ப
மனைமெ ளைத்தனை மணந்துகொள் வார்களு மின்றி
யனைய வூர்ப்புலைச் சேரியி னையமேற் றருந்தித்
தினையி னேர்நல னின்றிநல் குரவொடு திரிந்தாள். (௪௨)

நல்குரவு-வறுமை.

திரைமு திர்ந்தொர்மாத் திரையுநித் திரையிலாள் களத்த
மரைமு திர்ந்திடக் குரைத்திட வளைத்துமெய் கூனி
யுரைமு திர்ந்தவ ருவமிட் டுரைத்தகொக் கொப்பா
நரைமு திர்ந்துநல் லிளமைபோய் முதுமைநண் ணியபின். (௪௩)

திரை-தோல்சுருங்குதல். களத்து அமர் ஐ-கண்டத்துட்பொருந்திய சிலேட்டுமம். குரைத்திட-இரைந்திட.

சொன்ன மாசிநற் சிவநிசி நோற்றிடத் தொடங்கி
யன்ன மாநகர்ச் சனஞ்செல வறிந்தவர் கூடப்
பின்ன மன்றிமற் றொருபுலை மடந்தைதோள் பிடித்துக்
கன்ன லார்வய றுன்னுகோ கன்னமீ தடைந்தாள். (௪௪)

மாகசிவநிசி-மாசிமாதசிவராத்திரி.

தீய வெம்பசி கனற்றவோர் தெருத்தனி லிருந்து
தூய கண்ணிலேற் குதவுமின் சோறென விரந்து
கூய போதிலம் மறுகிடைக் குறுகுமோர் களிய
ளுய வில்வநிற் குணவிதென் றவள்கரத் தளித்தான். (௪௫)

களியன்-களிக்குமியல்புடையவன்.

புன்மை யாலவ ளிட்டகூ விளதளைப் புசித்தற்
கன்மை யாலய லெறிந்தன ளாங்கது பழைய
தன்மை யாகிய சிவலிங்க நாயகன் றலையிற்
றின்மை தீர்ப்பவர் சாத்திய தழையெனச் சிறந்த. (௪௬)

அற்றை நாட்சிவ ராத்திரி யனந்தலூ ணகற்றிப்
பற்றை நேர்கரப் பரையொரு பாகமாம் பரமன்
கற்றை வார்சடை முடியெறி கவின்கொள்வில் வத்தாற்
பிற்றை நாட்சிவ பூசனை புரிபலன் பெறுவாள். (௪௭)

அனந்தல்-நித்திரை. பற்றை நேர் கரம்-செடிபோன்ற பச்சையொளியையுடைய.

யாம நான்குமன் றிரவுபத் துகமென வெண்ணித்
தூம மாரழற் பசியினுற் றுயின்றில ளிருந்தாள்
சேம மார்தடந் தேர்கடி தருணன்முன் செலுத்தக்
காமர் செங்கதிர்க் கடவுளுங் குணபுலத் துதித்தான். (௪௮)

அருணன்-சூரியனதுதேர்ப்பாகன்.

விடியல் காண்டலு மீண்டொரு தெருத்தலை மேவி
யடிசி லேற்பமற் றப்புலை யரிவைதோள் பற்றி
நெடிது சேறலுங் காறளர்ந் துயிர்நிலை நீங்க
மிடிசெய் மூப்புவெந் நோய்பசி வருத்திட வீழ்ந்தாள். (௪௯)

ஆத பத்தழல் கொளுத்திய நிலத்தில்வீழ்ந் தழுந்தி
யேத முற்றவள் பட்டவெந் துயரள விலைப்பின்
பாத கப்புலை மகளுட றணந்துயிர் பறிந்து
போத லுற்றிடத் தொடங்கியே புறப்படும் போதில். (௫௦)

பணிப்ப ணிப்புயக் கணிச்சியம் படைப்பர னருளா
லெணிக்க ணிக்கருங் கணங்களை யேவிநீர் மேவிக்
குணிக்க ரும்புலை மகளுயிர் கொணர்மினென் றுரைப்ப
மணிச்செ ழுஞ்சுடர் விமானமோ டிம்பரின் வந்தார். (௫௧)

பணிப்பணி-சர்ப்பாபரணம். கணிச்சி-மழு.

அன்ன காலையிற் புலைமக ளாவியைப் பொலமென்
றுன்ன வேவருந் திவ்விய வுருவினிற் சேர்த்துக்
கின்ன ராதியர் பாடிடக் கிளிமொழித் துவர்வாய்ச்
சின்ன நூலிடை யரம்பையர் நடம்பயில் செய்ய. (௫௨)

பொலம்-பொன். துவர்-பவளம்.

தக்க துந்துபி முழக்கிடச் சாமர மிரட்ட
வக்க ணத்தினி லவிர்மணித் தேர்மிசை யேற்றித்
தொக்க வெண்ணிறச் சோதிவிட் டொப்பறத் துலங்கு
மிக்க பேரெழிற் கயிலையிற் செல்லுவான் விரைந்தார். (௫௩)

கண்ண னாயிரங் கண்ணனெண் கண்ணனற் கதிர்க
டண்ணெ னுண்மதிக் கடவுளுஞ் சலசநட் புடைய
வண்ண வான்கதிர் வானவர் முனிவர ருரகர்
விண்ணு லாவிய சித்தரோ டியக்கர்விஞ் சையர்கள். (௫௪)

கண்ணன்-விஷ்ணு. ஆயிரங்கண்ணன்-தேவேந்திரன். எண்கண்ணன்-பிரமா.

பரிந்து போற்றிநின் றவர்க்கெலா மருள்விழி பரப்பி
வரிந்த நீள்குரன் மாடகத் திவவியாழ் வாங்கிப்

புரிந்த வார்சடை நாரதன் புகலருஞ் சுருதி
தெரிந்து பாடிய பாடலிற் செவித்துணை கொடுத்து. (௫௫)

மாடகம்-முறுக்காணி. திவவு-கட்டு.

கையின் மான்மழுப் பிறங்கிடக் கனற்பிழம் பனைய
மெய்யி னீற்றொளி விளங்கிட விடநுகர்ந் திருண்ட
மையி னிற்றிகழ் கண்டமும் வண்டுபோண் மிழற்றச்
செய்யி னுறுசெங் கமலநேர் வதனமுந் திகழ. (௫௬)

செய்யில்-(நீர்)வயலில்.

படரு மென்கொடி யறுகிலைப் பசுமையாற் பொதிப்பை
விடநெ டும்பணிச் சுடிகையிற் றிகழ்மணி வெயிலா
லடர்த டந்திரைக் கங்கையா லணிசடா டவியிற்
றொடருஞ் சந்திர னிந்திர சிலையெனத் தோன்ற. (௫௭)

உழலை சேர்பவ வெயிற்றொதுங் கிடத்தன துபய
கழலை நீழலா யடியவர்க் கருள்புரி கந்தன்
குழலை யாழினை யமுதினைக் குழைத்தன குதலை
மழலை கேட்டொளி மகிழ்ந்திடு வாணகை வயங்க. (௫௮)

கந்தனது மழலைகேட்டென் றுரைக்க. வாள் நகை-ஒளிதரும்பற்கள்.

கலக வாள்விழி யரம்பையர் கவரிகா லசைப்ப
வுலகி லாருயி ரனைத்தையும் பெற்றசிற் றுதரத்
திலக வாணுத லுமையுடன் செம்பொனா லியன்ற
விலகு மாமணி யாசனத் திருந்தன னிறைவன். (௫௯)

ஆறு சூடிய வண்ணன்முன் னந்தரத் தியங்கு
மேறு சீர்மணி விளங்கிய விமானநின் றிறக்கிக்
கூறு மிப்புலை மடந்தையை விரைந்துடன் கொடுபோய்
வீறு சேர்கண நாதரக் கணத்தினில் விடுத்தார். (௬0)

எம்பி ரான்றிரு வுளங்கனிந் திரங்கியங் கவடன்
வம்பு லாந்திரு மலர்முக நோக்கியிவ் வரைக்க
ணம்பு லாம்விழி மாதரோ டிருத்திமற் றதற்பி
னும்பர் நாடரு முத்தியுந் தருதுமென் றுரைத்தான். (௬௧)

அனைய வவ்வுரை கேட்டன ளகமகிழ்ந் திருந்தா
ளினைய மாக்கதை படித்தவர் கேட்டவ ரெவரும்
வினையொ ழிந்தர னருள்பெறு வாரென விரித்துப்
புனைநெ டுஞ்சடைச் சூதனம் முனிவர்க்குப் புகன்றான். (௬௨)

சௌமினிச்சருக்கமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௫0௯.

# கன்மாடபாதச்சருக்கம்.

ஏதமற் றுயர்ந்த சீர்த்தி யெம்பிரா னிரவின் காதை
யோதமற் றுளதொன் றுங்கட் குணர்த்துவன் கேண்மி னென்று
மாதவத் துயர்ந்த செய்ய மறைதெரி முனிவர் கேட்பச்
சூதனுற் றமுத மாரி சொரிந்தெனச் சொல்ல லுற்றான். (க)

பைம்புலி புலர்த்துங் கொங்கைப் பாவைய ரூடுங் காலச்
சம்புலி வருந்த மாலைச் சமனெயி றென்ன வேக
வெம்புலி யென்ன முன்னி மேற்றிசை தோற்று மென்கீற்
றம்புலிக் கொழுந்து ரிஞ்சி யயோத்திமா நகரொன் றுண்டால். (உ)

பைம்புலி-பசியசாந்து.

மன்னர்தம் மன்ன னென்ன வருந்தச ரதன்பான் முன்னாட்
பன்னக மீதிற் றுஞ்சும் பசுந்துழாய் முகுந்தன் றோன்று
மந்நக ரளிக்கும் வேந்த னுதபன் குலத்தில் வந்தோன்
கன்னலந் தருதிண் டோளான் கருதலர்க் கடியும் வாளான். (ஙு)

குத்திர மறவோர் செய்ய கோல்வளை யாமற் கோளிப்
பத்திர சயன னென்னப் பரிந்துயிர் பாது காப்போ
னத்திர நயனச் செவ்வா யரிவையர்க் கனங்க னன்னான்
மித்திர ச்கன னுமம் விளங்கிலை யலங்கல் வேலோன். (ச)

கோளிப்பத்திரசயனன்-ஆலிலைப்பள்ளியோனாகிய விஷ்ணு.

குன்றென வளர்ந்து வீங்குங் குவிமுலைப் பவளச் செவ்வாய்
மன்றலங் கோதைக் கோதை மதயந்தி யென்னு மாதைத்
தன்றடஞ் செங்கை பற்றிச் சடங்குசெய் தழல்சான் றாக
முன்றவ முடிவான் மன்றன் முடித்தவன் முயங்கு நாளில். (ரு)

கோதைக்கோதை-மாலைபுனைந்தகூந்தல்.

விலங்குபுட் கலங்க மாய்க்கும் வேட்டமேன் விருப்ப முற்றி
யுலங்கெழு வயிரத் தோளா னொண்மலர் பொதுளிப் பூத்த
பொலந்தருச் சினைகள் வானம் போனவெங் கானம் போவான்
பலங்கொள்கா ழகப்பட் டாடை பட்டிகை மருங்கிற் சேர்த்தி. (சு)

காழகம்-கரிய.

செஞ்சுட ரெறிக்குஞ் செம்பொற் செழுமணி மகுட நீக்கிக்
குஞ்சிபூந் தொடையிற் சூழ்ந்து குலவிட விசித்துக் கூர்மை
விஞ்சிய சுரிகை சேர்த்து வெறுக்கையி னமைத்த பச்சை
மஞ்செனத் தோற்றுஞ் சோதி மரகதக் கவச மிட்டு. (எ)

வெறுக்கையின்-பொன்னால்.

கைப்புடை கட்டி வென்னிற் கடுங்கணைத் தூணி தூக்கி
மைப்புடை வரையுங் கண்ணா ரூதணிகர் வரிவில் வாங்கி
மெய்ப்புடை மனங்கா லொத்து விரையுமைங் கதியிற் செல்லு
நெய்ப்புடை மேனி மேக நீணிறப் பரிமேற் கொண்டான். (அ)

சங்கொடு படகங் கொம்பு தவிறுழ் தழங்கி யார்ப்ப
வெங்கொடுங் கொலைசெய் வாளி வில்லொளி விளங்கும் வைவே
லங்கவை தரித்த தானை யளவில சூழ மண்ணிற்
பொங்குநுண் டூளி யோரெண் புலம்புக விசும்பு போர்ப்ப. (௯)

தவில் துடி என்றுபிரிக்க. எண் புலம் புக-அட்டதிக்குகளிடத்துஞ்செல்ல.

பெரும்புரி வலைவார் கூந்தற் பிடியினஞ் சுமந்து செல்ல
விரும்புறு வேடர் கையில் விரைந்தெதிர் குரைக்கு ஞாளி
யிரும்புறு தொடரிற் பூட்டி யீர்த்தனர் செல்ல வல்லே
சுரும்பிமிர் தொடையான் கானச் சூழல்வாய்ச் சென்று புக்கான். (௧௦)

ஞாளி-நாய். தொடர்-சங்கிலி.

வேறு.

வலைவார்பல நிலையாநெடு வானூடு வளைப்பார்
சிலைகோலினர் சிறுநாணொலி திசையேற விடுப்பார்
கலைமான்மரை முயனீடிய களிறோடு களிற்றின்
றலைபோயற விறன்மீளிகள் சரமாரி தொடுப்பார். (௧௧)

களிறோடு-பன்றியோடு.

கொடிகொண்டிடு தருவிற்படர் கொம்பேறி விழிப்பார்
மடியுஞ்செவி வளைவாலகல் வாய்நாய்கள் விடுப்பார்
தடிகொண்டெறி தருவார்சுழல் தழலின்க லுகைப்பார்
பொடிகொண்டிடு நிலனிற்சில பொறிநின்று புதைப்பார். (௧௨)

தழல்-கவண்.

அடல்சேருழை படர்தாரியி னடிதேடினர் தொடர்வார்
மிடல்சேர்தரு மிருகாரியை விறல்வேலினி லெறிவார்
வடவாமுக வனலார்சின வலுநீடுகி ருளியத்
துடலூடற வடிவாளிக ளுடனேவினர் விடுவார். (௧௩)

படர்தாரி-போனவழி. மிருகாரி-சிங்கம். உளியம்-கரடி.

வருமித்திரன் மரபுற்றிடு மனன்முற்றரி யலர்போர்
பொருமித்திர சகனுற்றொரு புரிவிற்றனி குனிவித்
துருமிற்றொடு கணையிற்பல மிருகத்தை யொறுத்துத்
தருமித்திற லெவரிப்புவி தனியொப்பென நின்றான். (௧௪)

மித்திரன்மரபு-சூரியகுலம்.

வேறு.

இவ்வண்ண நெடுங்கானி லடும்வேட்டம் புரிந்திடுமவ் வெல்லை கால
மைவண்ணத் தடலரக்க ரிருவரொரு வயிற்றுதித்தோர் வந்து தோன்றிப்
பைவண்ணப் பெரும்பாந்த ளேந்துலக மொருகுடைக்கீழ்ப் பாது காக்குஞ்
செவ்வண்ணக் கதிர்வேலோ னுடன்றருக்கி நெருக்கியமர் செய்கின் றூரால்.

அந்நிலைகண் டன்னவரின் முன்னவனைத் துரந்தரச னங்கை வாளாற்
சென்னிதுணித் தனன்குருதி நீரோட வாங்கதனைத் தெரிய நோக்கி
யிந்நிலையில் வெலற்கரிதென் றிளையோனும் வஞ்சகங்க ளியற்றி யானே
பின்னிவனை வெல்வனென மீண்டோடி மனிதருருப் பெற்று வந்தான். ()

வந்தாசன் றன்னிருதா டொழுதெழலு மாங்கவனுன் வரவே தென்னச்
சந்தணிருத் திரப்புயமித் திரசகனே யுனதேவல் சலிப்பிலாம
லிந்தவுட லுள்ளளவு மிழைத்திடுவா னெண்ணிவந்தே னென்ன முன்னங்
கொந்தழலி லடிசிலடும் வாலுவர்தந் தொழிலவற்குக் கொடுத்தான் மன்றே.

ருத்திரம்-மலை. வாலுவர்-சமையற்காரர்.

வன்புலஞ்சா னனம்பயிலும் வனநீங்கி யயோத்திநகர் வந்து தாங்கும்
பின்புலஞ்செய் திரடோளான் மதயந்தி யுடன்வாழ்விற் பெருகு நாளிற்
றென்புலஞ்சென் றடைந்தபிதிர்க் கடன்கழிக்குந் திவசமுறச் சிந்தை மேவுந்
தன்புலங்கொண் டுத்தரத்திற் சாலிதவன் வரவழைத்துத் தாளிற் றாழ்ந்தே.

வன்புல் அஞ்சானனம்-வலியபுலி சிங்கம். உலப-திரண்டகல். சாலி தவன்- அருந்ததிநாயகன் (வசிட்டமுனி.)

ஆசனத்தி லிருத்தியபின் னருக்கியபாத் தியமுதலர்ச் சனைக ளாற்றிப்
போசனத்துக் கெழுந்தருளப் புரிதியென வருந்தவனும் போந்த போதி
னீசனெனத் தகுநிருத னடுமுதத் தொடுதனது நினைவின் வண்ணம்
பாசனத்தின் மனிதருடற் றடியரிந்து சமைத்ததனைப் படைத்திட் டானே.

பாசனம்-போசனபாத்திரம். தடி-தசை.

வண்டுபடும் பசுந்துளபத் தொடையான்வெள் விடையான்றண் மலர்களுள்ளங், கொண்டுபெருந் தவமியற்றும் வசிட்டமுனி முனிவுடனிக் கொற்ற வேந்தன், றெண்டுபடு மிவனுடனிந் நரனூனிக் கலத்தினிடச் சொன்னா னென்று, கண்டுகனற் பொறிகாலக் கண்ணிணைகள் சிவந்துமிகக் கனன்று நோக்கி. (௨௦)

மறுவையவித் தொளிருமுழு மதிக்கவிகைத் தனிச்செங்கோன் மன்னமுந்நீ, ரறுவையுடைப் பெருநிலத்திற் றிருவிழந்து கருநிறங்கொ ளரக்க யாக்கை, பெறுவையெனச் சபித்திடலு மனத்தழுங்கி யரைக்கணத்துட் பின்பு தேறித், தெறுவையயிற் கரனுயர்மித் திரசகனு மனமதனிற் சினமீக் கொண்டே. (௨௧)

முந்நீர் அறுவை-கடலாகியவஸ்திரம். தெறு வை அயில் என்றுபிரிக்க.

மனுநிகளிற் பிழைத்தறியா வெனைச்சூளிட் டனையுனையும் வைவே னென்னாத், தனுநிதழ்த்தா மரைக்கரத்துச் சலங்கொண்ட சலங்கண்டு தாழ்ந்து தேவி, திருநிபகோத் திரமுதல்வ தேசிகனே மாசின்மறை செப்புந் தெய்வ, மெனுநினிநீ சபித்தறகா தெவரரசர் குரவரைச்சூ ளிட்டா ரென்றே. (௨௨)

சலம்-நீர். சலம்-கோபம்.

தன்மாடத் தனிரியனின் றுரைத்திடலும் பாணியிற்கொள் சாபப் பாணி, பொன்மாட வயோத்திநகர்ப் புரவலன்றன் குறைகழற்றாட் போதிற் பெய்தான், சொன்மாட மெனக்கறுத்த தக்கணத்தக் நீர்மையினாற் சுடர்வேல் வேந்தன், கன்மாட பாதனெனப் பேர்படைத்தா னீர்படைத்த கடற்பாரெங்கும். பாணி-கை. பாணி நீர். மாடம்-உழுந்து. (௨௩)

## வேறு.

கன்றிய வெகுளி நீங்கிக் காவல னிற்ப முன்ன
ரொன்றிய தவத்தின் மேலா முறுவனுங் கோப நீங்கிப்

பின்றிய வரக்கன் செய்த பிழையிது பிழைத்தொன் றென்பா
லின்றிவன் புரிந்த தீமை யின்றென யோகிற் றேர்ந்தான். (௨௪)

உறுவன்-முனிவன்.

விற்சர நுதற்சட் செவ்வாய் விரிதிரை யமுத மானுஞ்
சொற்சர சுவதி கேள்வன் றோன்றல்மான் றடந்தேர் மன்னை
யற்சர னாகிக் கானி லடைந்துசஞ் சரித்தீ ராறு
வற்சரங் காறு நிற்றி மாறுமுன் சாப மென்றான். (௨௫)

அற்சரன்-அரக்கன்.

உரோந்தனி லுணர வொண்ணா வூழ்வினை வசத்தாற் கூத்தர்
வளங்கொண்முற் கோல நீங்கி மற்றொரு கோலங் கொண்டு
துளங்கிடத் தோற்றல் போலத் தொல்லுருக் கரந்து திங்க
ளிளம்பிறைக் குழவி போலு மெயிறுடை யரக்க னானான். (௨௬)

மைக்கணத் திதழ்ப்பூங் கோதை மனைமடந் தையர்க ளெல்லாஞ்
செக்கணத் தியம னென்னச் சிந்தையில் வெருக்கொண் டேகி
யக்கணத் தகன்று போனா ரருந்தவக் கிழமை பூண்ட
மெய்க்கணத் தவர்கள் சாபம் யாவரே விலக்க வல்லார். (௨௭)

வேறு.

வடிக்குரன் மணியா ழிசைமுரன் றறுகால் வரிச்சுரும் பரற்றுபூ மாலைக்
கடிக்குரன் மடவார் பாற்கடற் றிரையின் கற்றைவெண் கவரிகா லசைப்ப
விடிக்குரன் மடங்கல் சுமந்தபே ரணையி லிருந்தர சியற்றிய விறலவ
னடிக்குர னிகராங் கரிகொடு வரிசே ரடவியி னக்கணத் தடைந்தான். (௨௮)

கடிக்குரல்-வாசக்கூந்தல். அடிக்கு உரல் நிகராம் என்றுபிரிக்க.

பாய்கலைப் புரவிப் பவனனு மியங்காப் பசுநிறப் புரவியந் தேரோன்
காய்கதிர் நுழையாக் காட்டிடை விலங்கின் கணமெலாங் கொன்றுகொன் ற
தீயவா ளரக்கன் றிரிதரு காலைத் திருத்தகப் புதுக்கடி புரிந்த (ருந்தித்
தூயவா ணகையுந் தொழுகுலத் துதித்த தோன்றலு மாங்குறக் கண்டான்.

புதுக்கடிபுரிந்த-புதிதாக விவாகஞ்செய்த.

கண்டவா ளரக்க னுவகைமீ தூரக் களித்தன னொளிக்கதிர் மதியிற், றுண்டவா ளெயிறு துலங்கிட நகைத்துத் துண்ணென நண்ணியொண் ணிறப்பூ, முண்டகா சனன்றன் குலத்தில்வந் துதித்த முனிவரன் புதல்வனைப் பற்றிக், கொண்டவா வுடன்வெண் ணிணத்தடி யருந்துங் கொள்கையிற் கொல்லுவான் றுணிந்தான். (௩௦)

அன்னகா லையிலங் கவன்முக நோக்கி யந்தண னருந்துணைத் தேவி
மன்னகேள் சால கடங்கடர் மரபில் வந்தனை யல்லைநீ முனிந்து
முன்னமே யிவனைக் கொல்லுவை யாயின் முளிதரு விறகுதீ மூட்டி
பென்னதா ருயிரு மிறப்பனின் றெனக்கோ ருயிர்ப்பலி யீதியென் றிரங்கி.

சாலகடங்கடர்-அரக்கர். முளிதரும்-காய்ந்த.

தன்றுணைத் தடங்க ணீர்முலைத் தடத்திற் றாரைவிட் டொழுகநின் றிரந்தே, யன்றுரைத் திடுஞ்சொற் செவிக்கொளா னாகி யந்தணன் மைந்தனை விரைவிற், கொன்றுடற் குருதி பிழிந்துமுன் குடித்துக் கொழுந்தசை

கறித்தகல் வாயின், மென்றுட னருந்திப் பைந்தொடிக் கெதிரா வெள்
ளெலும் பனைத்தையு முமிழ்ந்தான். (கஉ)

என்செய்வா ளுமிழ்ந்த வென்பெலா மடியிட் டெடுத்தன ளெய்தியவ் வென்
மின்செய்தீ யதனிற் பெய்திது செய்த வேந்தர்கோன் றன்பதி மேவிப்(பைம்
பொன்செய்பூண் முலையார் முலைகலப் போகம் புணருநா ளிறக்கவென் றுரு
முன்செய்தீவினையாற் சாபமீ திட்டு முழங்கழ லூடுபுக் கவிந்தாள். (க்து

வேறு.

புரமுனியும் பரமனிரு பதப்போது முப்போதும் போற்றுந் தெய்வ
வரமுனிவன் சாபமகன் றரசனிரு மருப்பொருமும் மதகால் வாய்க்குஞ்
சரமுனிவன் பிடிதிரிச ரிகடெரிந்தே யரிதுருவுந் தடங்கா னீங்கிக்
கரமுனியுங் கணையுமில்லாக் காமனென வயோத்திநகர் கடிதி லுற்றான். ()

குஞ்சரம் முனி வன்பிடி திரிசரிகள்-யானை கன்று வலியபெண்யானைகள்திரி
கின்றவழி. கரமுனி-கையில்.

நெடிதுதினம் பிரிந்தகன்ற நீர்மையினுற் றிரண்டதிண்டோ ணிருபன் முனு
மடியிணையா மலர்கள்கன்றிச் சேப்பூர விரைந்துநடந் தன்பி னோடும்
பிடியதனை நாடிவரும் பெருந்தடக்கைக் களிறெனவேள் பெய்யும் வெய்ய
வடியயில்வா ளிபினுடைந்து வருந்தியந்த மதயந்தி மனையுட் புக்கான்.(கரு)

வந்தவடன் றுணைமுலைகண் மருவுவான் றுணிந்திடலு மன்ன கானி
லந்தநிசி சரனுகி முனிவனைக்கொன் றனையதனு லவன்றன் றேவி
வெந்தழலின் மிகச்சீறி யுன்மனைவி மார்முதலா விளம்பு மாதர்
தந்தனமீ துறத்தழுவி லிறத்தியெனக் கொடுஞ்சாபஞ் சாற்றி வீந்தாள். ()

ஆதலினு லெனையணைதற் கடாதுனக்கென் றவள்கூற வரசன் மோகப்(போ
காதலினு லிடைந்து செம்பொற் கலத்தமுதம் பெற்றருந்தக் கடனி லான்
றுதகவுற் றில்லமிலாற் கருமகப்பே றில்லையுமை நுனித்து நோக்கிற்
சாதகருக் கிகபரத்திற் பலன்கிடையா தெனத்தேறித் தலமீக் கொண்டே.()

சாதகருக்கு-கொலைஞருக்கு.

ஒருமனமா யிருவினையின் றுவக்கறமுக் குறும்பெறிந்திட் டுயர்நால் வேதந்
தருபொருளா யைந்தவித்தைந் தழனுப்ப ணின்றுபெருந் தவங்க ளாற்றிக்
கருதருமா மறலிவலை கடந்துமுக்கா லமுமுணர்ந்து கணிக்க வல்ல
பொருவருமா முனிவரர்க ளனுமதிகொண் டரியதவம் புரியு மெல்லை. ()

வேறு.

கறைவிட முகுத்தல் போலக் காய்சின மிகுத்து வானிற்
பிறையெயி றிலங்கப் பேழ்வாய்ப் பேய்மக ளொருத்தி பற்றி
யிறைவனை வருத்த வீதிங் கென்னெனப் பன்னு தொன் னூன்
முறைதெரிந் தருளுந் தெய்வ முனிவரை வினவி னானே. (கக)

கணித்துமுக் காலந் தேருங் கடவுண்மா முனிவர் துத்திப்
பணித்தலைக் கிடந்த ஞாலம் பரித்தரு ளரசே முன்னாட்
குணித்தவா ளரக்க னுகிக் கோதில்வே தியனைக் கொன்று
பிணித்தவெம் பாவங் கண்டா யலகையாய்ப் பிணித்த தென்றார். (சo)

அப்பவர் தீர்ப்பா னெண்ணி யலைகடற் சேது முன்னாச்
செப்பருந் தீர்த்தம் யாவுஞ் சென்றுடன் மூழ்கி மூழ்கி
யொப்பரும் பிரமன் றன்னை யுந்தியிற் றந்த மாயன்
மைப்பணி சடையான் வைகும் பதிபல வணக்கஞ் செய்தான். (௪௧)

உந்துவெண் டிரைநீர் வேலி யுலகெலா முழந்து சூழ
வந்துமப் பிரம கத்தி மாறிடா திருத்த லாலே
யிந்துமண் டலம்போ யோங்கு மிஞ்சிசூழ் மிதிலை ஞாங்கர்க்
கந்துகொல் களிற்று வேந்தன் கவலையுற் றிருந்த காலை. (௪௨)

மாதவர் மருங்கு சூழ வளரிள மதியஞ் சூடி
நாதனிங் கிவனு மென்ன நானில மதிக்கத் தக்கோன்
பாதபங் கயங்க ளேவைப் பார்த்திவ னிருக்கும் பாங்கர்க்
கோதம னென்னு நாமக் குலமறை முனிவன் வந்தான். (௪௩)

அன்றிருந் தவனைப் போற்றி யடிதொழு தங்கை கூப்பி
நின்றிடும் வடிவேற் றானை நிருபனுக் காசி கூறி
நன்றிருந் தனையோ வென்ன நவின்றுநின் முகத்தின் சோதி
குன்றிய தியாது வந்த குறையெனக் கறைதி யென்றான். (௪௪)

திருந்துதி முற்றுங் கற்றோன் றிசைமுகற் குவமை சான்றோ
னருந்தகைக் காவி யன்ன வருண்முனி யரக்க னாகி
வருந்துதி யென்னச் சாபம் வழங்கலால் வந்த தென்னாப்
பெருந்துதி கூறிப் பின்னு நிகழ்ந்தவை பேச லுற்றான். (௪௫)

அரக்கனாய் வனத்தி லன்று ளந்தணற் கொன்ற பாவ
மிரக்கமி லலகை யாகி யிங்கெனைத் தொடர்த லாலே
பரக்கும்வெண் டிரைத்தீர்த் தங்கள் பற்பல படிந்து பொற்கோ
புரக்கவின் படைத்த கோயிற் புண்ணிய தலஞ்சே வித்தேன். (௪௬)

எண்ணருந் தருமஞ் செய்தே னீறின்மந் திரநவின்றேன்
விண்ணவர்க் கவிக ளல்கும் வேள்விகள் பலவுஞ் செய்தேன்
பண்ணரும் பாவ நீங்கப் பெற்றிலேன் படிவ வுன்றன்
கண்ணருள் பெற்றே னுய்யுங் காலமு முளதா மென்றே. (௪௭)

படிவ-முனியே.

அன்னமா முனிவன் றூய வடிமுடி சேர்த்தி நின்ற
மன்னவன் றன்னை நோக்கி வருந்தலை மதியஞ் சூடும்
பின்னலஞ் சடையாற் கன்பு பெருக்குநோன் புகட்குண் மேலா
முன்னரும் விரத மொன்றுண் டுணர்ந்திலை போலு மாணீ. (௪௮)

மாகமா மதியிற் றேய்ந்த மதியிற்பன் னான்காம் பக்கத்
தேகநா யகனைப் போற்றி யீரிரு சாமந் தோறுந்
தாகமாம் பசிக்கூண் டுஞ்ச றவிர்ந்துளத் தொருமை கூரன்
பாகமா லூரந் தன்னு ளருச்சிப் பனந்தை நீங்கும். (௪௯)

வரையிலக் காகத் தொட்ட வாளிக டவறு வோங்கித்
தரைமிசை யடித்த கைதான் றப்பிடா ததுபோ லீசன்

குரைகழற் பதும நோக்கிக் குறித்தநோன் பியற்றி நின்றாற்
புரையறப் பலிக்கு மென்றாப் புரவலற் குரைத்துப் பின்னும். (௫0)

நற்றல மதனி லிந்த நவையிலா விரத நோற்கிற்
சற்றல மிகுதி நன்மை தந்திடுஞ் சடுதி யென்னாக்
குற்றமின் முனிவன் கூறக் குறிக்குமத் தலமு மெற்கே
சொற்றரு ளைய வென்னக் கௌதமன் சொல்ல லுற்றான். (௫க)

வேறு.

சொன்ன தலங்களின் முன்னி வருந்திய தூயோய்நீ
யுன்ன வருங்கிரி மன்ன னளித்திடு முமைகூட
மின்னவி ரஞ்சடை முன்னவ னன்பொடு மேவுங்கோ
கன்ன மெனும்பதி யொன்றுள தங்கது சாறுயால். (௫உ)

அத்தல னிற்றகை முற்று முணர்த்திட வார்வல்லார்
முத்த நகைத்திரு வுக்கிறை திக்கு முகத்தோனற்
சித்த ரியக்கர் மயக்கறு நற்றவர் சேணுடர்
நித்த மியற்று தவத்தின் முயற்சியி னிற்பாரே. (௫௩)

ஆடு முனிக்குழு வாயிர கோடி யரன்சீரைப்
பாடு முனிக்கண மெண்ணில சித்தி படுத்தியோகிற்
கூடு முனித்திரள் பற்பல வுற்றிடு கோகன்னம்
வீடு பெறற்கினி யப்பதி யொப்புற வேறுண்டோ. (௫௪)

அத்துடை மாதவர் வானவர் மானவ ரானோர்மா
சித்துடை யார்வெரு வக்கட மிக்கிடு திக்கானை
முத்துடை வால மருப்பணி மார்பின் முரித்தோன்கம்
பத்துடை யானகன் முற்பக லர்ச்சனை பணவெண்ணி. (௫௫)

அத்து உடை-காவிவஸ்திரந்தரித்த. கம்-தலை. அகல்

ஓர்சிவ லிங்க முறும்படி வாணி லுயர்ந்தோங்கு
மேர்பெறு வெள்ளி விலங்கலி னற்றவ மேசெய்யக்
கார்பெறு கண்ட னரக்கர் குலத்திறை கைதன்னிற்
பேர்பெறு லிங்க மளித்தவ னோடிவை பேசுற்றான். (௫௬)

பார்தனில் வைக்கி லெடுக்க வொணாது பகர்ந்தேமுன்
னூர்தரு மூர்த்தி யொழிந்தனை கைக்கொடு னூர்மேவிச்
சீர்தரு லிங்க மிதைப்பிர திட்டை செயிற்பாரி
னேர்தரு முன்னை வெலற்குரி யார்பிற ரிலையென்றே. (௫எ)

பகர்ந்தேம் உன் என்றுபிரிக்க.

வித்தக னோதி விடுப்ப வரக்கனும் விடைகொண்டே
சித்த முவந்து நெறிக்கொடு பார்மிசை செல்போதிற்
புத்தமு தத்தினை யற்பொடு துய்த்திடு பொன்னாடர்
மத்தக வேழ முகத்த கணேசனை வந்தித்தே. (௫அ)

எண்டகு மீச னளித்த விலிங்க மிலங்கைக்கே
கொண்டகல் கின்றன னின்றெதிர் சென்றொரு கோள்செய்தே
தண்டரு தாண்மலர் நோவ நடந்திடை தடைசெய்ய
மண்டணி னீடிய மூடிக வாகன வருகென்றார். (௫௯)

உற்றிடு வானவர் சொற்றிட நான்மறை யோனாகி
மற்றிர டோளவ் வரக்கன் வரும்பெரு வழிதன்னி
னிற்றிட மற்றவ னுந்தனி வந்தவ னோருற்றான்
முற்றிநி லற்பச லத்தை விடுக்க முடுக்குற்றே. (௬0)

அச்சிறு வேதிய னங்கையி லிங்க மளித்தன்னோன்
மெய்ச்சிறு நீங்கிட மேவிப காலை விரைந்திங்ஙன்
முச்சொலி னின்னை விளிப்ப னதற்குமுன் முன்னாயே
லிச்சிவ லிங்க நிலத்தி லிருத்துவ னென்றானல். (௬௧)

அம்முறை யாக வரக்க னிசைந்தய லகல்போதின்
மும்முறை கூவின னெய்தில னையிரு முடியோனு
மெம்மிறை நீதியி தென்று கணத்தவ னெய்தாமுன்
மைம்முறை யாயொளிர் கண்டனை மண்டனில் வைத்திட்டான். (௬௨)

பின்பவ் வரக்கர் பிரானவ னூற்றழல் பெய்கண்ணான்
நன்புவி யிற்சிலை யோடிய தென்று நடுக்கெய்தித்
துன்பொடு பத்திரு தோள்வலி கொண்டு தொடர்ந்தோடி
வன்பொ டெடுத்திது மாபெல மென்றான் வலியில்லான். (௬௩)

சிலை-வேர்.

மன்னவ வாதலின் மாநில மாபெல லிங்கம்பே
ரென்ன விளம்பிய தின்னமு மீளவி லங்கைக்கோன்
பன்னக மேவுகை பற்றி யெடுக்கப் படிமீதி
னென்ன ரிலிங்க மெலிந்து நிமிர்ந்தது கைந்தங்கே. (௬௪)

ஆவி னெடுஞ்செவி போல நிமிர்ந்திடு மதனாலூர்
நாவி னெடும்பெயர் கோகன மென்றனர் நனிகூரு
மேவி னலந்தரு வாள்விழி யம்பிகை யிடமேவுந்
தேவி னருஞ்சிவ லோகமி தென்றறி திணிதோளாய். (௬௫)

எவில்-அம்புபோல்.

## வேறு.

மாவின்வடு நிகர்த்தவிழி மலைமகளை யிடங்கொண்ட
தேவனருள் சிவலிங்க மெடுக்கநைந்தோன் சினங்கொண்டே
காவனைய கைத்திரளாற் கனன்றரக்கன் மறைமதலைத்
தேவனது குடுமிமுடி புடைத்தனன்றன் சினமிகலால். (௬௬)

மறைமதலை-பிராமணப்பிள்ளை(யுருவான.)

புடைத்தவுட னுருத்தெழுந்து பொழிமதவா ரணமுகத்தோ
னடித்தலமு மணிமுடியு மகலிடமும் விசும்புமுறப்
படைத்தவுரு வெனநிமிர்ந்து பணைக்கரத்தா லிராவணனைப்
பிடித்துமணிக் கழங்கென்ன வெறிந்தெறிந்து பிடித்திடலும். (௬௭)

மறையோனென் றுனைநினைந்த மடமையினு லீதிழைத்தேன்
பிறையோங்கு மணிமகுடப் பெருங்களிறே பிழைசெய்தே
னிறையோனே பொறுப்பதுனக் கியல்பென்றென் றேத்துதலும்
பொறையோடு முமைபுதல்வன் புவியிலரக் கனைவிடுத்தான். (சு அ)

நிருதர்குலத் திகல்வேந்தே நினதுபிழை யான்பொறுத்தற்
கிருபதுசெங் கரத்தாலு மெழின்மலரோன் முன்கவித்த
வொருபதுமா முடித்தலையு முறப்புடைத்தி யெனலோடுங்
குருதிநிறங் கொளப்புடைத்துக் குதித்தாடி யுவப்பித்தான். (சுகூ)

அன்னதுகண் டுவந்தருளி யைங்கரத்தோ னின்றமுத
லென்னருணன் னலம்வேண்டி லின்றுனைப்போ லிருகரத்தாற்
சென்னியுறப் புடைத்தவர்பாற் சிந்தைமகி ழுவமென்று
மின்னின்மறைந் தனனிருதன் வேலையிலங் கையிற்புகுந்தான். (எ0)

தென்னிலங்கை யிராவணன்பாற் சிவனுதவத் திறலரக்கன்
பின்னிலங்கு மொருமருப்புப் பெருந்தகைதன் கைக்கொடுப்ப
வன்னலிங்க மைங்கரத்தோ னங்கையினு னட்டியதா
லிந்நிலத்திற் சிவலோக மெனவிளங்கி யிருந்துளதால். (எக)

### வேறு.

இத்தகைய கோகன்னந் தனியென்ன லொருபுலைச்சி யிருகண் ணில்லாள்
சுத்தவமு தெனவெளுத்த நரைதிரைநோய் மூப்புடையாள் சுருதி போற்று
மத்தனிர வெனவுணரா ளங்கடைந்து பசிமிகுத்திட் டகடு காயச்
சித்தமதி லிரக்கமுளோர் சோறிடுமி னெனக்கெனவோர் தெருவி லுற்றாள்.

அமுதென-பால்போல.

அத்தெருவின் றலைவருமோர் களியனிழி குலததவட னங்கை மீதின் (பித்
முத்தளக்கூ விளமுணவென் றிடுதலுமேற் றெறிந்தனளான் முன்னுட் டா
துத்தமர்பூ சித்தபுரா தனலிங்க முடிமீதி னுளத்தன் போடும்
பத்திரிடும் பச்சிலைபோ லானதவள் பசிமிகக்கண் படைசெய் யாளாய். (எ௩)

இருளகல விடியுமட்டும் வருந்தியிருந் திரவியுதித் தெழுந்த பின்னத்
தெருவினிடை யிரந்திடவோர் புலைச்சியெதிர் வழிகாட்டச் செல்லுங் காலை
மருவியநோய் பசிமூப்பு வருத்திடவெஞ் சுடுமணற்கீழ் மயங்கி வீழ்ந்தங்
கொருவியுயிர் பிரிபொழுதிற் பரமனுயர் கணங்கடமை யுற்று நோக்கி.(எச)

சீர்தருகோ கன்னத்திற் சிவநிசியி லுண்டிதுயி நீர்த்து வில்வத் (பொற்
தேர்தருநற் பைந்தழைகொண் டெம்மையருச் சித்ததனு விமைக்குஞ் செம்
றேர்தனிலப் புலைமகளை யேற்றியிங்கு வருதிரெனச் செப்ப வன்னோர்
பார்தனிலுற் றனைவரும்யாம் பார்த்திருக்க வங்கவளைப் பணிந்து போற்றி.()

செம்பொனெடுங் கொடிஞ்சிமணித் தேர்மீதி லிருத்திமிகு சிறப்பி னோடு
மும்பர்மட மகளிர்வெண்சா மரையிரட்டப் பைந்தருவி னுலவை யீன்ற
வம்பவிழ்பூ மழைபொழிய வளங்கெழுதுந் துபிமுழங்க மழமா னேந்து
மெம்பரம னினிதுறையுங் களதபுத கிரியின்மிசை யேகி னாரே. (எசு)

களதபுதம்-வெள்ளி.

ஆகலின்மிச் திரசகனே நீயுமந்தக் கோகன்னத் தடைந்து போற்றித்
தீதகலுஞ் சிவநிசிநோற் றிடிலுனது வினையனைத்துந் தீரு மென்று
கோதலும் பெருந்தவத்துக் கோதமனங் கவற்குவிடை கொடுத்துப் பின்ன
ரேதமின்மா தவர்சூழ்ந்து வரமிதிலை நகர்நோக்கி யேகி னானால். (எஎ)

புண்ணீரின் கடிகமழப பொருகளத்தி லொன்னலர்தம் புயந்தோய் மி
ன்னார், கண்ணீர்மை கலந்தொழுகக கலுழ்ந்தணிபொற கலன்வாங்கக் கதிர்
வேல் வாங்கி. மண்ணீரமை பெறப்புரந்த மன்னவனுந் தாகமுற்று வருந்தி
னோர்க, ளுண்ணீரபெற் றதுவெனத்துன் பொழிதுபர்கோ கன்னமுற்று னு
வப்பி னேடும். புண்ணீர்-இரத்தம். (எஅ)

பூகநெடும் பொழில்புடைசூ ழப்பதியிற புகல்கோடிப் புனலின் மூழ்கி
நாகாதினந் தொழுதெழுமா பலலிங்க நாயகனை நண்பிற் போறறி
மாகமதிச் சிவநிசியின் மறைமுதலா சமத்துவிதி வழுவா தாற்றிச் (டானே.
சோகமிகத் தரும்பழைய வினைத்தொடர்பி னழுக்கனைத்துந் துடைத்திட்
பூகம்-கமுகு.

வளமைதரு கோகனத்தின் மாகமதிச் சிவநிசியை மகிழ்ந்து நோற்றுப்
பழிவிளைக்கும் பிரமகத்தி பற்றறவே தீர்ந்தபினர்ப் பரமன் செய்ய
கழலடைந்து பேரின்பங் கலந்திருந்தான் சிவநிசியைக் கருத்தி லுற்ற
வுளமகிழவா னோறறவர்கள் பேரின்ப வீடடைவ ருண்மை யென்றான்.(அ0)

என்றுயர்கை மிசவனத்தி லிருந்தவிருந் தவர்மகிழ்ந்தாங் கிருகை கூப்பித்
துன்றசடை முடிதுளக்கிக் கேட்டுவபப விரிதெடுத்துச் சொல்லி னானற்
கன்றுகொடுஞ் சினமயக்கங் காமமெனு முக்குறும்பைக் கடிந்து நாளும்
வென்றிபெறுந் தவஞான நிலையுணர்ந்து கவுங்கமின்றி விளங்குஞ் சூதன்.()

கன்மாடபாதச்சருக்க முற்றிற்று.

ஆக விருத்தம் ருகூo.

## விபரிசச்சருக்கம்.

எண்டரு மறையுண ரிருடி காடிரி
புண்டர நுதலர னிரவிற் பூசனை
கண்டவன் கதையினைக் கழறக் கேண்மினென்
றெண்டவச் சூதனு முரைப்ப தாயினான். (க)

பாரினிற் புராதலப் பதிபு ரப்பவன்
போரினிற் றெவ்வர்மெய்ப் புலவு காரியு
மோரியு மருந்தவே லுறைக ழித்திடும்
வீரியன் விபரிச னென்னும் வேந்தனே. (உ)
காரி-காகம். ஓரி-நரி.

தன்றடஞ் சிலைகொடு தானுஞ் சேனையுங்
குன்றருங் கானிடைக் குறுகி நாடொறும்
வன்றலைக் கேழன்மான் மரைபுல் வாய்களின்
மென்றசை யருந்திட வேட்ட மாடுவான். (௩)

கேழல்-பன்றி.

புலந்தரு பூசுரர் புலைஞர் மற்றுள
குலந்தனி லுதித்தெழில் குலவு மாதரை
நிலந்தனி லவாவுட னேடி நித்தமுங்
கலந்துளந் தருக்கொடு களிக்கு நீர்மையான். (௪)

வேறு.

மதிவளர் பக்கங் கலைகுறை பக்க மதிதொறு மருவுபன் னொன்காந்
திதிகளிற் றுயிலூண் டுறந்துதன் னடியார் சிந்தனைப் படிமுடி வில்லாக்
கதிதரும் பரனை யானினைந் தாட்டிக் கடிமலர் கூவிளஞ் சாத்தி
விதிமுறை வழுவா துள்ளநெக் குருகி விருப்புட னருச்சனை புரிவான். (௫)

மற்றவன் மனைவி யாகிய குமுத வதியவன் மலரடி வணங்கிக்
கற்றடந் திணிதோட் புரவல விரவுங் கல்வியிற் றிறலினே ரில்லாய்
பொற்றரு விழது விட்டெனக் கிடந்த புரிசடைப் புனிதனு ரிரவி
லுற்றருந் திடுமூண் டுயிலொழிந் துளத்தி னுவப்புடன் பூசனை புரிவாய். (௬)

கூனருஞ் சிலைக்கை வேட்டுவ ரென்னக் குலவிலங் கனைத்தையுங் கொலைசெய், தூனருந் திடுத லொழிந்திலை நிலத்தி லுயர்குலத் திழிகுலத் துதித்த, தேனருங் கனிபா னிகர்த்தசொற் கணிகைச் சேயிழை யார்முலைப் போகந், தானருந் திடுத றவிர்ந்திலை யிந்தத் தன்மையென் சாற்றுதி யென்றாள்.

என்றவன் மொழிந்த மொழிசெவிப் படலு மிளநகை கோட்டிவே லிறைவன், முன்றவப் பயனு மிறப்பெதிர் நிகழ்வா மூன்றுகா லங்களு முணர்வேன், நன்றளிக் குலம்பாட் டயர்மலர்க் கோதைச் சுரிகுழால் கேட்டியா ன் முன்னங், குன்றெனு மிஞ்சிப் பம்பைமா நகரிற் குரைமுக ஞமலியா வுதித்தேன். ஞமலி-நாய். (௮)

பாலவென் றமுதை யடுமொழிக் கவுரி பங்கில்வாழ் பம்பைநா யகன்ற
னாலயங் குறுகிப் பலிக்கிடு மடிசி லருந்துவான் வருந்தியங் கடையுங்
காலையிற் கோயிற் கைவினை யாளர் கடிதெனைக் கடிந்திடக் கருதி(டர்ந்தார்.
வேலையில் விடம்போற் கதைகலை குனித்த வில்லொடுங் கல்லொடுந் தொ

ஓடினேன் வெருவி யாலயம் வலமா யுயிர்பிழைத் துய்குவா னெறிக்
கேடினேன் காணேன் பலிசொரி பீடத் தின்னயற் சென்றுழிச் சுருதி
பாடிநான் மறையோர் பழிச்சிட நெய்த்தீ பச்சுடர்த் தட்டெடுத் தேந்திப்
பீடுறு பணிமா றினர்தரி சித்தேன் பிறைமுடிப் பிஞ்ஞகன் றன்னை. (௧௦)

அக்கணத் தொருவன் சரங்கொட வீங்கே னன்றிராச் சிவநிசி யதனின்
மிக்கவா லயத்தை வலமதாய் வந்து விமலனைத் தரிசனை புரிந்து
நக்கனார் திருமுன் னுவிநீத் திட்ட நன்மையாற் காலமூன் றுணர்ந்து
தக்கவாழ் வுடனு னிலம்புரந் தருளுந் தலைவனுத் தரைதனி லுதித்தேன்.()

இந்தநற் பலத்தைத் தந்தது பரம னிரவெனக் கருதியா னெதிர்ந்து
வந்தநற் றினங்க டொறுங்கலை நிறைந்து வருபிறை குறைபிறை யதனிற்
றந்தபன் னுன்காம் பக்கமென் றுரைக்குஞ் சதுர்த்தசி களிற்றவ ருமை
லந்திவா னதிச்செஞ் சடிலவா னவனை பகத்தில்லைத் தருச்சனை புரிவேன்.

புரிந்தபூ சனையாற் பிரிந்துவெம் பாவம் போகுமோ வெனப்புகன்றனை யேல், விரிந்தபைப் பணிப்பூ ணணிந்தருண் முக்கண் விமலனை வழிபடி லின்முன், சொரிந்தவெம் பனிபோற் கொடுஞ்சிகைத் தழன்முன் ருெக்குறக் குவிந்தவிந் தனம்போற், கரிந்துநீ ருகும் பரமனை நீயும் வழிபடக் கருதுகா ரிகையே. (கங)

எனவெடுத் திறைவ னியம்பலுங் கதிர்கான் றெழின்மணிக் கலன்கிடந் திமைக்குங், கனதனக் குமுத வதியெனு மணங்கு கைதொழு தெனது முற் பவமு, மனமுறத் தெளிந்து சொல்லுநீ யெனலும் வளந்தரு மல்லிகார்ச் சுனத்திற், சினகரத் திருக்கு மென்சிறைப் புறவாச் சென்றுதித் திருந்தனை முன்னுள். (கச)

இறந்தமுற் பவத்திற் செந்நிறத் தசையொன் றெடுத்துவாய்க் கவ்விநீ வரலுஞ், சிறந்தவெங் கழுகொன் றுனைத்தொடர்ந் திடவச் சிவாலயந் தனை வலஞ் சூழ்ந்து, பறந்தனை வந்து விடைவரை கொடிக்கம் பத்திடைப் பயந் தொளித் திருப்ப, மறந்தரு கங்கங் கொத்திவா யலகால் வதைத்திட வாங்குயிர் மடிந்தாய். (கரு)

சொல்லுமக் கங்கம் புறவதா நின்னைத் தொடர்ந்துகொன் றிடுஞ்செயல் சொல்லில்
வல்லினில் விழைவி னீகொடு வந்த வசைபடு தசையினை வவ்விச்
செல்லுவ னென்று வந்துனை வலிதிற் செகுத்துநின் வாய்ப்படுந் தசையைக்
கல்லெறி விரைவி னப்புறங் கொண்டு போனதக் கடுஞ்சிறைக் கங்கம். (கசு)

கங்கம்-கழுகு.

தீவிழி யெருவை தொடர்ந்திட வந்தச் சிவாலயந் தனைவலம் வரலா னுற்
லாய்பிழிக் கொன்றைத் தொடைபுனை சடிலத் தண்ணன்முன் னுவிநீத் ததன்
பாய்திரை யுடுத்த நெடுநிலப் பரப்புப் பரித்திடும் பார்த்திவன் மகளாத்
தூயசெங் கமலத் திருமக ளென்னத் தோன்றியென் றனைவியு மானாய். ()

எருவை-கழுகு. பிழி-தேன்.

வேறு.

என்றிவை கூறக் கேட்ட வேந்திழை யெழுந்து போற்றி
நன்றிதென் றிறும்பூ தெய்தி நலனுடை நீயு நானு
மொன்றிமுன் னெடுத்த காயத் துற்பவ முரைத்தா யாங்கள்
சென்றினிப் பிறக்குந் தன்மை செப்புதி தெரிய வென்றாள். (சஅ)

மென்னடை யன்ன மன்னாய் வேறினி யிரண்டாஞ் சன்மம்
பன்னக வேந்த னேந்தும் பார்மிசைச் சிந்து நாட்டின்
மன்னவ னுவன் யானீ சஞ்சயன் மகளாத் தோன்றிக்
கன்னலந் தருமென் றோளிற் கலந்துறக் களித்து வாழ்வாய். (கக)

கல் நலந்தரும் என்தோளில் என்றுபிரிக்க.

படியிலோர் மூன்றாஞ் சன்மம் பகர்சவு ராட்ட நாட்டில்
வடியயிற் சுடர்வே லேந்து மன்னவ னுவன் யானீ

கடிமதிற் கலிங்க நாட்டிற் கலிங்கர்கோன் மகளாத் தோன்றி
யிடிமுர சதிரும் வாயி லென்மனைக் கிழத்தி யானை. (உ0)

மருவொரு நான்காஞ் சன்மம் வளங்கொள்காக் தார நாட்டி
திருவள ராச ஞய்க்கோல் செலுத்துவன் யானீ சீறிப்
பொருதரி யலரை வெல்லு மகதர்கோன் புதல்வி யாகிச்
சுருதிவண் டிமிரும் பைந்தார் சூட்டியென் றுணைவி யானை. (உக)

சிறந்ததோ ரைந்தாந் தோற்றந் திகழிய லவந்தி நாட்டிற்
பிறந்தர சளிப்பன் யானீ பேருல கனைத்தும் போற்று
மறந்தரு வடிவேற் றனைத் தாருணன் மகளா வந்தென்
னறந்தரு மனைவி யாகி யிருப்பையங் களவில் காலம். (உஉ)

முருந்துறழ் முறுவன் மானே மூவிரண் டாம்பி றப்பிற்
பெருந்தமி ழுருத்த நாட்டிற் பேரர சளிப்பன் யானீ
யிருந்தவப் பலனுல் விஞ்சும் யாதிதன் மகளாத் தோன்றி
யருந்தவத் திருமா தொத்தெ னம்புய மதனிற் சேர்வை. (உ௩)

கழிதரு மேழாஞ் சன்மங் கைதவன் குலத்திற் றேன்றி
யெழில்பெறு பதும வன்ம னெனும்பெயர் பெற்று வாசம்
பொழிமலர்ப் பைந்தார் வேம்பின் பூந்தொடை புனைந்து நாளும்
பழிபவம் பயிலா வண்ணம் பாண்டிநா டளிப்பன் யானே. (உச)
கைதவன்-பாண்டியன்.

நீயுமப் பவத்திற் செல்வ நிறைந்திடும் விந்த நாட்டிற்
காயும்வெங் கதிர்வேன் மன்னன் கண்ணெனக் கதிர்கொண் முத்த
மேயும்வேய் மருட்டு மென்றேள் வசுமதி யென்னு நாமந்
தோயுமோ ரணங்கா வந்து தோன்றிநீ வளர்வா யுன்னை. (உரு)

மங்கல முரச மார்ப்ப மன்றல்செய் தளிப்பா னுன்னிச்
செங்கதிர் மணிகள் வேய்ந்த செம்பொன்மண் டபஞ்சோ டித்துத்
துங்கவேற் கரனுன் றுதை தூதரி லோலை போக்க
வங்கண்வந் தெய்தும் வைவே லரசரை யறையக் கேட்டி. (உசு)

கொண்டல்கண் படுக்குஞ் சோலை குலவயோத் தியர்தங் கோமான்
வண்டலம் வருந்தண் பைந்தார் வளையுங்காந் தார மன்ன
னெண்டலத் தரசர் போற்று மிருபதன் றுருப தேயன்
விண்டலத் தமரர் போற்றும் விறலுடை யவந்தி வேந்தன். (உஎ)

பல்லவ தேய மாளும் பார்த்திவன் பன்னுந் தொன்னூல்
வல்லவன் யானைத் தானை வாரண வாசி மன்னன்
வில்லவ னாரின் மாலை மிலைந்திடு நேரி வெற்பன்
நல்லொளி முடிசேர் மன்னர் நன்மணச் சாலை நண்ண. (உஅ)
வாரணவாசி-காசி. ஆரின்மாலை-ஆத்திமாலை. நேரிவெற்பன்-சோழன்.

யானுடங் கெய்த நீயன் றிசையளி முரன்று பாடுந்
தேனுமிழ் மலர்ப்பைந் தாரென் றிண்டிறற் றேளிற் சூட்டப்
பானுவின் குலத்தோர் மூன்னும் பார்த்திவ ரநேக ரீண்டி
யூனுமிழ் படைக ளேந்தி யுருத்தென்னே டியுத்தஞ் செய்வார். (உகூ)

அங்கவர் தம்மை யெல்லா மாடல்வெங் கரிக்கூட் டத்தோர்
சிங்கம தென்ன வென்று சேயிழை யுனையான் கொண்டு
சங்கமா முரசு பம்பை தழங்கிட வானில் வாழும்
புங்கவர் பரவுங் கூடற் புரிதனிற் புகுந்த பின்னர். (௯௦)

அளப்பருங் கால மன்போ டாயிழை நீயு நானு
முளப்படும் போகந் துய்த்திட் டிலகொரு குடைக்கீ ழாண்டு
வளப்படு மகங்க ளாற்றி வளர்நிதி மறையோர்க் கீந்து
களப்படுங் கறையி னான்றன் கனைகழல் பூசை செய்து. (௯௧)

கறை-கருமை நஞ்சு.

வள்ளைவார் குழைதோய் கண்ணாய் மழகளி றென்ன வாங்கோர்
பிள்ளையாம் பெறவ மன்னோன் பெருங்கலை யுணர்ந்து தும்பி
கள்ளையார் கடுக்கை மாலைக் கடவுளுக் கடிமை பூண்டு
வெள்ளைவான் மதியம் போல வளர்ந்துபேர் விளங்கு நாளில். (௯௨)

அணிகெழு செழும்பொற் சோதி யவிர்மணி முடியுஞ் சூட்டி
மணிமுடி யநந்த னேந்து மாநில மவன்பா லல்கித்
தணிவருஞ் சனன மென்னுந் தழலினுங் கொடிய வெய்ய
பிணிகெட வேட்கை யோடும் பெருந்தவ மியற்ற வெண்ணி. (௯௩)

தென்றலங் கன்று சந்தச் சினைமலர் வாசம் வீசுங்
குன்றமர்ந் தினிது வைகுங் குறுமுனி குறுக நம்பான்
மன்றலங் கோதை நீயும் யானுமாய் மருட்சி நீங்கி
யன்றவன் றன்னை நோக்கி யருந்தவ முழப்ப நின்றே (௯௪)

அரியநற் றவஞ்செய் காலை யகத்திய னெமக்கு ஞானத்
துரியநற் சிவயோ கத்தை யுவந்துப தேசஞ் செய்வா
னெரிசுடர்ப் பிழம்பா மேனி யெந்தையைச் சிந்தை தன்னிற்
றெரியுமவ் வியோக நின்று சித்தியா முத்தி சேர்வேம். (௯௫)

நவமிகு பம்பை நாட்டி னாயுரு வெடுத்து முன்னாட்
சிவநிசி தன்னி லீசன் றெரிசனங் கிடைத்த பேற்றாற்
பவமகன் றுய்ய நன்மை பலித்தது பாவை நீயுந்
தவமதிவ் விரதந் தானே தவறிடா திழைத்தி யென்றான். (௯௬)

ஒருவருந் திங்க டோறு முபயபக் கத்தி லுற்று
வருசதுர்த் தசிக டோறு மழுவலான் றன்னை வாசந்
தருமலர் கொடுபூ சித்துத் தணந்தெழு பிறப்பு நீங்கி
யிருவரும் பொருவி லாப்பே ரின்பவீ டெய்தி னாரால். (௯௭)

சிவன்றிருக் கோயின் மேவிச் சிவநிசி விரதந் தன்னிற்
சிவன்றனைத் தெரிசித் தோருஞ் சேருவர் முத்தி யென்றே
சிவன்றனை யுணர்ந்து நாளுஞ் சிந்தைசெய் முனிவர் கேட்பச்
சிவன்றனக் கடிமை பூண்ட சூதன்முன் செப்பி னானே. (௯௮)

விபரிசச்சருக்கமுற்றிற்று.

ஆகவிருத்தம் ௬௨௮.

# குபேரச்சருக்கம்.

ஓதமுற் றிடுபொற் கடலடுக் களைக்க ணமைத்தவா லோதன மருந்து
நாதனற் சங்கக் குழையணி காத னகைத்துமுப் புரமெரித் திடுநாண்
மாதனு வெனப்பொற் கிரிகுழைத் தேறும் வசுந்தரைத் தேர்நனி கடவுஞ்
சூதனுக் கிணையாஞ் சூதன்மற் றின்னுஞ் சிவநிசிக் கதைதொடுத் துரைப்பான்

குழைத்து-வளைத்து. வசுந்தரை-பூமி. சூதன்-சாரதி (பிரமா.)

முத்தவெண் மணிதோ டரித்தநூல் வடத்தின் முறைமுறை குறைவறக் கோ
வைத்தெனச் சிதறி விரிந்தபூம் பாளை மரகதக் கமுகினிற் குலையைத் (த்து
துய்த்தலை கடுவன் பாய்ந்துறச் சிந்தச் சுரிமுகக் கூன்பிடர்ச் சங்கங்
கைத்தலத் தெடுத்துக் கம்பள ரெறிந்து கடிந்திடுங் காம்பிலி நாடு. (௨)

தோடரித்த-தோள் தரித்த. கம்பளர்-உழவர்.

கயமலர் துவைத்துக் கரைதவழ் பணிலங் கான்றிடத் தோன்றுநித் திலத்தை, முயன்மதிப் பிள்ளை யெனப்பகற் காவி மூகைமுறுக் குடைந்துதே னொழுக்கும், வயன்மருங் கெழுந்த கரும்பினைக் கவரி முறித்திடத் தெறித்தவெண் மணிமுத், தயன்முதிர்ந் திடுசூற் றவளைமேற் படரொரந் தாங்கது பொறுத்திடா தரற்றும். கவரி-கவரிமான். (௩)

இலைதலை விரிந்த நெட்டுடற் பூக மேற்றவொண் டாற்றிளங் கதலி
யலைதலைத் தவிராத் தூங்குதீங் கனிசே ராம்பிர மனற்பொறி சிதறு
முலைமுகத் துருக்கிப் பழுத்தபொற் சுளைக ளூற்றமுட் குடப்பழப் பனசந்
தலைவளை குலைச்செஞ் சாலிநீள் வயலின் றலைத்தலை தழைத்துநின் றோங்கும்

ஒள் தாறு என்றுபிரிக்க. ஆம்பிரம்-மாமரம். பனசம்-பலா.

இரும்புகாய்ந் தொத்த செக்கர்வா னெழுந்த விளமதிக் குழவியை யளிகள்
விரும்புபூ மலர்த்தா தினைச்சிறு நுதலின் வெண்டிரு நீறெனச் சாத்தி(த்துச்
யரும்பெனுங் கலசத் துறுநறு நெய்வார்த் தடர்சினைத் தொட்டில்வைத் தசை
சுரும்புதா லிசைப்ப மென்றளிர்ச் சாலை துயிற்றியே வளர்த்திடுஞ் சோலை.

இனையன வளங்கூர்ந் திடுநெடு நாட்டி லிருங்கலைத் துறையெலா முணர்ந்
வனைதுழா யலங்கற் கண்ணனு மறியா மலரடி வந்தனை புரிந்து (தோன்
நினைவருங் காம முதலமுக் குறும்பி னெடும்பகை கடிந்துநீ ணிலத்திற்
றனைநிக ரான சுத்தநல் வேள்வி தத்தனென் றுளனொரு மறையோன். (௬)

வேள்விதத்தன்-யச்ஞதத்தன்.

அன்னமா மறையோ னைம்புலப் பகைசெற் றுற்றிய வருந்தவப் பேற்று
ற், கன்னல்வே ளனவோர் நன்மகப் பெற்றான் கருதருங் குணநிதி யவன்
பேர், முன்னமுந் நூலின் வினைவிதி முறையின் முடித்தபின் முதுக்குறை
வுடையோ, னுன்னருஞ் சுருதி முதற்கலை பயிற்ற வோதினா னுளத்திலுற்
றுணர்ந்தான். முதுக்குறைவு-பேரறிவு. (௭)

தூமமார்ந் திருண்டு சுருண்டுநீண் டிடுமைச் சுரிகுழற் றோகையர் மருண்டு
காமனு மென்னக் காமுறு பருவ முற்றபின் கற்றைவெண் கதிர்கால்

சோமனுண் டளப்பான் முதனவக் கிரகஞ் சுகம்பெறு முகூர்த்தநன் னாளோ
வாமமேகலைப்பொற் குலக்கொடி தன்னை மறைப்படி வதுவைசெய்திட்டான்

சோமன்-சந்திரன். ஆண்டளப்பான்-வியாழன்-

## வேறு.

இன்பமுற் றன்னை தந்தை யில்வயி னிருக்கு மந்நாண்
மன்பதை மதிக்குஞ் சீர்த்தி வளர்குண நிதியா மைந்தன்
புன்புல மீதூர்ந் தூழின் பொறித்திடு விதியின் கொட்பாற்
றுன்பமும் பகையு நல்குஞ் சூதின்மேன் மனம்வைத் தானே. (௯)

புன்புலம் மீதூர்ந்து-தீயவுணர்வுமிகுந்து.

அற்புள னாய தந்தை யறிவுறு வண்ணங் கல்விச்
சொற்பயி லாதா ரோடு துன்னிவெங் களகந் தன்னி
னற்பக லிரவெப் போது நன்மதி மருட்சி கூர்ந்து
பொற்கலன் கலைபொற் காசு பொருதுநா டோறுந் தோற்பன். (௧௦)

களகம்-சூதாடுமிடம்.

தனையன்யாண் டுற்றா னென்று தாதைகேட் டிடும்போ தெல்லா
மனைமிக வெருவி யோதற் ககன்றன னென்று தீய
வினையம தான சூது மறைத்தனள் விளம்ப முந்நூல்
வனைதரு மார்பன் சற்று முணர்ந்திலன் வாழு நாளில். (௧௧)

ஆய்மகன் றன்னை வாவென் றழைத்துநீ யிழைக்கு மிந்தத்
தீயசூ துந்தை தேரி னுனையுமிங் கெனையுஞ் சீறிக்
காய்வனென் றுள்ளத் தஞ்சிக் கவறுக டவறு செய்யுந்
தாயநீ யாடுஞ் சூது தனையொழித் துரைத்தேன் முற்றும். (௧௨)

உந்தைதன் னொழுக்க நீதி யுணர்ந்திலை யந்த ணாளர்
மைந்தர்க ணடக்கை கண்டு மதிக்கிலை யென்று மாழ்கிக்
கந்தமைக் குவளை வாட்கண் கலுழ்ந்தவ ளுரைக்கு மாற்றஞ்
சிந்தையிற் கொள்ளான் வஞ்சக் கணிகையர் திறத்திற் சேர்வான். (௧௩)

வாட்டடங் கருங்கட் சூளை மகளிர்மேன் மனம்வைப் போரைக்
கோட்டரு கள்ளு நாளுங் குடிப்பவர் தம்மைக் கூடி
யீட்டரும் பொருள வாவுற றிருங்கவ றாடு வோரை
வேட்டமேன் மனம்வைப் போரை யாவரே விலக்க வல்லார். (௧௪)

சூளைமகளிர்-பரத்தைமாதர்.

இனையநீர் மையினா னென்று மிசைந்துளா னில்லி னோர்நா
ளனைதுயி லமைய நோக்கி யத்தன்முன் னவளபா னல்கும்
புனைமணி யாழி தன்னைப் பொருக்கெனத் திருடிப் போகி
வினையவெங் கவற்றி னாடித் தோற்றனன் வேறொன் றில்லான். (௧௫)

அந்தமோ திரத்தைக் கையி லணிந்துளா னொருவன் றன்னைத்
தந்தையாம் வேள்வி தத்தன் றனித்தொரு மறுகிற் கண்டு
சிந்தையிற் கவலை கூர்ந்து தெளிந்துபின் னறிவ னென்றாங்
கிந்தமா மணிப்பொன் னாழி யாருனக் கீந்த தென்றான். (௧௬)

அரவின்மேற் கிடந்த வையத் தமரர்கள் பதியே யானுங்
கரவினிற் கொண்ட தன்றன் காதல்கூர் மைந்தன் சூது
பொரவிருப் புடையோ னேற்றென் புட்டகம் வென்றா னின்றிவ்
விரன்மணி யாழி தோற்றான் மேவுவ னுனை யின்னும். (௧௭)

வையத்து அமரர்கள் பதியே-பூசுரசிரேட்டரே· புட்டகம்-வஸ்திரம்.

ஓதுநூற் கலைவல் லாய்நின் னொருமகன் விலையி லாமென்
போதுபோற் கோசி கஞ்செம் பொன்புனை கலன்கள் யாவுஞ்
சூதுபோர் பொருது நாளுந் தொழிலிது வாகத் தோற்பா
னீதுநீ யுணராய் போலு மென்றவ னெடுத்துக் கூற. (௧௮)

கோசிகம்-வஸ்திரம்.

சன்னபா கத்திற் காய்ந்த கதிர்நுனிச் சலாகை யிட்ட
தென்னவென் றுருகி யிற்பா லெய்தியில் லவளை நோக்கி
யுன்னதா ருயிரொப் பான புதல்வனெவ் வுழையி லுற்றா
னென்னமற் றவனீ ராட நீர்த்துறை புகுந்தா னென்றாள். (௧௯)

என்னலு மென்ன னுன்பா லெண்ணெயாட் டயர்போ தீந்த
வன்னநன் மணிப்பொன் னாழி தருகென மறையோன் கேட்பக்
கன்னலிற் கனிந்த மூரல் பகற்கடன் கழித்துத் துய்த்த
பின்னர்யான் றருவ லென்று பெட்புறப் பேச லோடும். (௨0)

எண்ணெய் ஆட்டு அயர்போது-எண்ணெயிட்டுமுழுகும்போது.

நெறியில்பொய் புகன்று கற்பி னீரல செய்தாண் மைந்த
னறிவில னாகி வெஞ்சூ தாடியே படிற னானான்
குறியுடைப் பெரியோர் நூலிற் கூறிய நீதி நோக்கிற்
பொறியிலா விவவரை வீட்டுப்போவதே கடனென் றெண்ணி. (௨௧)

பற்றொரு சற்று மின்றிப் பாசிழைப் பவளச் செவ்வாய்ப்
பொற்றொடி தனையும் பெற்ற புத்திரன் றனையு நீத்தன்
றுற்றொரு பதியி லெய்தி யுயர்குண வேள்வி தத்தன்
மற்றொரு மடந்தை தன்னை மணவினை முடித்து வாழ்ந்தான். (௨௨)

இந்தமா நிலத்தி லிந்நாள் யான்புரி தவறு கண்டு
தந்தையிங் கன்னை யோடென் றன்னையுந் தணந்தா னென்று
சிந்தையிற் கவலை கூர்ந்து செய்வதொன் றறியான் மைந்த
னந்தமி றுன்ப வேலை யாழ்ந்தனன் கரைகா ணானாய். (௨௩)

கற்றிலம் பொருள்க ளீட்டுங் கல்விக ளொழுக்க மேன்மை
பெற்றில மஞ்ச லென்பார் பிறரெவ ரொருவர் பாலும்
பற்றில மற்று முள்ள பாசனத் தோர்க ணட்புஞ்
சற்றில மென்று மாழ்கிச் சலிப்புட னிருக்கு நாளில். (௨௪)

அரனிர வதனி லீச னாலயந் தன்னி லோர்விப்
பிரனுயர் பூசை செய்யச் செல்லுவான் பின்ன ரெய்திக்
கரவினி லமலற் கேற்று மமுதினைக் கவர்ந்து மீள்வா
னிரவினி லற்ற நோக்கி யிருந்தனன் றுயிலி லாமல். (௨௫)

எரிபெரும் பசியி னோடுங் கியாமமோர் நான்கும் பூசை
புரிதர நோக்கி வைகி வைகறைப் போது தன்னி
லரியநல் விரத மாற்றி யமலனை யருச்சித் தேத்தித்
துரிசறு மறையோன் கண்க ளேங்கியே துயிலக் கண்டான். (௨௬)

ஆண்டவ னெழுந்து போகி யமுதினை யெடுப்பக் கண்ணிற்
காண்டல்செய் யாது மங்குங் கனைசுடர் விளக்கைக் கையாற்
றூண்டல்செய் தீசன் முன்னர்ச் சோற்றினைக் கவர்ந்து கொண்டு
மீண்டொரு மறையோன் காலில் விரைந்தனன் மிதிக்க லுற்றான். (௨௭)

மிதித்தவப் பொழுதி லந்த வேதியன் விழித்து நோக்கிக்
கொதித்தனன் கள்வ னென்றே கூக்குர லெழுப்ப லோடுங்
கதித்தவெந் திறலி னோரக் கடிநகர் காப்போர் கேட்டங்
கதிர்த்தனர் வந்து பற்றி யவன்றலை யறுத்திட் டாரால். (௨௮)

வேறு.

அவ்வேலையி லிகலந்தக னடல்கொண்டிடு தூதர்
கைவேலயி னவியஞ்சிலை கணைவெங்கதை கொண்டே
மைவேலையில் விடமென்றிட வந்தங்கவ னிருதோ
ளைவேதர விசித்தீர்த்தவர் நடைகொண்டது கண்டே. (௨௯)

நவியம்-கோடாலி. தோள் ஐவேதர என்றுபிரிக்க.

கடுவெங்கரி யுரிகொண்டகண் ணுதறன்கண நாதர்
வடுவின்றிய மணிதுன்றிய மானத்திடை வந்தே
விடுமின்க ளிவன்றன்னை யெனச்சென்று விலக்கக்
கொடுசென்றிடு நமதூதர் குறித்திங்கிவை சொலவார். (௩௦)

பொருடங்கிய மறைவாண ரொழுக்கம்புற நீத்திட்
டருடங்கிய வவைசொற்றவை யறிவின்றி முனிந்து
மருடங்கிய சூதாடிநல் விலைமாதை மணந்து
கருடங்கிய மனத்தான்சிவ னிர்மாலியங் கவர்ந்தான். (௩௧)

கருள்-இருள்.

உய்யும்வகை யேதிங்கிவ னுறுமிப்பவ மதனிற்
செய்யுந்தவ முளதோவெனச் சிவகங்குலி னுதாம்
பெய்யுந்தழ னிகர்வெம்பசி பெரிதாயெழத் துயினீத்
தெய்யுங்கணை மதனைச்சுடு மிறைதாளிணை கண்டான். (௩௨)

அடல்சேர்விடை யுடையானெதி ரவியுஞ்சுட ரதனை
மடல்சேர்மலர்க் கரத்தாலொளி வரத்தூண்டின னதனான்
மிடல்சேர்கொடு வினையாவையும் வீத்தான்றுயர் நீத்தான்
கடல்சேர்நெடு நிலமீதுயர் கலிங்கத்திறை யாவான். (௩௩)

என்றேசிவ கணநாத ரியம்பச்சமன் றூத
ரன்றேயவ ரடிபோற்றிநின் றருள்சேர்குண நிதிதோட்
குன்றேய்பிணி யவிழ்த்தங்குநீர் கொடுபோமென விடுத்துச்
சென்றேபுலிக் குழுவன்னவர் தென்றிக்கினி லுற்றார். (௩௪)

வேறு.

ஈச னன்பாக் காலையிற் குணநிதி யென்பவன் முகநோக்கிக்
காச ணிந்தபொன் முடிதரித் துயர்புகழ்க் கலிங்கநா டளிக்கின்ற

வாச மாலிகை யருந்தமன் மதலையா வளங்கொளுத் தமனென்னு
மாச கன்றபே ரொடுபிறந் திடுதியென் றறைந்தன ரகல்கின்றார். (௩௫)

அனைய னப்படிக் கலிங்கநாட் டிறைமக னாகிமுற் பவந்தன்னிற்
றனையு ணர்ந்துறத் தொடர்முதுக் குறைவினாற் சங்கரன் குலந்தோறுங்
கனைசெ ழுஞ்சுடர் நெய்விளக் கேற்றிநற் கடிமழ் நறுந்தூபம்
புனையு மாமலர் சாத்தியே யருச்சனை புரிந்தறம் பலசெய்தான். (௩௬)

குலந்தோறும்-கோயில்கடோறும்.

இன்ன வாறுபற் பலதினந் தருமங்க ளியற்றியா யிரஞ்சென்னிப்
பன்ன காதிபன் சுமந்தபார் புரந்துநீர் பட்டழிந் திடுமொக்கு
ளன்ன மானுடச் சட்டைநீத் துத்தரத் தளகைமா நகர்காக்கு
மன்ன னாகிவீற் றிருந்தனன் யாவரும் வந்தடி தொழுதேத்த. (௩௭)

மொக்குள் அன்ன-நீர்க்குமிழிபோன்ற.

சிலப கற்கழிந் திட்டபின் றெண்டிரை திரிவர நதிசூழ்ந்து
நலமி கத்தருங் காசியிற் சிவலிங்க நாட்டியர்ச் சனைசெய்தா
னிலகு பேரொளிச் சுடர்ப்பிழம் பாய்ச்சசி யிருத்திய சடைப்பெம்மான்
கலக வாள்விழி மலைமக ளோடுமக் கணத்தினில் வெளிப்பட்டான். (௩௮)

வரநதி-கங்காநதி. சசி-சந்திரன்.

உன்ன ருந்தவம் வியந்தனந் தனதநின் னுளத்தினில் விருப்புற்ற
தின்ன தென்றுரை தருதுமென் றுரைத்திட விரவியா யிரங்கோடி
துன்ன ருங்கதிர் விரித்துநின் றனையமெய்ச் சோதியுன் னுருக்காண
நன்ன லந்தரு கண்ணிணை கூசிடா நல்வரந் தருகென்றான். (௩௯)

காக்கு மாலயன் காணொணா வடிவவன் கட்புலங் கதுவுற்று
நோக்கு மாறருள் செய்தனன் றழலுமிழ் நுதல்விழிப் பெருமானும்
பூக்கு மாமலர் மணமெனப் பொருந்திய புனிதனை யெஞ்ஞான்று
நீக்கு மாறரி தாவுறை நிமலையைப் பார்த்திது நினைக்கின்றான். (௪௦)

தீது தீர்த்தருள் சிவன்றிரு மேனியிற் செறிந்துறைந் திடமுன்னாள்
யாது நற்றவ மியற்றின ளிவளென வெண்ணிநோக் குறவெற்பின்
மாது ளங்கறுத் திட்டன ளோர்விழி மறைந்ததங் கவற்கந்நா
ளோது மாமறை யளவிடற் கரியவ னுமையவட் கிவைசொல்வான். (௪௧)

ஊறி னின்றவப் பெருமையை வியந்துளத் துவந்தன னினைக்கின்றான்
வேறி வன்புரி தவறிலை முனியலை விழியிவற் கருளென்னச்
சீறி வெம்பொறிக் கனலெனக் கனன்றுதன் சிந்தையுற் றெழுங்கோப
மாறி யம்பிகை யம்புகம் வழங்கினள் பொற்கண்ணாய் வயங்கிற்றால். (௪௨)

விழியி ழந்தது பெற்றபி னியக்கர்தம் வேந்தனும் வியப்போடவ்
வழியி ளம்பிறை முடித்தருள் சடாடவி யுடைவிடைக் கொடியோனை
கழிவ ருங்கயன் மருட்டுவாட் டடநெடுங் கட்கவு ரியைவேரி
பொழிசெ ழுந்துண ரிலைறத்தநற் றுதிபல புகழ்ந்துவீழ்ந் தெழுகின்றான். ( )

மன்று ணட்டமே புரியரன் கைகளான் மற்றவ னுடறைவந் (ற்
தின்று தொட்டுநீ யென்னுடைத் தோழனாயி ருத்தியென் றிசைத்தான்பொ

குன்று கிட்டிய தனநிதிப் பெருக்கொடு குலவுபுட் பகம்பெற்றே
யன்று தொட்டவ னளகைமா நகரர சளித்தவ ணிருக்கின்றான். (சச)

இன்ப மார்சிவ நிசியினின் மாலிய மெடுத்தருந் திடற்கீசன்
முன்ப விந்திடு விளக்கினைத் தூண்டிய முற்பய னதனாலே
நன்பு வித்தல மரசளித் தளகைமா நகர்தனக் கிறையாகிப்
பின்ப ரன்றனைப் பிரிந்திடாத் தோழமைப் பெருமையும் பெறலுற்றான். ()

சேற்றி னார்செழுந் தாமரைக் கண்ணனுந் தேடருஞ் சிவன்மெய்யி
னீற்றி னன்றிருக் கோயிலி னுயர்சிவ நிசிகளி னெய்த்தீப
மேற்றி னார்பெறும் பேற்றினை விரித்தெடுத் தியம்பவேண் டிடிலெண்க
ணாற்றி சாமுகம் படைத்தருள் விரிஞ்சனு நவின்றிடற் கரிதாமால். (சசு)

அன்றி யெண்ணிரண் டாமுப சாரத்திற் கடுத்தவை யந்நாளிற்
குன்றி யத்துணை யீயினு மாயிர கோடியாய்ப் பலனல்கு
மென்றி ருட்குறும் பறவெறி கனைசுட ரிரவிசெங் கதிரென்னத்
துன்றி ருஞ்சடைத் துறவர்கேட் டுவப்புறச் சூதனுண் டுரைசெய்தான். ()

குன்றியத்துணை-குன்றிமணியளவு.

குபேரச்சருக்கமுற்றிற்று.

ஆகவிருத்தம் சுஎடு.

---

# சாலிகோத்திரச்சருக்கம்.

கழனிமலை கயல்கள்வள்ளைக் கொடிகுதிப்ப தெனக்குழைபாய் கருங்கட் பைந்தார்க், குழனிமலை முலையமுத மணமிறைவாய் கமழமுத்தங் கொடுப்போன் போரி, னழனிமலை கடக்கரிதென் றருக்கனுளந் தடுமாற வவுணர்க் கொன்று, பழனிமலை குடிபுகுந்த பகவனிரு சரணமலர் பரவி வாழ்வாம்.

கழனிமலை-வயலிற்பொருகின்ற. குழை-தோடு. குழல் நிமலை-கூந்தலுடைய உமாதேவியினது. அழனிமலை-(உடற்குறைப்)பிணமலை.

அங்கிராப் பிருகுவிட பன்றதீசி யத்திரிகா சிபன்சு பேதன்
பங்கமில்வான் மீகிசர பங்கன்சா பாலியருட் பரத்து வாசன்
றுங்கமுறு புலத்தியனற் சுசீலனா ரதன்மரிசி சுகன்மார்க் கண்ட
னெங்குமிசை பெறுசனகன் முற்கலன்முற் படுமுனிவ ரிவர்கள் யாரும். ()

பாடளிக்கு மதுவளிக்கும் பசுந்துளவோன் முதலமரர் படிவர் யார்க்குங்
கேடளிக்க வருங்கடவுண் டவனருள்சேர் சூதன்முகங் கிளர நோக்கிப்
பீடளிக்குந் தவமுனிவ சிவநிசிநோற் றவர்க்கிறந்த பின்பே ரின்ப
வீடளிப்ப தன்றியிகம் விழைந்தனவு மளிக்குமோ விளம்பு கென்றார். (௩)

அரவுமதி முடித்தசடை யானிரவிற் கண்படைநீத் தருச்சித் தானல்
குரவுதகள் படுத்திநெடு நிலத்தின்மிகு செல்வமெலாங் கொடுக்கு மைந்தாய்
விரவுகொலை முதற்பாவ வல்வினையின் வேர்பிடுங்கி வீடு நல்கும்
பரவுமிதி னிகழ்காதை யொன்றுளதென் றுயர்சூதன் பகர்வ தானான். (ச)

காலிகோத் திரத்தியல்பிற் புரந்தாளுங் கண்ணன்முதல் கருதற் கொண்ணாத், சூலிகோத் திரத்தவர்கொண் டெயிலொருமூன் றழற்களித்த தொல்லோன் றிங்கண், மோலிகோத் திரவருளே பெறவேண்டி யறையுமறை முறையி னின்றோன், சாலிகோத் திரனெனப்பேர் தரித்துடையா னொருவனுளன் றவத்தின் மிக்கோன், (ரு)

காலி-பசுக்கூட்டம். கோத்திரத்துஇயல்பில்-குலாசாரப்படி. முதல்-அடிகள். சூலி-சூலாயுதமுடையவர். கோத்திரத்தவர்-மலையாகியவில். திங்கள்மோலிகோ-சந்திரசேகரநாதர். திர-நிலையான,

வேதியர்தங் குலத்திலுயர் விண்மணிகண் மணியெனவே விளங்கும்வேத
மோதியுணர்ந் தறிவரிய கலைக்கடலின் கரைகடந்திட் டுயர்நூல் வல்ல
வாதியரை வென்றுசந்தி வந்தனைகண் முப்பொழுதும் வழுவா தாற்றிச்
சாதிமுறை தவறும னீதியுட னெடிதுதினஞ் சரிக்கு நாளில், (சு)

வம்பவிழுங் குழன்மனைவி மக்கள்சுற்ற முதற்குடும்ப மலியு நாளுஞ், செம்பவள வீதழ்க்கமலை திருக்கடைக்க ணோக்கமின்றிச் சிறுமை யெய்த, வெம்பரம னருளிதுவோ வென்செய்வே னென்னமனத் தெண்ணித் தென்பாற், கும்பமுனி வரனிருக்கு மிடந்தேடிச் செல்வனெனக் குறித்துக் கொண்டே, (எ)

தடங்கரைகொண் டிரங்குதிரை சுருட்டியெறிந் திடும்பெருநீர்ச் சலதியேழுங், குடங்கையினிற் கொண்டுமுதற் குடித்தகுறு முனிவனடி குறுகிப் போற்றி, விடங்கலுழ்பற் பணிவாயி லகப்படுமண் டூகமென மிடிவாய்ப் பட்டேன், றிடங்கொடுளந் தேறியுய்யும் படியடியேற் குனதருட்கண் செய்தி யென்றான். (அ)

ஆங்கவனு முளத்தருள்கூர்ந் தந்தணனை முகநோக்கி யவனி மீதிற்
றீங்ககற்றுஞ் சிவவிரதத் திடில்வறுமைப் பெருங்கடலின் றீரங் காண்பாய்
பூங்கமலத் தயனுலும் புகலரிய போகமெல்லாம் புசித்துப் பின்னர்
நீங்கரிய சிவபதமும் பெறுவாயென் றுறுதியுட னிகழ்த்தி னானால். (க)

அனையசிவ விரதநோற்கு முறைமறையா கமப்படிநீ யடிய னேனுக்
கினையபரி செனவிரித்தீண் டியம்புகென விருக்குமுன்னு வியம்பும் வேதந்
தனையுணருங் குடத்தனய னவ்விரதந் தனைநோற்குந் தன்மை யெல்லாஞ்
சனைகடலுண் டருடிருவாய் மலர்ந்தவனுட் புலங்களிக்கக் கழறிப் பின்னும்,

குடத்தனயன்-கும்போற்பவன் (அகத்தியன்.)

பொன்னிலமே வியபுலவர் புகழ்விரத மிதனிலைமை புகலற் பாற்றோ
வெந்நிலமுந் தொழத்தகுநற் றலத்திலிருந் திவ்விரத மியற்ற லுற்றோ
னன்னிலவித் தெனவோங்கிச் சின்னாளிற் பெரிதுபய னல்கு மென்ன
வுந்நிலமு மெனக்கறியச் சொல்லுதிநல் லோதிபயி லறிஞ வென்றான், (கக)

புலவர்-தேவர். ஓதி-ஞானம்.

சீதவனம் பொழியுமிருட் கொண்டனிறங் கொண்டிடுமெய்ச் செய்ய செங்கண், மாதவனம் புயன்றவள வாரணத்தின் வருமகவான் வானில் வானோர், பாதவன சம்பரவ வுமையாளோ டமையாளும் பரமன் வைகும், வேதவன மென்றுலகி லொன்றுளதங் கதன்றகைமையார் விரிக்க வல்லார்.(கஉ)

சீதவனம்-குளிர்நீர், பாதவனசம்-பாததாமரை,

முன்னுருவம் பலவெடுத்து முயன்றுசெய்தீ வினைக்கிழங்கே மூலமாகப்
பின்னுருவ மெடுத்துழலும் பித்தருமத் தலத்திறக்கப் பெற்ற ரென்னிற்
பொன்னுருவச் சடாமௌலிப் புனிதன்று ரகப்பிரமம் போதித் தாதித்
தன்னுருவந் தருவதனு லத்தலத்துக் கிணைபுகலச் சரிவே றுண்டோ. (கங)

தாரகம்-பிரணவம்.

பொன்னிமுத னதிப்புனல்பாய் புலவுகமழ் கடற்றீரப் புளினந் தோறுங்
கன்னியிளம் பெடையொடனங் கலந்துவளங் காட்டுமெறைக் காட்டுவேணிச்
சென்னிதனின் மதிமுடித்த சிவபெருமான் சந்நிதியிற் றிருமுன் னாக
வன்னிமர மொன்றுளதாங் கடியர்வினைக் காடுசுடும் வன்னி யாமால். (கச)

தீரம்-கரை. புளினம்-மணற்குன்று. வன்னியாம்-நெருப்பாம்.

விண்ணவர்பூ சனைபுரியா மறையொழுக்கம் வழுக்கியவே தியர்கோல் கோடி
மண்ணவரை வருத்துகின்ற மன்னர்நெறி பிழைத்தொழுகும் வணிகர் முன்
வெண்ணவரும் பின்னவர்சங் கரசாதி யரிவையர்மற் றிவரீ றாகப் (னு
பண்ணவர்நா டெனத்தருமத் தலமேவும் பொழுதெந்தப் பதகரேனும்.(கரு)

பண்ணவர்-தேவர்.

சிறையுறுமிப் பிறவியெனும் பிணிக்குடைந்தீர் வம்மினது தீர்ப்பன் யானென், றறைபறையிற் கறங்குதிரை மறைநதிக்க ணடைந்துகுடைந் தாடிக் கோடித், துறையதனிற் படிந்துமுதற் சுருதிதொட்ட வாரிதனிற் றோய்ந்து தொன்னூன், முறைவழுவா துன்னிமணி கன்னிகையிற் றுன்னியந்நீர் மூழ்கி யேறி. (கசு)

மறைநதி-வேதநதி. கோடித்துறை-கோடிநதி ஆதிசேதுவென்றும்பெயர். சுருதிதொட்டவாரி-வேதாமிர்ததீர்த்தம்.

விடமுனிய வருமமையத் திமையவர்க்கா வுண்டுவட விண்டு பண்டு (ற்றிற்
தடமுனியிற் குனித்துநகைத் தெயிலொருமூன் றழற்களித்த தலைவற் போ
றிடமுனிய பொருளனைத்துஞ் சித்தியுற முத்தியினுஞ் சேர்வ ரென்றே
குடமுனிவன் சுருதிவனப் பெருமை யெல்லா மவற்கறியக் கூறிப் பின்னும்.

வடவிண்டு மேருமலை. முனியில்-வில்லாக. முன்னிய முனியவென்றாயிற்று.

அத்தலமா ரூர்காசி யம்பலமற் றெவற்றினுக்கு மதிக மென்றே
முத்தலமும் புகழவரு முனிவரனை வருமொழிந்தார் மொழியாநின்ற
வெத்தலமு மதிக்குமிந்தத் தலத்திலிருந் திவ்விரத மியற்றிற் சித்தி (ர்.
கைத்தலத்தில் வைத்தநெல்லிக் கனிபோலக் காண்டியெனக் கழறிப் பின்ன

நல்வலனை யதனமலை நங்கையொடு கிராதவுரு நண்ணிக் கானிற்
செல்வலனை வருங்கரண வெல்வலருச் சுனனையெனச் செயிர்த்துப் போர்
மல்வலனை யுளத்திருத்தி மறைவலனும் வாதாவி மடியச் சீறி (செய்
வில்வலனை முனிந்தமுனி விடைகொடுப்ப மறைசைநகர் மேவ லுற்றான்.()

நல் வல் அனைய தனமலை-அழகிய சூதாடுகுமிழ்போன்ற தனமாகியமலை. கிராத உரு-வேட்டுவக்கோலம். மல் வலனை-மற்போர்வல்லவனை (ஈசனை.) முனி-அகத்தியமுனி.

உற்றவனுற் றிடும்புனித தீர்த்தமெலாம் படிந்தாடி யுயர்பொற் கோவில்
சுற்றிவலம் வந்துகொற்ற வீரகத்திச் சேதகன்று டொழுது முன்னு

னற்றமிஞ்ன் மறைநறைப்போ தாலருச்சித் தருளிறைசே வடிகள் போற்றிக்
குற்றமில்யா ழைப்பழித்த மொழியம்மை நூபுரத்தாள் கும்பிட் டேத்தி. ()

நூபுரம்-சிலம்பு.

ஒருபொருளை யுணர்ந்திருகண் பனிதூங்க மூப்பொழுது முயர்நால்வே தந், தருபொருளா மஞ்செழுத்தை நெஞ்சமுத்தி யறுதொழிலோர் தலைவன் பாரில், வருபொருளா ருயிரனைத்தும படைத்தளிக்குந் தன்மையினன் மண்ணோர் விண்ணோ, ரிருபொருளென் றிடுமயன்மாற் கெட்டாத பதம்பெறுவா னிதயத் தெண்ணி. (உக)

அறுதொழிலோர்தலைவன்-பிராமணசிரேட்டன்.

சிவநிசியாஞ் சதுர்த்தசியிற் றிங்கடொறுந் துயிலுணவு சிறிது மின்றித்
தவமுயல்வா னீராடி வில்வமுடன் கந்தமலர் சந்தஞ் சாத்திப்
பவமறமந் திரநவின்று பரிந்துநிவே தனம்புரிந்து பாடி யாடி
நவநவமாச் சிவபூசை நாலுயா மமுமுடித்து நடத்து நாளில். (உஉ)

நவ நவமா-புதிதுபுதிதாக.

சூடுடைய தலைச்சேவற் றுவசனைப்பெற் றெடுத்தவிடைத் துவசன் பொற்று
ளேடுடைய மணிக்கமலத் திருத்தியருச் சித்திடுமோ ரிரவி லுப்பண்
கோடுடைய கயிலைநடை கொண்டனைய வெள்விடைமேற் கொண்டு கூந்தற்
காடுடைய மலைமகளோ டெதிர்நின்றான் மற்றவன்கண் களிக்க மன்னோ. ()

பிறைகாட்டுஞ் சடைமுடியும் பிரமரங்கா மரமூரன்று பிரச மாந்த
நறைகாட்டுங் கொன்றையந்தா ரணிந்திலகு திருமார்பு நயன மூன்றுங்
கறைகாட்டுங் கந்தரமு மந்தரத்தின் புயநான்குங் கண்டு முத்தித்
துறைகாட்டுங் கடற்றீரச் சுருதிவனத் திறைவனடி துதித்தல் செய்வான்.()

பிரமரம்-வண்டு. பிரசம்-தேன். கந்தரம்-கழுத்து.

வேறு.

களக்கோலவல் விடமுண்டருள் களத்தாய்கவின் றருஞ்சா
மளக்கோமளத் திருமேனிகொண் மலைமாதின் மணாளா
தளக்கோகந தக்கண்ணினன் றருவேடனைச் சுடுதீக்
குளக்கோவுடை யானேகுறிக் குங்கோவுடை யானே. (உரு)

களம்-கருமை. சாமளம்-பச்சைநிறம். கோமளம்-இளமை. தளம் கோகநதம் கண்ணினன் தரு வேள் தனை-இதழுடைய தாமரைப்பூங்கண்ணனாகிய விஷ்ணு பெற்ற மன்மதனை. குளக்கோ-நெற்றிக்கண். குறிக்கும் கோ உடையான்-எழுதிய இடபக்கொடியுடையவர். சுட்டப்படுந்திக்கை உடையாகத்தரித்தவர்.

சுடுஞ்சூகரத் தடிமென்றுறு சுவைகண்டவை யுதவுங்
கடுங்கானவர் குலந்தோன்றிய கண்ணப்பனை யாண்டாய்
தொடுங்காய்கணை யெனமால்வரைத் துன்னார்புர மூன்று
ளடுங்கார்முகத் தானேயொரைந் தழகார்முகத் தானே. (உசு)

சூகரத் தடி-பன்றிஇறைச்சி. கார்முகம்-வில்.

சம்புக்கிளை கிளையின்கிளை தாருய்வர மீனார்
மொய்ம்புற்றிடு கொடிமன்னவன் முன்னேசொடு வந்தா

யம்புற்றநன் முடியாய்விற லரிதேடரு மடியாய்
கம்புக்குழை யானேகயக் கம்புக்குழை யானே. (உஎ)

சம்புக்கிளை-நரிக்கூட்டம். கிள்ளையின்கிளை-குதிரைக்கூட்டம். மன்னவன்-அரிமர்த்தனபாண்டியன். அம்பு-கங்காசலம். கம்புக்குழையான்-சங்கக்குண்டலக்காதினர். கயக்கம் புக்கு உழையான்-பாடுபட்டுவருந்ாதவர்.

ஈரக்குளிர்ப் புனல்வைகையி னிடியுங்கரை நொடியிற்
றூரச்சொரி மண்கூடை சுமந்தேயடி பட்டாய்
கோரச்சின மிக்காகிய கொக்கின்சிறை யக்கி
ஞாரச்சடை யானேநினை யாரச்சடை யானே. (உஅ)

அரகின் ஆரம்-என்புமாலை. நினையார் அச்சு அடையான்- தியானிக்காதவருடைய ஆன்மாவில் அணுகாதவர்.

கலைமாமறை யயனீறுறு கற்பந்தொறு நல்குந்
தலைமாலை புனைந்தாய்வட தருநீழ லிருந்தாய்
கொலையார்கதி ராழிப்படை கொண்டேசலந் தரனை
மலைமாதிடத் தானேயிம மலைமாதிடத் தானே. ௯)

வடதரு-ஆல்விருக்ஷம். ஆழிப்படை-சக்கிராயுதம். மலை மாதிடருதபெருவலிமையுடையவர். இமமலை மாது இடத்தான்-இமயமலைகத்திருக்கப்பெற்றவர்.

சிலைத்தூண்டனி லுதித்தோங்கிமண் டிகைத்தேங்கமுன் சிரித்தே
யுலைத்தாண்டுபொன் னிறத்தீயவ னுடற்கீண்டிடு மரியை
யலைத்தாங்குயிர் கொளச்சிம்புள தானயயி லார்முத்
தலைத்தானயி ஞனேபுலித் தலைத்தானயி ஞனே. (௯0)

சிலைத்தூண்-கற்றூண். பொன்நிறத்தீயவன்-கொடிய இரணியன். அரியை-நரசிங்கத்தை. சிம்புள்-சரபம். முத்தலைத்தானயினுன்-முக்கவரான சூலாயுதமுடையவர். புலித் தலைத் தானயினுன்-தலைபொருந்திய புலித்தோலை உடையாகத்தரித்தவர்

பணைப்பாம்பரைப் பரவைக்குநம் பரவைப்பெரு விரக
முணர்த்தாங்கென விடுஞ்சுந்தரற் கொருசந்து நடந்தாய்
மணப்பூந்துகள் குடைந்தூதிமை வரிவண்டிமிர் மதலைத்
துணர்ப்பூங்கணி யானேதொழுந் தொண்டர்க்கணி யானே. (௯க)

பணம்-படம். பரவைப் பெரு விரகம்-கடலனையபெருமயக்கம். சந்து-தூது. மதலை-கொன்றை. கண்ணியான்-மாலையையுடையவர். தொண்டர்க்கு அணியான்-அடியார்க்குச்சமீபமாகுவோர்.

சுதைக்கும்பநன் முலைமாதரொ் துசடர்புவிச் சுரரை
வதைக்கும்பழி தனைமாற்றிடு மணிகன்னிகை யுடையாய்
பதைக்கும்படி யடலார்கொடும் பகடேர்சமன் மருமத்
துதைக்குங்கழ லானேகரத் தொளிர்பொங்கழ லானே. (௯உ)

சுதைக்கும்பம்-அமுதகுடம். புவிச்சுரர்-பிராமணர். பகடு-எருமைக்கடா. மருமம்-மார்பு.

சலத்தான்மிகுங் கொடியோனிசை தருவீணையின் கொடியோன்
புலத்தார்கரி யிருநான்குடன் பொருதன்றடல் புரியு

மூலத்தோடலை நெரிபட்டிர னூட்கும்படி யூன்று
மலர்க்கானகத் தானேதிரு மறைக்கானகத் தானே. (கூஙு)

கொடியோன்-இராவணன். உலம்-திரண்டகல் தோள் தலை என்றுபிரிக்க. மலர் கால் நகத்தான் என்றுபிரிக்க. மறைக்கானகத்தான்-வேதாரணியத்தர்.

துன்பந்தரு பிறவிப்பிணி தொலையும்படி நிலையர்
முன்பங்கியி னிழுதிட்டென வகநெக்குரு கிப்பூ
நன்பங்கய நிகர்நின்பத நாளுந்தொழு மடியார்க்
கின்பந்தரும் பித்தாவர மெனைநீவிரும் பித்தா. (கூச)

இழுது-நெய். விரும்பி தா என்றுபிரிக்க.

வேறு.

என்றுபல துதிகூறி யானந்த மிகுந்துபுன லிருகண் சோரத், துன்று மயிர்ப் புளகமெழப் பரவசனாய் வீழ்ந்தெழுந்து துள்ளி யாடித், தன்றுணைச் செங் கரங்கூப்பி முடியில்வைத்துப் படியினின்றோன் றன்னை நோக்கிக், கன்றுசினக் கருங்காலன் றனையுதைத்த செங்காலன் கழறு மன்றே. (கூரு)

உவரிவளை நெடுநிலத்தி லுடற்கணிலா கண்டலன்போ லுவப்பி னோடுந் தவரிதழ்வாய் மனைவிமகார் சூழமிகு போகமெலாந் துய்த்துக் கற்றைக் கவரிசிலை புடையிரட்டக் கணங்களெதிர் கொண்டழைப்பக் காய நீத்துத் தவரிதய மெனவிளங்குங் கயிலைமலை வருதியெனச் சாற்றிப் போனான். ()

உடல் கண் இல் ஆகண்டலன்-சரீரத்திற்கண்களில்லாத இந்திரன். தவர் இதயம் என-முனிவருளம்போல (மாசற்று).

அன்றுமுத லளகைநகர்க் கதிபதிபோ னிதிபலபெற் றவனி மீதிற் றுன்றுபல போகமெலாந் துய்த்துநெடு நாட்கழித்துத் துதித்து வானோர் நின்றுதொழப் பதஞ்சலியும் புலிமுனியுங் காணநித்த நிருத்தந் தில்லை மன்றுதனி லாடியபொற் பூவடிவாஞ் சேவடியின் மருவி னானே. (கூஎ)

ஈதுமுத னிகழ்காதை யாரேனுஞ் சிவநிசிநோற் றிடுவோர் பேறிங் கோதுவதெ னுளத்தில்விழைந் தனபெறுவ ருலகமதி னுடலம் விட்டாற் றுருதவிழ்பூங் கொன்றையந்தார்ச் சடைமுடியோ னிருசரணஞ் சார்வரென் றூதமுனி வரன்முனிவ ரனைவருங்கேட் டுளமகிழச் சொன்னான் மன்னோ.

வேறு.

வாழி மாதவர் வாழி மனுநெறி
வாழி மாநிலம் வாழிநல் லானினம்
வாழி நான்மறை வாழி மழைமுகில்
வாழி வைதிக சைவ வழக்கமே. (கூகூ)

சாலிகோத்திரச்சருக்கமுற்றிற்று.

ஆகவிருத்தம் எகச.

---

# சிவராத்திரிபுராணம்
## முற்றிற்று

---

புலோலிநகர்

பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்கள்

இயற்றிய

# பாயிரம்.

## ஆசிரியப்பா.

திருவளர் காசித் தெய்வமா தலநின்
றுருவளர் சுன்னையா முயர்பதி வாழ்வுசூர்
மறையவர் குலத்து வரதரா சப்பே
ரறைகவி ராச னருட்கதி ரேசன்
கருணைபெற் றுயர்ந்தோன் கருதுஞ் சிவநிசி
வருமுறை நோன்பின் மகிமைமாண் பயன்கள்
விதிமுறை நோற்றோர் மேன்மைக ளியாவு
நிதியெனத் திரட்டியிந் நீணிலத் துள்ளோ
ரேவரு முணர்தர வினியசெந் தமிழாற்
பாவலர் மதிப்பப் பகர்சிவ ராத்திரி
புராணஞ் சொன்னயம் பொருணய மலிந்து
விராவுசை வர்க்கு வேண்டிய தொன்று
மின்றி யமையா வியல்பின தாதலிற்
றுன்றிய வழுவறத் துணிவரு மருஞ்சொற்
றெளிவுற விளங்கச் செய்திநீ யெனவே
யொளிர்வுறு புலோலி யுற்றமேல் பாலிற்
சைவநல் வித்தியா சாலை யதிபதி
மெய்வரு செல்வச் சிதம்பரப் பிள்ளையாங்
கலைஞனுஞ் சர்வ கச்சேரி யெனுமூர்
மலைவறு சீர்நா மகள்விலா சப்பேர்ப்
புத்தக சாலைப் பொருவின்மூத் ததம்பி
வர்த்தக முதல்வனும் வருத்தவா றியற்றிச்
செவ்விதிற் பிரசரஞ் செய்தனன் புலோலித்
திவ்விய நகரிற் சிவனருட் பேற்றால்
வளர்வட நூல்சில வண்டமிழ் நூன்மிக
வுளமய றவிர வுய்த்துணர் புனிதன்
சொற்பெயர்க் குமார சுவாமிப் புலவன்
நற்பெரும் புகழுறீஇ நயந்துவா ழியவே.